தட்சிணாமூர்த்தி

DAKSHINAMURTI

दक्षिणामूर्ति

பாகம்] [இரண்டு



திருவாவடுதுறை ஆதீனம் - 1991



சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்திரண்டாவது குரு மகாசந்நிதானம்

அருள்திரு அம்பலவாண தேசிக மூர்த்திகள்

எட்டாவது ஆண்டுக் குருபூசை விழாமலர்

9 — 4 — 1991

திருவள்ளுவர் ஆண்டு 2022

மெய்கண்டார் ஆண்டு 768 பிரமோதூத-பங்குனி-26உ



தட்சிணாமூர்த்தி

DAKSHINAMURTI

दक्षिणामूर्ति



திருவாவடுதுறை ஆதீனம்

வெளியீடு எண் : 392

தட்சிணமூர்த்தி

(ஆகமம் & சில்பம் - பிற்பகுதி)

DAKSHINAMURTI

(AGAMAM & SILPAM)

II nd Part



இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்துமூன்றுவது குரு மகாசந்நிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளியிடப்பெற்றது.



திருவாவடுதுறை ஆதீனம்

1991

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
டயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

ஸ்ரீ மாதவச்சிவஞான முனிவர்.



திருவாவடுதுறை ஆதீனம்
குருமுதல்வர் அருள்திரு நமச்சிவாயமூர்த்திகள்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்திரண்டாவது குரு மகாசந்நிதானம்

ஸ்ரீ அம்பலவாணதேசிக மூர்த்திகள்

(சிவப்பேறு பங்குனி திருவோணம்)

உரிமைப் பதிப்பு ;

விலை ரூ 30-00

ஆக்கியோன் :

S. நாராயணசுவாமி, எம். ஏ., பி. எட்.,

திருவிடைமருதூர்.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்

— திருவாவடுதுறை. —

எடுத்தாண்ட நூல்கள்

1. சிவபராக்கிரமம்
2. திருமுறைகள்
3. பிரதிமாலட்சணம்
4. காசீப சில்பரத்னம்
5. காமிகம்
6. காரணம்
7. அஜிதம்
8. ரௌரவம்
9. தட்சிணமூர்த்தி உபநிஷத்
10. ,, மந்திரம்
11. ,, திரிசதி
12. ,, சகஸ்ரநாமம்
13. மந்திர சாரம்
14. மந்திரசார சாரசங்கிரகம்
15. சிவத்தலங்களின் வரலாறு
16. துறைசை ஆதீனக் கையெழுத்துப் பிரதிகள்
17. கலைக்களஞ்சியம்
18. தென்னிந்திய சிவவடிவங்கள்
19. சிவமூர்த்தங்கள்
20. தமிழகச்சிற்ப ஓவியம்
21. கவின்மிகு கலைகள்
22. மயிலை கும்பாபிஷேகமலர்
23. மெய்கண்டார் - திங்களிதழ்
24. தட்சிணமூர்த்தி பத்ததி
25. சிற்பமும் கலைவாழ்வும்
26. இந்து சமய கடவுள்களின் திருவுருவங்கள்
27. சகலாகமசார சங்கிரகம்
28. தட்சிணபிஷேக கிரமம்
29. தினமணி - ஞாயிறு சுடர்
30. தென்னிந்திய கல்வெட்டுச் சாசனங்கள்.
31. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்
32. Indian Architecture
38. Temple of south India
34. Mahabalipuram
35. Frech Indology Books
36. Elements of Hindu Iconography
37. Dakshinamurti puja
38. Art of south India
39. Nolamba sevlpture
40. Heritage of the Tamils temple arts,
41. Temple cars of medieval Tamilaham
42. Temple gateways in south India
43. Iconography of south India
44. Diyana Ratnavali
45. Hindu Icongraphy - by Gobinatha Rao

INTRODUCTION

The Siva worship is universal. The Lord siva means allround welfare. The vedas, the Puranas, the Agamas, the Thirumurai - all these extole Lord siva in many ways.

A treatise called "Sivaparakramam" describes more or less 64 different forms of this omnipresent Lord siva. Out of these 25 Siva murthas, only one taken to be very important. These 25 Siva murthas have orginated from the five faces of Lord Sadhasiva. Out of these - that which is a personification of knowledge of wisdom is called Dakshinamurti. This Dakshinamurti came out of one of the five faces of Sadhasiva called Agoramurthy.

This Dakshinamurti, preceptor God, can be seen on the southern ghosta of all Siva temples and also on the gopuras, vimanas and prakaras in different aspects.

This is the 2nd part of the book Dakshinamurthi published in the year 1991. The word Dakshinamurti denotes the Devine wisdom. This preceptor God Dakshinamurti, who reveals to His worshippers or bhaktas the ultimate truth of Saiva Siddhantha is praised in the Sangam literature as " the God that has His abode under the banian tree ".

The eternal dance of Lord Siva is the peak of Anandha or Bliss. This truth is personified by the Lord Nataraja. This is explained to us by the idole Dakshinamurti. This

second part of the book on Dakshinamurti deals with the various forms (hither to unknown) and also about rules and regulations of the prethistai of the idol.

In addition we have included in the book the sthothras, Ashtotharas, Sahasranamams, Thrisadhi of Lord Dakshinamurti. Inscriptions, palms leaves, wooden plants and screens in which are found the various figures of Dakshinamurti are also included in this book.

On top all these, this book is published with the blessings of His-Holiness Sivapprakasa Pandarasannithi Avargal the 23rd Guru mahasannithanam of Thiruvavaduthurai Adeenam. Who has dedicated his life for the uplift of the Tamil language, temples and the saivism. I pray the Golden Feet of His - Holiness Guru mahasannidhanam who had ordered me to bringout this book, on the Panguni Thiruvonam Gurupooja Day.

S. NARAYANASWAMY. M. A., B. Ed.,
T. A. A. D MIDDLE SCHOOL,
THIRUVIDAIMARUDUR.

முன்னுரை

' ஆட்டுவிப்பாய் நீயீனைக்கீ(டு) அவ்வீனையும் நீதானே
ஈட்டுவிப்பாய் யென்ன இசைத்தீடுவ்(து) எத்தாலோ
காட்டு விப்பாய் பொய்அகலக் காண்பார்க்கு நின்னேஇன்பாய்
ஊட்டு விப்பாய் ஆவடுதண் துறைநமச்சி வாயனே. ''

— ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பண்டார சாத்திரம்
நமசிவாயமாலை

எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற சிவபெருமான் அடியவர்களுக்கு உற்ற துயர் நீக்கி நிறைவளம் பொழிந்து அருள் பாலிக்கும் பொருட்டுப் பல்வேறு மூர்த்தங்களை மேற்கொள்கிறான். சிவபராக்கிரமம் எனும் நூல் சிவபெருமானின் 64 திருவுருவங்களை எடுத்து இயம்புகிறது. இச்சிவமூர்த்தங்கள் பல்வேறு சமயங்களில் அடியார்கள் உய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டவை ஆகும்.

தட்சிணம் என்ற சொல்லுக்கு '' ஞானம் '' என்பது பொருள். சனகாதி முனிவர் நால்வர்க்கும் ஞானநிலையினை உணர்த்தும் பொருட்டு மேற்கொள்ளப் பெற்ற மூர்த்தமே தட்சிணமூர்த்தி ஆகும். ஆதீன வெளியீடாகிய தட்சிணமூர்த்தி முதற்பாக நூலில் அருங்கருத்துக்கள் பலவற்றை அடியேன் தொகுத்துக் கூறியுள்ளேன். தட்சிணமூர்த்தி இரண்டாம் பாகமாகிய இந்நூலில் சிறப்புமிக்க பல்வேறு வகையான உருவ அமைப்புகளும், காமிகம் முதலான ஆகமங்கள், உபநிஷத்துக்கள், பிரதிமாலட்சணம் முதலான நூல்களில் காணப்படும் பல அருங்கருத்துக்களும் இடம் பெறுகின்றன. மேலும் தட்சிணமூர்த்தி அஷ்டோத்ரம், திரிசதி, சகஸ்ரநாமம், தோத்திரங்கள் மற்றும் பிரதிட்டை விதிகள் முதலியனவும் விரிவான செய்திகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

1990 – ஆம் ஆண்டு '' தட்சிணமூர்த்தி '' முதற்பாக நூல் வெளிவந்த போது அடியேனுக்கு ஊக்கமளித்து அருளாசி வழங்கியருளிய சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் அவர்கள் ' தட்சிண

மூர்த்திப் பிரதிட்டா விதி, நாமாவளி பிரதிமாலட்சணம், ஆகமங்களில் காணப்படும் பல நிலைகளில் உள்ள ஞான மூர்த்தியின் திருவடிவங்கள் ஆகிய பல்வேறு செய்திகளையும் தொகுத்துத் தனி நூலாக வெளியிடுக' என்று அடியேனுக்கு அருளாணையிட்டருளினர்கள்.

சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் அவர்கள் அருள் ஆணையினைச் சிரமேற்கொண்டு அருள்திரு நமசிவாய மூர்த்திகளின் திருவடிகளைத் தொழுதும் சிந்தித்தும் இந்த நூலினை எழுத முற்படலானேன்.

சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர செந்தமிழ்ப் பரிபாலனம் செய்து ஞானச்செங்கோல் செலுத்தியருளும் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 23-வது குருமகாசந்நிதானம் சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள் ஒன்றுக்கும் பற்றுத எளியேனையும் ஒரு பொருளாகக் கொண்டு இப்பணியில் ஈடுபடுத்தி ஆக்கமும் ஊக்கமும் வழங்கியருளும் அளப்பருங்கருணைக்கு அடியேன் மனம்மொழி மெய்களாலாகிய வணக்கங்களை எழு பிறப்பும் செலுத்துங் கடப்பாடுடையேன்.

இந்நூலினை எழுதுவதற்கு அடியேனுக்கு ஊக்கம் வழங்கி எழுதியவைகளுள் அவ்வப்போது வேண்டும் திருத்தங்களும் செய்து உதவி அருளிய இவ்வாதீனத்தின் முனிபுங்கவராகிய புலவர். தவத்திரு சுயம்புநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும்; திருவிடைமருதூரில் இயங்கி வரும் ஆதீனம் மேனிலைப்பள்ளியிலிருந்து ஓய்வு பெற்ற சமஸ்கிருத ஆசிரியர் சிரோன்மணி S. வைத்தியநாத ஐயர், திருவிடைமருதூர் ஆதீனம் நடுநிலைப்பள்ளி முன்னாள் தலைமை ஆசிரியர் S. சிவஞானம், ஆதீனச்சமயப்பிரசாரகர் சென்னை ஆங்கிரேஸ S. வேங்கடேச சர்மா, முதலிய பெரியோர்களுக்கும் எனது பணிவான வணக்கங்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் இயற்றுவது தொடர்பாக பல இடங்களுக்குச் சென்று செய்திகளைச் சேகரிக்கும் காலங்களில் அவ்வவ்விடங்களில் உடனிருந்து உதவிய அன்பர்கள் அனைவருக்கும் திருவருளும் குருவருளும் சிறப்பாக அமைந்து மேன்மை எய்திடப் பிரார்த்திக்கின்றேன்.

9—4—91 - பங்குனி - திருவோணம் நன்னாளில் இவ்வாதீனத்து 22-வது குரு மகாசந்நிதானம் அருள்திரு அம்பலவாண தேசிக மூர்த்திகள் எட்டாம் ஆண்டுக் குருபூசை விழாவில் இந்நூல் இவ்வாதீனத்தின் 23 - வது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்களின் அருளாணையின் வண்ணம் வெளியிடப்பெறுகின்றது. அடியேனையும் பணிகொண்டு நன்னெறிப் படுத்தியருளும் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் அவர்கள் திருவடித் தாமரைகளை மனம், மொழி, மெய்களால் வணங்கி மகிழ்வதையன்றி அடியேன் யாது செய்ய வல்லேன்.

அன்பர்கள் அனைவரும் இக்குருபூசை நன்னாளில் இந்நூலினைப் பெற்று வளம் பெற பிராத்திக்கின்றேன். இந்நூலில் காணும் குற்றம் நீக்கி குணங்கொண்டு போற்றிட வேண்டுகின்றேன்.

வளர்க துறைசையாதீனம்

அடியேன்,

S. நாராயணசுவாமி எம். ஏ , பி, யிடி.

ஆசிரியர்

திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவாண தேசிகர்

நடுநிலைப்பள்ளி, திருவிடைமருதூர்

28—3—91

பொருளடக்கம்

		பக்கம்
1.	தட்சிணமூர்த்தி	
2.	பிரதிமாலக்ஷணம் - தட்சிணமூர்த்திபேதங்கள்	... 1
3.	திருவுரு அமைப்பும் விளக்கமும்	... 9
4.	உத்திரகாமிகாமம் (கிரியாபாதம்)	... 35
5.	உத்தர காரணகமம்	... 59
6.	பூர்வகாரணகமம் (தட்சிணமூர்த்தி - பிரதிமாலக்ஷணவிதிப் படலம்)	... 61
7.	,, (தட்சிணமூர்த்தி ஸ்தாபன படலம்)	... 63
8.	தேர்ச்சிற்பங்களில் தட்சிணமூர்த்தி	... 82
9.	ஓவியத்தில் தட்சிணமூர்த்தி	... 87
10.	உத்தரகாமிகாகமத்தில் தட்சிணமூர்த்தி ஸ்தாபனவிதி	... 98
11.	அஜிதாகமத்தில் தட்சிணமூர்த்தி ரூபம்	... 101
12.	ரௌரவ ஆகமத்தில் தட்சிணமூர்த்தி லட்சணம்	... 102
13.	ரௌரவோத்தர ஆகமம் (தட்சிணமூர்த்தி பிரதிஷ்டாவிதி	... 104
14.	தட்சிணமூர்த்தி பிரதிஷ்டாவிதி (10-வது படலம்)	... 109
15.	தட்சிணமூர்த்தி உபநிஷத் (விளக்கம்)	... 113
16.	,, அஷ்டோத்தர நாமாவளி	... 119
17.	தட்சிணமூர்த்தி த்ரிசதி நாமாவளி	... 123
18.	கல்வெட்டுகளில் தட்சிணமூர்த்தி	... 128
19.	DAKSHINAMURTI	... 133
20.	காணவேண்டிய கலியம்சம் உள்ள தட்சிணமூர்த்தித் திருவுருவங்கள்	... 146
21.	தட்சிணமூர்த்தி பத்ததி – ஸ்தோத்ரம் – நவரத்னமாலா ஸ்தோத்ரம்	... 149 – 157
22.	தட்சிணமூர்த்தி சஹஸ்ரநாமாவளி	... 159
23.	நவரத்னமாலிகா – மந்த்ரவர்ண பதஸ்துதி	... 175
24.	பிரபஞ்ச சாரசார சங்கிரகம்	... 178
25.	தட்சிணமூர்த்தி முதல்பாகத்திலுள்ள திருவுருவங்கள்.	... 187

தட்சிணாமூர்த்தி

திருக்கயிலையில் :

திருக்கயிலாய மலையில் அழகாக அலங்கரிக்கப்பட்ட மணி மண்டபத்தின் நடுவில் எழிலுடன் விளங்கும் அரியணையில் சிவபெருமான் எழுந்தருளி இருக்கின்றார். சிவபிரானைக் கண்டு தரிசிக்கும் பொருட்டு, பிரமதேவனின் குமாரர்களாகிய சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் திருக்கயிலையை அடைந்தனர். திருக்கயிலையில் ஒருசார் அழகிய அமைக்கப்பட்ட பர்ணசாலையில் உமாதேவி, தனிமையில் தவமியற்றுகின்றாள். அங்கு வந்த பிரமகுமாரர்கள் உமாதேவியை வணங்கிவிட்டு, பரமன் விளங்கும் பதியினை அடைந்து, நந்தியம் பெருமானின் அனுமதி பெற்றுச். சிவபிரான் திருமுன்பு சென்று ஆனந்தக் கண்ணீர் வார, அப்பெருமானின் திருவடிகளைப் பன்முறை வணங்கி, எழுந்து நின்று தொழுத வண்ணம் சிவபரம் பொருளே! வேதாகம புராணங்களை விதிப்படிக் கற்றும், எங்கள் மனம் தெளிவடையவில்லை. ஆணவம், கன்மம் மாயை ஆகிய மும்மல இருள் எங்களை விட்டு அகலவில்லை. ஆகையால் ஐகத் குருவாக விளங்கியருளும் தாங்கள் எங்களுக்கு உண்மைப் பொருளை உபதேசித்து அருள் புரிய வேண்டும் என்று வேண்டினர். சிவபெருமான் அவ்வேண்டு கோளுக்கு இரங்கி அவர்களை அமரச் செய்து அவர்களுக்கு உபதேசிக்கும் பொருட்டுக் குருவடிவம் தாங்கியருளிய காட்சியே தட்சிணாமூர்த்தி திருவுருவாகும்.

மூவகை வடிவங்கள் :

சிவபிரானுடைய திருவுருவங்கள் போகவடிவம், யோக வடிவம், வேக வடிவம் என மூவகைப்படுத்திக். கூறுவர் சான்றோர். பெருமான் தான் போகியாக இருந்துகாட்சி தந்து உயிர்களுக்குப் போகத்தை வழங்கியருளுகின்றார். யோகியாக அமர்ந்து காட்சி தந்து உயிர்களுக்கு யோகத்தின் தன்மைகளை யெல்லாம் உணர்த்தி அந்த யோகத்தால் உண்டாகும் முக்தி இன்பத்தைக் கொடுத்தருளுகின்றார். வேக உருவத்துடன் காட்சி தந்து உயிர்களின் வினைகளை யெல்லாம் அழித்து அருள்பாலிக்கின்றார்.

மேற்கூறிய மூவகை வடிவங்களுள் யோக வடிவம் தாங்கி ஆன்மாக்களுக்கு யோகத்தையும், அந்த யோகம் புரிவதற்குரிய ஞானத்தையும் வழங்கியருளும் வடிவம் தான் தென்முகக் கடவுளாகிய தட்சிணாமூர்த்தியின் திருவடிவமாகும்.

தட்சிணமூர்த்தி என்பதற்கு, தெற்கு நோக்கிய தெய்வ வடிவம் எனப் பலரும் பொருள் கூறுவர். இங்கே தட்சிணம் என்பது தெற்கு என்னும் பொருளைத் தராது, ஞானம் என்ற பொருளையே தரும். "த" "க்ஷி" "ணம்" – இவை மூன்றும் மிக பீஜாட் சரங்களாகும். ஒவ்வோர் அட்சரத்திற்கும் விசேடமான பொருள் உண்டு.

ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிய அட்டாட்ட விக்கிரகலீலை என்னும் விருத்தப்பாவில் சிவபிரான் 64 திருவடிவங்களை மேற்கொண்டார் என்று கூறுவர். இவற்றுள் முக்கியமாக 25 வடிவங்களை மட்டும் சிறப்பாக எடுத்துக் கொண்டு போற்றுவர். மேற்கூறப்பட்ட மகேசனுடைய வடிவங்களுள் ஞானமயமாகவும், ஞானத்தை அருளும் ஜகத்குருநாதனுகவும் விளங்கும் திருவடிவமான தட்சிணமூர்த்திப் பெருமானது வடிவமே மிகமிகச் சிறப்பாகப் போற்றித் துதிக்கப்பட்டு வரும் வடிவமாகும்.

திருக்கோயில்களில் :

திருக்கோயில்களில் – தேவ கோஷ்டத்தின் தென்புறத்திலும், இராஜ கோபுரம், விமானம், மதிற்சுவர் முதலானவற்றிலும் தென்திசை நோக்கிப் பல்வேறு நிலைகளில் காணும் தட்சிணமூர்த்திப் பெருமானின் திருவுருவங்களைக் கற்சிற்பங்களாகவும், சுதைச் சிற்பங்களாகவும், ஆகமங்களிலும் சிற்பநூல்களிலும் கூறிபவாறு உற்சவமூர்த்தியாகவும் நம்முன்னோர்கள் நமக்கு வடிவமைத்துத் தந்துள்ளனர்.

மகேஸ்வர வடிவங்கள் :

சதாசிவமூர்த்திக்குத் திருமுகங்கள் ஐந்து என ஆகமங்களும் சிற்பநூல்களும் கூறுகின்றன. அவைகள் 1. ஈசானம், 2. தத்புருஷம் 3. அகோரம், 4. வாமதேவம், 5. சத்யோஜாதம் என்பன ஆகும். 1. ஈசானமுகத்திலிருந்து – சோமாஸ்கந்தர், நடராஜர், ரிஷபாரூடர், கல்யாண சுந்தரர், சந்திரசேகர் திருவுருவங்களும் 2. தத்புருஷ முகத்திலிருந்து – பிட்சாடனர், காமாரி, காலாரி, சலந்தராரி, திரிபுராந்தகர் திருவுருவங்களும் 3. அகோரமுகத்திலிருந்து – கஜசம்ஹாரர், வீரபத்திரர், தட்சிணமூர்த்தி, ஸ்ரீதரமூர்த்தி, விஷாபஹரணர் திருவுருவங்களும், 4. வாமதேவமுகத்திலிருந்து கங்காளர், சக்ரதானர், கஜாந்திகர், சண்டேச அனுக்கிரகர் ஏகபாதர் திருவுருவங்களும், 5. சத்யோஜாதமுகத்திலிருந்து – லிங்கோத்பவர், சுகாசனர், உமாமகேசர், ஹரிஹரர், அர்த்தநாரி, திருவுருவங்களும் தோன்றின. இத் திருவுருவமைதிகள் இன்றும் திருக்கோயில்களில் விளங்குகின்றன.

தட்சிணமூர்த்தியின் பலவடிவங்கள் :

ஞான	தட்சிணமூர்த்தி	நவாக்ஷரி	தட்சிணமூர்த்தி
வியாக்யாந	,,	தாரக	,,
யோக	,,	கபில	,,
வீணதர	,,	விபுல	,,
மேதா	,,	கிரிசர	,,
வரத	,,	சாஸ்த்ர	,,
யோகபட்டாபிராம	,,	அர்த்தநாரீஸ்வர	,,
சக்தி	,,	ருத்ரரூப	,,
ஆஸன	,,	வீர	,,
தர்ம வியாக்யாந	,,	ராஜ	,,
உத்குடிகாசன	,,	லக்ஷ்மீ	,,
சுகாசன	,,	கீர்த்தி	,,
அர்த்தநாரீஸ்வரவீணதர	,,	பிரம்மவித்யா	,,
சாம்ப	,,	சுத்த	,,
ஹரிகுருசிவயோக	,,	திவ்ய	,,
ரிஷபாரூட	,,	வேத	,,
ரிஷபாரூடஞானயோக	,,	ருத்ர	,,
தீட்சாநுக்ரஹ	,,	விஷ்ணு	,,
வீராசன	,,	வீணகான	,,
அமிர்தகலச	,,	ஸ்வதா	,,
பத்மாசன	,,	சம்ஹார	,,
அர்த்தபத்மாசனயோக	,,	வாகீஸ்வர	,,
ஊர்த்துவஜானுவீணதர	,,	கேவலநிஷ்கள	,,
ரிஷபாரூடவீணதர	,,	அஷ்டாதச	,,
ஜடாமண்டல	,,	சௌபாக்ய	,,
ராஜலிங்காசனயோக	,,	ஞானருத்ரா	,,
ஜடாபார	,,	அகோர	,,
தியானஹஸ்த	,,	உக்ர	,,
சர்வக்ஞ	,,	கௌரிஆலிங்கன	,,
சித்தி	,,	பாசாங்குசவியாக்ஞான	,,
பாலா	,,	கைலாசவாசி	,,
போகா	,,	மேதாப்ரஜ்ஞாப்ரதாயினி	,,
ஏகாக்ஷர	,,		

இன்னும் அநேக திருவுருவப் பேதங்கள் திருக்கோயில்களிலும், சுகஸ்ர நாமங்களிலும் காணலாம்.

சிவபிரான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத் தட்சிணாமூர்த்தி வடிவம் கொண்டு கல்லால மரநிழலில் எழிலுடைய ஆசனத்தின் மீது வீராசனங் கொண்டு எழுந்தருளி விளங்கியிருத்தலை வேதங்களும், ஆகமங்களும், தேவாரப்பனுவல்களும் பல்வேறு வகையாக விளக்கிக் கூறுகின்றன. தலபுராணங்களின் துதிப்பாக்களில் அந்தந்தத் தலத்தில் விளங்கும் தட்சிணா மூர்த்திப் பெருமானின் திருவுருவ அமைதி தெளிவாக எடுத்துரைக்கப் படுகிறது.

"சித்ரம் வடதரோர் மூலே விருத்தா சிஷ்யா குருர்யுவா !
குரோஸ்து மௌனம் வியாக்யானம் சிஷ்யாது சின்னஸம் சய ॥

கல்லால மரநிழலில் வீற்றிருக்கும் குருநாதர் மிகவும் இளையவராகக் காணப்படுகிறார். சிஷ்யர்களோ மிகவும் வயது முதிர்ந்தவர்களாகக் காணப் படுகிறார்கள். குருவானவர் யாதொரு வார்த்தையும் பேசாமல் வாய்மூடி மௌனியாகச் சின்முத்திரையால் விளக்கம் தருகின்றார் என்று மேற்கண்ட வடமொழி சுலோகம் குருவின் தோற்றத்தை விளக்குகின்றது.

நல்ல குருநாதர் :

வாய்மொழிகளால் கற்பிக்கும் ஆசாரியனைவிட, ஒப்புயர்வற்ற தன் தூய இனிய வாழ்வின் சிறப்பினால் மாணவர்களுக்கு உள்ளொளி பெருகச் செய்யும் திறம் உடையவனே, மிகவும் சிறந்த நல்ல பேராசிரியன் ஆவான். அதனாலேயே திருப்புகழில் "ஊமைத் தேவர்" என்று போற்றப்படுகிறார். பரஞ்சோதி முனிவர் கூறுகையில் 'பூரணமாய்" மறைக்கப்பாலாய், எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை, இருந்தபடி இருந்து காட்டி" என்று போற்றித் துதிக்கின்றார்.

சுந்தரர் காட்டும் திருக்கோலம் :

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவின்றியூர்த் தேவாரத்தில் தென்முகக் கடவுளின் திருக்கோலக் காட்சியினைப் பின் வருமாறு அருளிப் பாடியுள்ளார்.

"காது பொத்தரைக் கின்னரர் உழுவை
கடிக்கும் பன்னகம் பிடிப்பரும் சீயம்
கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல ஆல்நிழற்கீழ் அறம் பகர
ஏதம் செய்தவர் எய்திய இன்பம்
யானுங்கேட்டு நின்னிணையடி அடைந்தேன்
நீதிவேதியர் நிறைபுகழ் உலகில்
நிலவுதென்திரு நின்றியூ ராளே"

இத்தலத்தில் ஞானம் புகட்டும் ஆலமர் செல்வனின் இரண்டு காது களிலும் இசை எழுப்பும் இன்னரர்கள் இருக்கின்றார்கள். பாம்பும், புலியும் சிங்கமும் ஒருபக்கத்தில் விளங்க சிறந்த மாதமுனிவர்கள் கூட்டமாக அமர்ந் திருக்கின்றனர். ஆலமர் செல்வனை சிவபிரான் கல்லாலமரநிழலில் எழுந்தருளி தம்முனிவர்களின் ஐயம் எல்லாம் நீங்கி, உண்மைப் பொருளினை உணரும்படி அறம் உரைத்தருளுகின்றார்.

துறைசைப் புராணம் :

சிவந்த தாமரை மலர் போன்ற வன்மையான திருவடியைச் சேர வொட்டாமல், உயிர்களையெல்லாம் மயங்கச் செய்கின்ற ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களையும் போக்கி, அன்புமிக்க அடியார் கூட்டத் தோடு கூடி, நீங்கள் அடையக் கூடிய முக்தி இன்பமானது இத் தன்மையை உடையது, என்று சனகாதி முனிவர் நால்வருக்கும் பெருவிரல் சுட்டுவிரல்களின் சின்முத்திரையால் சொல்லாமற் சொல்லி, கல்லால மரநிழலின் கீழ். மன்மதன் மேலே நெற்றிக் கண் நெருப்பை வீசி இறைத்து அமர்ந்திருந்த குருநாதரை வணங்குவோமாக என்ற கருத்தமைந்த சாத்திரம் சாமிநாதமுனிவர் இயற்றிய துறைசைப் புராணப் பாடல் வருமாறு :

> "செம்மலர் நோன்தாள் சேரல் ஓட்டாமல்
> உயிரையெல்லாம் தியக்கம் செய்யும்
> அம்மலம்க ழீஇமிகுந்த அன்பரொடு
> மருவிநீர் அடையு முத்தி
> இம்முறையாம் என நால்வர்க்(கு) இருவிரல்சின்
> முத்திரையால் இயம்பி ஆல்கீழ்
> மன்மதன்மேல் நுதற்கண் அனல் இறைத்திருந்த
> குருபரனை வணக்கம் செய்வாம்."

இத்துறைசை ஆதீனத்து முனிவரின் பாடல் தென்முகக் கடவுளின் சின்முத்திரை விளக்கத்தை நமக்குத் தெளிவு படுத்துகின்றது.

கோஷ்டப்பகுதியில் :

தட்சிணமூர்த்திப் பெருமானின் சிலா ரூபத்தினைச் சிவாலயங்களின் தேவகோஷ்ட தென் பகுதியில் காணலாம். தெட்சிணமூர்த்தியின் திருச் சந்நிதிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முகத்தான் சில தலயங்களில் இப்பெருமான் முன்பு நான்கு தூண்கள் நிறுத்தப்பட்டு மண்டபம் போல அமைக்கப்பட்டிருக்கும் அல்லது சிங்கங்களின் மீது தூண்கள் அமைக்கப் பெற்று மண்டபத்தின் நான்கு மூலைகளிலும் கருங்கல் சங்கிலிகள் தொங்கவிடப்பட்டு இருப்பதையும் காணலாம். இம்மண்டப அமைப்பு மூன்றும் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து தொடங்கப்பட்டது. என ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர்.

உதாரணமாக திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவாலங்காடு ஸ்ரீ வடவாரண்யேஸ்வரர் திருக்கோயிலில் விளங்கும்

தட்சிணமூர்த்திசந்நிதியில் அமைக்கப்பெற்ற மண்டபத்தைக் கூறலாம். தூண்களின் இருமருங்கிலும் மூன்றும் குலோத்துங்க சோழனது திருவுருவமும் உள்ளது. மேலும் இம்மன்னனது திருவுருவம் தெற்கு ஆவரணத்திலும் உள்ளது.

சிவாலயங்களின் தேவ கோஷ்ட மாடங்களில் மூன்று விதங்களாகப் பிரதிமங்களைப் பிரதிட்டை செய்துள்ளனர். நம் முன்னோர்கள் தென் திசையிலிருந்து தொடங்கி மேற்கு மற்றும் வடக்கு வரை பிரதிட்டை யானது நிறைவடைகின்றது.

1. தலவிநாயகர், அகஸ்தியர், தட்சிணமூர்த்தி, லிங்கோத்பவர் பிரமன் துர்க்கை என்ற முறையிலும்,

2. தலவிநாயகர், நடராஜர், தட்சிணமூர்த்தி, அர்த்தநாரீஸ்வரர், பிரமன், கங்காவிசர்ஜனர் துர்க்கை என்ற முறையிலும்

3. அகத்தியர், தட்சிணமூர்த்தி, விஷ்ணு அல்லது யோகம் செய்யும் விதத்தில் மான்மழுவோடு சிவன், பிரமன், துர்க்கை என்ற முறையிலும் காணப்படும். தெற்குப்பகுதி மற்றும் வடக்குப் பகுதியில் இன்னும் சில சிவமூர்த்தங்கள் பெரிய சிவாலயங்களில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளதனை நேரில் கண்டு தெளியலாம்.

திருவுருவதத்துவம் :

தட்சிணமூர்த்திப் பெருமான் கல்லால மரத்தின் கீழ் வீராசனம் கொண்டு எழுந்தருளி சனகாதி முனிவர்களுக்கு உபதேசம் செய்யும் காட்சியினைத் திருக்கோயில்களில் இன்றும் நாம் காண்கிறோம். இப்பெருமானுக்கு நான்கு கரங்கள். பின் கரங்களின் முறையே அக்னியும், உடுக்கையுடன் இணைந்த சர்பமும் விளங்கும். முன் இடக்கரத்தில் ஸ்வதச் சுவடி காணப்படும் இல்லையேல் கரம் கீழ் நோக்கிய வாறு காணப்படும் முன் வலக்கரம் சின்முத்திரையினைக் கொண்டு விளங்கும். மேலும் மிருகங்களும் பறவைகளும் காணப்படும். சிலதலங்களில் முனிவர்களின் கூட்டமும் காணப்படும். யோகிக்குரிய அனைத்து லட்சணங்களும் இப்பெருமானிடத்தே விளங்குதலைக் காணலாம்.

திருநீறு :

தட்சிணமூர்த்திப் பெருமான் வெண்ணீறு அணிந்து பளிங்கு போன்ற திருமேனியினைக்கொண்டு விளங்குவது தூய்மைத் தன்மையினைப் புலப் படுத்துகிறது.

திருமுடி :

சிரசில் விளங்கும் திருமுடிகள் (ஜடைகள்) வைராக்கியத்தையும், ஞான நோக்கினையும் புலப்படுத்துகிறது.

சுவடி :

கரத்தில் விளங்கும் சுவடி சிவஞானம் ஆகும். சிவ ஞானத்தால் மும்மலங்கள் நீங்கி வீடு பேறு அடையலாம் என்பதை உணர்த்துகின்றது.

அக்கினி :

பின் இடக் கரத்தில் ஏந்தியுள்ள அக்கினி யுகமுடிவுக் காலத்தில் அனைத்துப் பொருளையும் அழித்துச் சாம்பலாக்க வல்லது என்பதைக் காட்டுகிறது.

உடுக்கைநாகம் :

பின் வலக்கரத்தில் உடுக்கையும் அதில் நாகமும் காணப்படும். உடுக்கையானது சிருஷ்டித் தொழிலையும், நாகபாசமானது உலகினை நம்பி ஆன்மாக்கள் உழலுவதனைக் காட்டுகிறது.

சின்முத்திரை :

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் நீங்க, உயிர் சிவபரம் பொருளின் திருவடியியாபகத்துள் இரண்டறக் கலத்தலை உணர்த்துவது.

உருத்திராக்கம் :

கழுத்தில் அணிந்துள்ள 36 மணிகொண்ட உருத்திராக்கமாலை முப்பத்தாறு தத்துவங்களைக் குறிக்கும். சின்முத்திரைக் கரத்தில் விளங்கும் ஜபமாலை ஆன்மாக்கள் ஐந்தெழுத்தை('நமசிவாய')செபித்து கடைத்தேற வேண்டும் என்பதனைக் காட்டுகிறது. பெருமானுக்கு நமசிவாய என்ற திருநாமமும் அதே அவருக்கு மந்திரமாகவும் உள்ளது. இதில் ஐந்து எழுத்து உள்ளதால் " பஞ்சாட்சரம் " என்று கூறுவர். தீட்சா காலத்தில் குருவானவர் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கும் மந்திரமும் இதுவேயாகும்.

பஞ்சாட்சரம் :

இம்மந்திரத்தின் பெருமையினை வேதங்களும், திருமுறைகளும் பலவாறாக எடுத்து இயம்புகின்றன.

பஞ்சாட்சர மந்திரம் 125 பேதங்களைக் கொண்டது என்று சான்றோர் கூறுவர். இப்பேதங்கள் யாவும் ஆன்மாக்கள் அடையும் நன்மைகளை உணர்த்துகின்றன. முதலாவது ஆளுங்கிருத்தியத்தைப் புரியவல்லது.

ஈசானமாகிய — "ந" காரத்தில் உச்சாடனத்தை யுதவவல்ல அகோர பஞ்சாட்சரத்தில் தொடங்கி 25 ஆகக் கூறப்படும் சர்வ பஞ்சாட்சரத்தில் முடிகிறது.

தற்புருஷமாகிய — "ம" காரத்தில் வித்வேஷண பஞ்சாட்சரத்தில் தொடங்கி, 25 ஆகக் கூறப்படும் யக்ஷணி பஞ்சாட்சரத்தில் முடிகிறது.

அகோரமாகிய — "சி" காரத்தில் தம்பன பஞ்சாட்சரத்தில் தொடங்கி 25 ஆக முடியும் சஞ்சீவி பஞ்சாட்சரத்தில் முடிகிறது.

வாமதேவமாகிய — "வ" காரத்தில் பேத பஞ்சாட்சரத்தில் தொடங்கி 25 ஆக முடியும் சர்வபரிபாஷர் பஞ்சாரத்தில் முடிகிறது.

சத்யோஜாதமாகிய — "ய" காரத்தில் மூலாதார பஞ்சாட்சரத்தில் தொடங்கி 25 ஆக முடியும் சதுஷ்பீட பஞ்சாட்சரத்தில் முடிகிறது.

மேலும் இம்மந்திரத்தின் பல்வேறு வகைகளையும், நிலைகளையும் உபநிஷத்துக்கள் சைவத் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் சிவரகசியம் சித்தாந்த சிகாமணி, பஞ்சாட்சர ரகசியம், சித்தாந்த சாதனம், சைவ பூஷணம் மந்திர சாரம், மந்திர சார சங்கிரகம் முதலான நூல்களில் காணலாம்.

மேலும் சில ஆயுதங்களை இவரிடத்தே காணலாம்.

மான்மழு :

பின் கரத்தில் விளங்கும் " மான் " மான் போன்ற மருண்ட மனத்தினை உடைய ஆன்மாக்கள் உள்ளனர் என்பதையும், தீய சக்திகளை மனத்திலிருந்து அகற்றவேண்டும் என்பதனை மழுவும் உணர்த்துகிறது.

அமிர்தகலசம் :

ஒரு சில தட்சிணமூர்த்திப் பெருமானின் திருவுருவ அமைப்பில் இடக்கரத்தில் அமிர்தகலசம் விளங்குகிறது இக்கலசம் எல்லா உயிர்களுக்கும் பேரின்ப வாழ்வை அளிக்கவல்லவர் என்பதனைக் காட்டுகிறது.

திரிசூலம் :

இது மூன்று நுனிகளை உடையது. சிவபெருமானுக்குச் சிறப்பாக உரியது. மூன்று உண்மைப் பொருளை உணர்த்தவல்லது.

கபாலம் :

" வைராக்யம் " என்பதனை உணர்த்தவல்லது.

முயலகன் :

பாசத்தில் கட்டுண்ட ஆன்மாக்கள் இவ்வுலகில் முயலகன் போல் அவதியுறுவர் என்பதனைக் காட்டுகிறது.

யோகதண்டம் :

இது மரத்தினால் ஆக்கப்பட்ட ஒன்றாகும். கவட்டை போன்று விளங்குவது. ஜபமாலையினைக் கையில் கொண்டு யோகதண்டத்தின் மீது கரத்தினை வைத்துக் கொள்ளுதலாகும். மேலும் யோகதண்டம் போன்று நிமிர்ந்து யோக நிட்டையில் இருக்கவேண்டும் என்பதை உணர்த்துவதாகும்.

வீணை

இது ஓர் இசைக்கருவி, இசையின் உண்மையான நுணுக்கத்தை தும்புரு, நாரதர், சுகர் முதலான ரிஷிகளுக்கு ஐயம் நீக்கியருளுவதைக் காட்டுவது

இந்த வீணைதரர் காட்சியினை, விளநகர் திருவாவடுதுறை, திருவிடை மருதூர், திருபுவனம் ஆகிய தலங்களின் ராசகோபுரங்களில் காணலாம்.

நெற்றிக்கண் :

இவரது நெற்றிக்கண் காமனை எரித்ததை உணர்த்துவதாகும். தவம் புரிவோர் காமனை வென்ற வைராக்கிய முடையவர்களாகத் திகழவேண்டும் என்ற உண்மைகளைக் காட்டுவதாகும்.

கல்லாலமரம் :

அடர்ந்து, பரந்த கல்லால மரநிழல் மாயமான உலகச் சூழலைப் புலப்படுத்தும், அதன் கிளைகள் மாயையின் வகைகளைப் புலப்படுத்தும்.

இடபம் :

பெருமானின் கீழ் விளங்கும் இடபம் உழைப்பினையும், வேதங்களையும் தருமங்களையும் உணர்த்துவ தாகும்.

பிறஉயிரினங்கள் :

பாம்புகள், பறவைகள், சிங்கங்கள், மான்கள் முதலிய மிருகங்கள் யாவும் இவரிடத்தே பகைமை நீங்கி இருத்தலாகிய ஒற்றுமையினை உணர்த்துகின்றது.

உதரபந்தம் :

இவர் உதரபந்தமாக அணிந்துள்ள நாகம் குண்டலினி சக்தியைக் காட்டுவ தாகும்.

வீராசனம் :

அநேக ஆசனங்கள் இருப்பினும் இப்பெருமான் வீராசனம் கொண்டு எழுந்தருளி ஈடு எடுப்பற்ற தலைமைத் தன்மையை உணர்த்துகின்றார்.

மௌனம் கொண்ட தென்திசைத் திருமுகம் :

இவர் தென்முகமாக அமர்ந்திருப்பது ஆன்மாக்கள் எல்லாம் இவரை நோக்கி வடக்கு முகமாக இருந்து தியானம் ஜெபம் முதலியன செய்ய வேண்டும் என்பதனை உணர்த்துகிறது. சாந்தம் தவழும் திருமுகம் ஆழ்ந்த சிந்தனையைப் புலப்படுத்தும். இப்பெருமானின் கண்கள் மூக்கின்

நுனியினைப் பார்த்தவாறு உள்ளதால் ஒருமை மனத்தை அதாவது ஏகாக்கிர சித்தத்தை உணர்த்துவனவாகும். மௌனமானது புலனடக்கத்தையும் அறிவின் மேம்பாட்டையும் உணர்த்துவ தாகும்.

முனிவர்கள் திருவுருவங்கள் :

முனிவர்கள் யாவரும் ஆலமர் செல்வனாகிய குருநாதன் சொல்லாமற் சொன்னவற்றைக் கேளாமற் கேட்டுணர்ந்து அவன் பாத கமலங்களை நினையாமல் நினைந்து பாசங்களிலிருந்து நீங்கப் பெற்று என்றும் அழியாத பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று இன்புறுவர் என்பதைக் காட்டுகிறது.

இவ்வாறாக தத்துவப் பொருளை உணர்த்த வந்த பெருமானாகிய தட்சிணாமூர்த்தி ஆலயங்களில் பல நிலைகளில் (உருவ அமைதிகள்) அருட்காட்சி வழங்குகின்றார். இப்பெருமானைப் பற்றிக் கூறும் ஆகமச் செய்திகளும் சில்பநூல்களின் விளக்கங்களும், பிரதிட்டை முறைகளும், மந்திரங்களும், உருவ வழிபாட்டின் உண்மைப் பொருளும் இங்கு அறிந்து தெளியும் பொருட்டு படங்களின் மூலமாகவும், சில மூல பாடத்திற்கு விளக்கமும் தொடர்ந்து வருவதனை உணரலாம்.

ஆகவே பெறுதற்கரிய மானுடப் பிறவியைப் பெற்ற ஒவ்வொருவரும் தெளிந்த சிந்தை உடையவர்களாகத் தென்முகக் கடவுளின் திருவடிகளைத் தொழ வேண்டும். தொழுதால் ஞானம் உண்டாகும். ஞானம் எல்லா வகைச் செல்வங்களையும் பேரின்ப வாழ்வையும் நல்கும்.

" குரவே ஸர்வ லோகநாம் பிஷஜே பவரோகிணம் ।
நித்யே ஸர்வ வித்யானாம் தட்சிணாமூர்த்தயே நம : ॥
அப்ர மேயத்வயாதீத நிர்மல ஜ்ஞான மூர்த்தயே ।
மனோகிசர்ம் விதுராய தட்சிணாமூர்த்தயே நம : ॥ "

ஸ்ரீ மாதவ சிவஞான சுவாமிகள் அருளிய துதிப்பாக்கள்

பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல்
வழியனைத்தும் பிழையே அன்றி
வாய்அன்மை தெளிந்துசைவ சித்தாந்த
வழிதேறி ஆதீத வாழ்வில்
போயண்மி அஞ்செழுத்தும் திருநீறும்
கண்டிகையும் பொருளாக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்துஇறைஞ்சும்
பெரும்பேறு நான் பெற்றேனுல்.

— காஞ்சிப்புராணம்.

சீரும் கல்வியும் செல்வமும் ஞானமும்
பாரும் விண்ணும் பரிக்கும் இறைமையும்
சாரும் தென்குளந்தாபுரி மேவிய
கார்உண் கண்டனைக் கைதொழு வார்கட்கே.

— குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி.

வாழ்த்துகிலேன் திருப்புகழை
மனங்கொளேன் திருவடியைத்
தாழ்த்துகிலேன் சென்னியினைத்
தமியேனைக் கருக்குழியில்
வீழ்த்துவையோ பேரறிவை
விளக்குவையோ அறியகிலேன்
ஊழ்த்தமலர்ப் பொழில்புடைசூழ்
இளங்காட்டில் உறைவோனே.

— இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி

காடுகொண்ட சடைமுடிக் கண்ணுதல்
தோடுகொண்ட கடுக்கைத் தொடையலான்
ஏடுகொண்ட பொழில் இளங் காட்டினுன்
வீடுகொண்டனன் மீட்டு எனதுஉள்ளமே.

— இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி.

பண்இசை, வெம்பரிதி, மதி, திலதயிலம்,
நீஇரும்பு, பாணிஉப்பு,
விண்அணிலம், உடல்உயிர், நீர்நிழல், உசீசிப்
பளிங்கு, பகல்விளக்கு, பால்நீர்,
கண்இரவி, உணர்ஒளி போல்பிறிவரிய
அத்துவிதக் கலவி காட்டித்
தண்ணளி வைத்துஎனை ஆண்ட துறைசை நமச்
சிவாயகுரு சரணம் போற்றி.

— பஞ்சாக்கரதேசிகர் துதி

இருதய நாப்பண் அஞ்செழுத்து உருவின்
இறைவனை உயிர்க்கொலை செயாமை
அருள்பொறி அடக்கல் பொறை தவம் வாய்மை
அன்பு அறிவு என்னும் எண்மலர் கொண்டு
ஒருமையொடு அருச்சித்திடுக என்று அடியார்க்கு
ஒள்ளிய தீக்கை செய்து உணர்த்தத்
திருஅமர் துறைசை உறை அருள் குருவாம்
திருநமசி வாயர்தாள் போற்றி.

— ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் தோத்திரம்

புதியான் பழையான் புறத்தான் அகத்தான்
முதியான் இளையான் முதலான் முடியான்
பதியான் கலிசைப் பகவன் பெருமை
மதியால் எவர்தே றிடவல் வாரே.

கொண்டனை என்னை உன்னைக்கொடுத்தனை மலநோய்நீங்கக்
கண்டனை வினைகள் எல்லாம் கழித்தனை உடலின்பாரம்
விண்டனை பரமானந்தம் விளைத்தனை கலிசைவாழும்
அண்டனே உண்டு கொல்லோ அடியேனன் செயும்கைமாறே.

— கலிசைப் பதிற்றுப் பத்தந்தாதி.



தட்சிணமூர்த்தி

பிரதிமாலக்ஷணநி - தட்சிணமூர்த்தி பேதங்கள்

प्रतिमालक्षणानि - दक्षिणामूर्तिभेदाः ।

व्याख्यानदक्षिणामूर्तिः । (வியாக்யான தட்சிணமூர்த்தி)

अथ वक्ष्ये विशेषेण दक्षिणामूर्तिलक्षणम् ।
लम्बयेद्दक्षिणं पादं वामाङ्घ्रेर्नलकाग्रकम् ॥

सव्योर्वग्रे निधातव्यं वामपादं तु शाययेत् ।
नतमध्यर्धमानं स्याच्चतुर्भुजसमन्वितम् ॥

दक्षिणे पूर्वहस्तं तु ज्ञानमुद्रां तु धारयेत् ।
दक्षिणे परहस्तं तु अक्षमालाधरं परम् ॥

वरदं वामहस्तं स्यादण्डहस्तमथापि वा ।
वामजानूपरिष्टात्तु वरदे तलपृष्ठकम् ॥

वामजानूपरिष्टात्तु दण्डं चेत्कूर्परं न्यसेत् ।
वामे तु परहस्ते तु वह्निं वा व्यालमेव वा ॥

अर्धार्जवक्त्रं * सर्वाङ्गमार्जवं स्फटिकोपमम् ।
विकीर्णमूर्धजं वापि जटामण्डलमेव वा ॥

.....वद्धमूर्ध्नि वा जटामकुटमेव वा ।
चतुर्भुजस्त्रिनेत्रस्तु कुन्देन्दुधवलप्रभः ॥

श्वेतविद्रुमहेमाभश्श्यामाभो वा प्रकीर्तितः ।
व्याघ्रचर्माम्बरो वापि दिव्याम्बरधरस्तु वा ॥

---

* 'अर्धार्जवक्त्र' मित्यर्धस्य 'अर्धेन्द्रुवक्त्रसर्वाङ्गममदास्फटिकोपमम्' इति पाठान्तरम् ।

उत्तरीयसमोपेतश्शुक्लयज्ञोपवीतकः ।
विकीर्णमूर्धजो वापि जटामकुट एव वा ॥

पट्टिकावन्धनो वापि सत्करोटिकया युतः ।
धुर्धूरारत्नधैर्नागपत्रैश्चन्द्रेण मण्डितः ॥

पञ्चमुद्रासमोपेतो गङ्गाकिङ्किणिसंयुतः ।
अधस्ताद्वटवृक्षस्य शैलादूर्ध्वं श्रितः पुनः ॥

व्याघ्रचर्मोपरिष्टात्तु स्थितो वीरासनोऽथवा ।
लम्बितं दक्षिणं पादं तज्जानूपरि संस्थितम् ॥

वामाङ्घ्रिनलकं कुर्यात्सव्यहस्तं तु मुद्रया ।
सन्दर्शसंज्ञयोपेतो वामहस्तस्थपुस्तकः ॥

अथवा नागसंयुक्तो वामहस्तस्समीरितः ।
वरदं तं विजानीयाज्जानुस्थमणिबन्धकः ॥

दण्डहस्तो यदा स स्यात्प्रकोष्ठं * जानुसंस्थितम् ।
विकसत्पद्मसङ्काशस्त्वधस्ताद्विस्तृताञ्जलिः ॥

परहस्तद्वये चाक्षमालाज्वालासमन्वितः ।
पद्मं वा चोत्पलं वापि व्यालं वामे तु कल्पयेत् ॥

कटकौ तौ प्रकर्तव्यौ प्रसन्नसमलोचनः ।
नासाग्रदृष्टियुग्वामहस्तो वा स्यात्सुपुस्तकः ॥

सजटामकुटा देवचूचुकास्यगलान्तकाः ।
तत्तत्कलासमोपेताश्शुक्लयज्ञोपवीतिनः ॥

शुक्लाद्यम्बरसंयुक्ता भस्मरुद्राक्षसंयुताः ।
कौशिकः काश्यपश्श्यामस्त्वितरौ पीतवर्णकौ ॥

रक्तवर्णो भरद्वाजो धूम्राभावत्रिगौतमौ ।
एषामेकद्वयं वापि त्रयं वा पार्श्वयोर्न्यसेत् ॥

---

* 'दण्डहस्तो यदा स स्याद्' इति पाठान्तरम् ।

व्याख्यानमूर्तिरेवं स्याद्रेयमूर्तिस्ततो मतः ।

(उत्तरकामिकागमे एकपञ्चाशत्तमपटले ॥)

— உத்தரகாமிகாகமம்

दक्षिणामूर्तिमीशानं कुर्याद्वटतरोरधः ।
लम्बयेद्दक्षिणं पादं वामाङ्घ्रेर्नलकाग्रकम् ॥

सममेवं विधातव्यं वामपादं तु शाययेत् ।
दक्षिणे पूर्वहस्ते तु ज्ञानमुद्रां तु धारयेत् ॥

दक्षिणे परहस्ते तु कारयेदक्षमालिकाम् ।
वरदं वामहस्ते तु दण्डं वा परिकीर्तितम् ॥

वामजानूपरिष्टात्तु दण्डं चेत्कूर्परं न्यसेत् ।
वामे परकरे तत्र वह्निं वा मृगमेव वा ॥

विकीर्णमूर्धजं वापि जटामण्डलसंयुतम् ।
जटाभिर्बद्धमूर्तिर्वा जटामकुटशोभितम् ॥

शुद्धस्फटिकसङ्काशं ..... ।
वामे धुर्द्धूर(धुस्तूर?)पुष्पं च नागं च शिरसि स्मृतम् ॥

दक्षिणेन्दुकलायुक्तं सर्वाभरणभूषितम् ।
सितवस्त्रोत्तरीयं च सितयज्ञोपवीतिनम् ॥

व्याघ्रचर्माम्बरोपेतं त्रिनेत्रं क्लेशवर्जितम् ।
रुद्राक्षं कण्ठमालां च हृन्मालां च विधापयेत् ॥

नारदो जमदग्निश्च वसिष्ठो दक्षपार्श्वके ।
भारद्वाजश्च शुनकस्त्वगस्त्यो वामपार्श्वके ॥

वन्दितैः किन्नरार्द्यैस्तु सेवितं भक्तिसंयुतैः ।
अपस्मारोपरिष्टात्तु लम्बपादतलं न्यसेत् ॥

धर्मव्याख्यानमूर्तिः स्यादेवं सर्वशुभावहम् ।

(शिल्परत्ने द्वाविंशपटले ॥)

— சில்பரத்னம்

दक्षेण मुद्रां प्रतिपादयन्तं सिताक्षसूत्रं च तथोर्ध्वभागे ।
वामे च पुस्तामखिलामवाप्तां बिभ्राणमूर्ध्वेन सुधाधरं च ॥

सिताम्बुजस्थं सितवर्णमीशं सिताम्बरालेपनमिन्दुमौलिम् ।
ज्ञानं मुनिभ्यः प्रतिपादयन्तं तं दक्षिणामूर्तिमुदाहरन्ति ॥

(विष्णुधर्मोत्तरे ॥)

— விஷ்ணுதர்மோத்தரம்

चतुर्भुजं त्रिनेत्रं च द्वीपिचर्माम्बरान्वितम् ।
आवृतालङ्कृता भङ्गी शश्यर्ककुसुमान्वितम् ॥

सद(न्द्रं?)शं दक्षिणं हस्तं पुस्तकं वामहस्तके ।
सव्यके चाक्षमालां च व्याल वै वामहस्तके ॥

पादाग्रे दृष्टिपातं तु किंचिद्भङ्गसमायुतम् ।
लम्बितं दक्षिणं पादं तस्योर्वग्रस्य चोपरि ॥

वामपादस्य नलकं संयुतं कारयेत्सुधीः ।
हिक्कामध्यं समारभ्य कटके मणिबन्धकात् ॥

ह्यन्तरं त्रियवं प्रोक्तमृषिसङ्घैस्समावृतम् ।
अगस्त्यश्च पुलस्त्यश्च विश्वामित्रोऽङ्गिरास्तथा ॥

एवं व्याख्यानमूर्तिं तु गेयमूर्तिं शृणुष्वथ ।

(पूर्वकारणागमे एकादशपटले ॥)

— பூர்வகாரணாகமம்

ज्ञानदक्षिणामूर्तिः । (ஞானதட்சிணாமூர்த்தி)

तदेव वीणाहीनं तु ज्ञानमुद्राभयान्वितम् ।
वामं प्रसारितं हस्तं वामजानूरुकूर्परम् ॥

दक्षिणे त्वपरे चाक्षमाला वामेऽब्जमुत्पलम् ।
शुद्धश्वेतनिभं वर्णं शेषं पूर्ववदाचरेत् ॥

ज्ञानमूर्तिरिति ख्यातं सर्वकारणकारणम् ।

(अंशुमद्भेदागमे पञ्चसप्ततितमपटले ॥)

— அம்சுமத்பேதாகமம்

अथवा पूर्वहस्ताभ्यां ज्ञानमुद्राभयौ धृतौ ।
वामं प्रसारितं वाथ वामजानूर्ध्वकूर्परे ॥

अपरे दक्षिणे त्वक्षमालामुत्पलमन्यतः ।
ज्ञानमूर्तिरिति ख्यातं सर्वकारणकारणम् ॥

(शिल्परत्ने द्वाविंशपटले ॥)
— சில்பரத்னம்

योगदक्षिणामूर्तिः । (யோகதட்சிணமூர்த்தி)

अन्योन्याङ्घ्रितलं विप्र ! स्फिक्पिण्डाधः प्रकल्पयेत् ।
ज्ञानमुद्रां हृदि स्थाने त्वभ्यन्तरमुखं करम् ॥

वरदं वामहस्तं तु मेढ्रपीठोपरि न्यसेत् ।
अपरे दक्षिणे चाक्षमालाब्जं वामहस्तके ॥

नासाग्रं तु समीक्ष्याक्षमार्जवं सूत्रदेहकौ ।
अपरे तु जटालम्ब्य ऋषिभिस्सेवितं परम् ॥

योगमूर्तिरिति ख्यातं ध्याने दुःखनिवृत्तिदम् ।
लम्बयेद्दक्षिणं पादं वाममुत्कुटिका (त्कटुका ?)सनम् ॥

योगपट्टिकयावध्य देहं चोत्कुटिका(त्कटुका ?)न्विकम् ।
प्रसार्य्य वामहस्तं तु वामजानूपरि द्विज ! ॥

प्रागिवैव कृतं शेषं सोऽप्येवं योगमूर्तिं वै ।
ऊरुमूर्ध्नि समाश्रित्य अन्योन्यं पादपार्ष्णिकौ ॥

योगपट्टिकयोपेत जङ्घामध्ये द्विजोत्तम ! ।
प्रसार्य्य पूर्वहस्तौ द्वौ जानूपरि निधापितौ ॥

अपरे दक्षिणे चाक्षमाला वामे कमण्डलुम् ।
जटामण्डलसंयुक्तं ततश्चन्द्रशेखरम् ॥

नीलग्रीवासमायुक्तं शङ्खकुन्देन्दुसन्निभम् ।
अपरे शाययेदुक्षं नानासर्पविभूषितम् ॥

हृन्मा.....रुद्राक्षैस्तु * ।
एवं त्वनेकभेदेन दक्षिणामूर्तिरुच्यते ॥

(अंशुमद्भेदागमे पञ्चसप्ततितमपटले ॥)

— அம்சுமத்பேதாகமம்

व्याख्यानसहितस्त्वेव सन्दर्शस्य समास्ययुक् ।
तन्नाक्षिपातयोगेन सदाकुञ्चितलोचनः ॥

प्रसृतो वामहस्तस्याद्योगमूर्तिरयं मतः ।
अथ कुञ्चितवामाङ्घ्रियुग्मस्फिग्गतपार्ष्णिकः ॥

उद्धृतं तस्य जान्वग्रं दण्डकूर्परकान्तियुक् ।
सदंस(सन्दर्श ?)दृष्टिपातश्च आभङ्गं चैव पूर्ववत् ॥

नानामृगैस्तु संकीर्णं नानाव्यालैस्तु संयुतः ।
नानामुनिगणैस्सार्धं सिद्धविद्याधरैरपि ॥

भूतैश्च किन्नरैरन्यैः पुष्पवृक्षैश्च मण्डितम् ।
शैलं कुर्यात्तु तत्पार्श्वे वटवृक्षस्तु शाद्वलः ॥

फलशाखोपशाखाढ्यो नानापक्षिसमायुतः ।
तन्मूले दक्षिणे छायानिषण्णः कू(कृ ?)पया युतः ॥

रत्नोपशोभिते पीठे व्याघ्रचर्मोत्तरच्छदे ।
आसीनो मुनिभिस्सम्यक् कौशिकादिभिरादरात् ॥

शिवद्विजकुलस्यादिभूतैस्तु परितस्थितैः ।
आगमाहितचेतोभिः परमेशेन दीक्षितैः ॥

एवं तु दक्षिणामूर्तेर्मूर्तिभेदा उदाहृताः ।
आसीनो वा स्थितो वापि ऋषिभिस्संवृतो न वा ॥

वटवृक्षविहीनो वा भूताद्यावृत एव वा ।
भूतस्थलम्बपादो वा दक्षिणेशस्समीरितः ॥

(ऊत्तरकामिकागमे एकपञ्चाशत्तमपटले ॥)

— உத்தரகாமிகாகமம்

---

* 'अपरेचाययो वृक्षो नानासर्पविभूषितः । हृन्माला कर्णमालाध्या दैववृक्षे विराजितम् ॥' इति पाठान्तरम् ।

अन्योन्याङ्घ्रितलं सम्यक् स्फिक्पिण्डाधः प्रकल्पयेत् ।
ज्ञानमुद्रां हृदि स्थाने त्वभ्यन्तरमुखं करम् ॥

वरदं वामहस्तं तु मेढ्रपीठोपरि न्यसेत् ।
अपरे चोत्पलं चाक्षमालां पूर्ववदाचरेत् ॥

नासाग्रं स्वं समीक्ष्य स्वमार्जवं देहमाचरेत् ।
सुविकीर्णजटायुक्तं योगमूर्तिरिति स्मृतम् ॥

लम्बयेद्दक्षिणं पादं वाममुत्कुटि(त्कटु ?)कासनम् ।
संबद्ध्य योगपट्टेन देहोत्कुटि(त्कटु ?)काङ्घ्रिकौ ॥

प्रसार्य वामहस्तं तु वामजानूपरि स्थितम् ।
एतच्च योगमूर्तिस्स्याच्छेषं पूर्ववदाचरेत् ॥

ऊरुमूलं समाश्रित्य अन्योन्याबद्धपार्ष्णिकम् ।
योगपट्टिकयोपेतं जङ्घामध्ये विशेषतः ॥

प्रसार्य पूर्वहस्तौ द्वौ जानूपरि निधापितौ ।
अपरे दक्षिणे वाक्षमालां वाम(मे ?)कमण्डलुम् ॥

जटामण्डलसंयुक्तं करोट्यर्धेन्दुशेखरम् ।
नीलग्रीवासमायुक्तं शङ्खकुन्देन्दुसन्निभम् ॥

योगमूर्तिविशेषाख्यं शेषं प्रागिव कारयेत् ।

(शिल्परत्ने द्वाविंशपटले ॥)

— சில்பரத்னம்

वीणाधरदक्षिणामूर्तिः ॥ (வீணைதர தட்சிணாமூர்த்தி)

तदेव वामपादेनोत्कुटि(त्कटु ?)कासनसंयुतम् ।
पूर्वहस्तद्वयोर्वीणाधृतं युक्त्या द्विजोत्तम ! ॥

शेषं प्रागिव कर्तव्यमेतद्वीणाधरं भवेत् ।

(अंशुमद्भेदागमे पञ्चशप्ततितमपटले ॥)

— அம்சுமத்பேதாகமம்

ऊर्ध्वाधोमध्यकटकौ तस्यां सर्पकरावुभौ ।
वीणा तु दक्षिणे वाम्रे(दक्षिणोवंम्रे ?)ऽदक्षिणे कटक(के ?)स्थितः ॥

दक्षिणं कटकं चोरुस्थितायां विनिवेशयेत् ।

(उत्तरकामिकागमे एकपञ्चाशत्तमपटले ॥)

— உத்தரகாமிகாகமம்

तदेव वामपादेनोत्कुटिकासनसंयुतम् ।
पूर्वहस्तद्वये वीणा चेत्तद्वीणाधरं स्मृतम् ॥

(शिल्परत्ने द्वाविंशपटले ॥)

— சில்பரத்னம்

कटकं दक्षिणं हस्तमधोमुखं तदुच्यते ।
वामहस्तं तु कटकमूर्ध्ववक्त्रं तदुच्यते ॥

तन्वीं निवेशयेदूरुकाग्रे दक्षिणपादके ।
वामहस्तस्य कटके सव्यहस्तं तथोपरि ॥

ऊरुबाह्यं त्रिमात्रं तु कटकोर्ध्वं युगाङ्गुलम् ।
दण्डायामसमिति प्रोक्तं विस्तारं तु द्विमात्रकम् ॥

वा(ला ?)बुवक्त्रं तु षण्मात्रमुत्सेधं तु तदर्धकम् ।
एतदेव विशेषं तु शेषं पूर्वोक्तवद्भवेत् ॥

दक्षिणामूर्तिरेवं स्याच्छ्णु मन्मथनिग्रहम् ।

(पूर्वकारणागमे एकादशपटले ॥)

— பூர்வகாரணாகமம்



திருவுரு அமைப்பும் விளக்கமும்

ஞானம், இசை, கூத்து இவற்றின் பிறப்பிடமும், பேராசானும் சிவனே என நாம் முன்பே கண்டோம். நிருத்தமூர்த்தி என்ற அத்தியாயத்தில் இறைவனின் நாட்டியம் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தட்சிணமூர்த்தியாக அமர்ந்து யோகம், இசை முதலான பிறகலைகளைப் போதிக்கும் ஆசானாக விளங்குகின்றார். ரிஷிகளுக்கு யோகமும், ஞானமும் போதிக்கும் போது இறைவன் தென்முகமாய் அமர்ந்து அருளுகின்றார். தட்சிணம் என்றால் ஞானம் என்பதாகும். இதுவே தட்சிணமூர்த்தி என்ற சொல் ஆராய்ச்சியின் விளக்கமாகும். இறைவனின் இந்த இயல்பு கலை, சாத்திரங்கள் பயில்வோரால் குறிப்பிடப்பட்டுள்ளது. சமயக் குரவர்கள் இறைவனின் இந்த இயல்பு பற்றிப் பலவாறாக அருளிப்பாடியுள்ளனர். நிருத்த மூர்த்தியின் தாண்டவம் ஆனந்தம் அளிப்பது போல், தட்சிணமூர்த்தியின் திரு உருவமானது ஆழ்ந்த அமைதி அளிப்பது என்று குறிப்பிட்டுள்ளனர்.

நான்கு வகைகள் :

சாத்திரங்கள், வீணை, யோகம், ஞானம் ஆகிய நான்கு கூறுகளைப் போதிக்கும் ஆசானாக தட்சிணமூர்த்திப் பெருமான் விளங்குகின்றார். சாத்திரங்களைப் போதிக்கும் போது இவரை வியாக்கியான மூர்த்தி என்று அழைப்பர். இந் நான்கினுள் சாத்திரங்கள் போதிக்கும் ஆசானாகவே பெரும்பாலும் நாம் இத்திருவுருவத்தினை அமைத்துப் போற்றுகின்றோம். இந்து சமயத்தில் சிவ, விஷ்ணு ஆலயத்தில் (சிவபெருமானும், திருமாலும் ஆணைந்த கோயில்களில்) தென்புறச்சுவரில் தட்சிணமூர்த்தியின் திருவுருவமானது அமைக்கப் பட்டிருப்பதனைக் காணலாம்.

வியாக்கியான தட்சிணமூர்த்தி :

இமயத்தின் தனித்த இடத்தில் கல்லாலின் கீழ் அமர்ந்து இருப்பார். புலித்தோலினால் ஆன ஆசனத்தின் மீது பத்மாசனத்தில் அமர்ந்துள்ளதாகவும் சில குறிப்புகள் உண்டு. ஆசனத்தின் கீழே வலக்கால் கீழ்நோக்கித் தொங்க விடப்பட்டிருக்கும். இடது கால் மடிக்கப்பட்டு, வலது தொடை மீது அமைந்திருக்கும். இக்கோலத்தை "வீராசனம்" என்பர். தொங்கும் வலக்கால் கீழே உள்ள "அபஸ்மாரபுருஷன்" முதுகில் ஊன்றப் பட்டிருக்கலாம் அல்லது அவ்வாறு இல்லாதும் இருக்கலாம். இவருக்கு மூன்று கண்களும் நான்கு கரங்களும் உள்ளன. மூன்வலக்கரம் "ஞானமுத்திரையாக" (சந்தர்சனமுத்திரை) இருக்கும். முன்புறமுள்ள

(Ref : HINDU iconography By Dr. Gobinatha Rao)

இடக்கரம் வரதமுத்திரையாக இருக்கும். அல்லது தண்ட முத்திரையாக நீட்டப்பட்டிருக்கும். முன்கரமானது இட முழங்கால் மேல் விளங்கும். பின் உள்ள லக்கையில் அக்ஷமாலை இருக்கும். பின் இடக்கையில் அக்னி அல்லது சர்ப்பம் இருக்கும்.

இடக்கையில் ஒன்று வரதம் அல்லது தண்ட முத்திரையில் இருக்கலாம். முன்னதானால் மற்றொரு இடக்கரத்தில் நீ. சர்ப்பம், புத்தகம், தாமரை அல்லது நீலோற்பலம் பிடித்து இருக்க வேண்டும் எனவும் வேறோர் இடத்தில் கூறப்பட்டுள்ளது. மனவலிவு எண்ண ஓட்டங்களைக் காட்டும் விதத்தில் உடலின் பிறபாகங்கள் வளைவற்று நீர்க்கமாக இருக்க வேண்டும். ஜடாபாரம், ஜடாபந்தம், ஜடாமகுடம் ஜடை அல்லது பட்டபந்தத்தால் அலங்கரிக்கப்பட்ட சிரசுடன் இருப்பார். எவ்வாறுயினும் ஜடையில் '' தூர்தூரா '' மற்றும் இதர காட்டும் மலர்கள் செருகப் பெற்றிருக்கும். ஜடாபாரத்து மத்தியில் முகமலர்ந்த கங்கை நன்கு தோன்றவேண்டும்.

ஸ்படிகத்தை ஒத்த வெண்ணிறமாக மேனியானது விளங்கும். வெண்மை, சிவப்பு, மஞ்சள், கருப்பு முதலான நிறங்களில் உடல் இருக்கலாம் என வேறோர் இடத்தில் காணப்படுகிறது. இவரது உடலானது ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்க வேண்டும். தூய வெள்ளாடை, அல்லது புலித்தோல் மற்றும் மார்பில் யக்ஞோப வீதம் அணிந்திருக்க வேண்டும். மார்பின்மீது வெள்ளைச் சந்தனம் பூசி இருக்க வேண்டும். இடக்காதில் சங்கபத்திரமும், வலக்காதில் குண்டலமும் இருக்கும். அல்லது இருகாதுகளிலும் ஏதேனும் ஒன்றில் மட்டும் சங்க பத்திரங்கள் அல்லது குண்டலங்கள் காணப்படலாம். மார்புவரை இறங்கிய உருத்திராக்க மாலை சமூத்தில் உண்டு, மனச்சலனம் ஏதும் இல்லாத திருமுகமாக அமையவேண்டும். நாசியின் நுனி மீது பார்வையானது படிய வேண்டும். காரணகபத்தின்படி கால் கட்டைவிரல் மீது பார்வை பதிய வேண்டும், தர்மத்தை உபதேசிக்கும் இம்மூர்த்தியினை வணங்குவோர் எல்லா நலன்களையும் பெறுவர் என சிற்பசாஸ்திரம் கூறுகிறது.

குருவைச் சூழ்ந்தவர்கள் :

சாத்திரங்களைக் கற்கும் பேராவலுடன் ரிஷிகள் இப்பரம குருவைச் சூழ்ந்து இருப்பர், பல நூல்களில் இம் மாணாக்கர்களின் பெயர்கள் பல விதமாகக் கூறப்பட்டுள்ளன, அம்சுமேதாகமத்தில் – நாரதர், ஜமதக்கினி, வசிஷ்டர், பிருகு, பரத்வாஜர், சனகர், அகஸ்தியர் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. காமிகாகமத்தில் – கௌசிகர், காஸ்யபர், பரத்வாஜர், அத்ரி, கௌதமர் முதலான ரிஷிகளின் பெயர்கள் காணப்படுகின்றன. மற்ற இரு முனிவர்கள் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மொத்தம் ஏழுபேர் என்கிறது. காரணகமத்தில் – அகஸ்தியர், புலஸ்தியர், விஸ்வாமித்திரர், ஆங்கிரஸர் முதலான ரிஷிகளின் பெயர்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. மேற்சொன்ன முனிவர்களின் தலையில் ஜடாமகுடம் அமைதல் வேண்டும்.

இவர்கள் கழுத்தில் உருத்திராக்கமாலையும் மார்பில் வெண்மையான யக்ஞோபவீதமும் அணியச் செய்தல் வேண்டும். உடலில் திருநீறு அணிந்தும், வெள்ளை உடை அணிந்தும் இருக்க வேண்டும். இம் முனிவர்களின் உயரம், தட்சிணமூர்த்தியின் மார்புக்கு மிகக் கூடாது. கௌசிகர் மற்றும் காஸ்யபர் நிறம் கருப்பாகவும் (பெயர்குறிப்பிடாது), மற்ற இருவர் மஞ்சளாகவும், பரத்வாஜர் சிவப்பாகவும், அத்ரி, கௌதமர் சிவப்பு கருப்பு நிறக்கலவையாகவும் இருக்க வேண்டும் என்னக் காமிகாகமத்தில் கூறப்பட்டுள்ளது. இம்முனிவர்கள் தட்சிணமூர்த்திப் பெருமானின் இரு புறங்களில் இருக்கையில், இருவர் இருவராய் ஒருபுறமும் மூவர் மூவராய் ஒருபுறமும் அமரச்செய்யலாம். இருமருங்கிலும் மூவர் மூவராயும் இருக்கச் செய்யலாம்.

தட்சிணமூர்த்திப் பெருமானின் இருமருங்கிலும் கின்னரர்களும் தேவர்களும் பிறரும் இருக்க வேண்டும்.

அபஸ்மார புருஷன் வலக்கரமானது " ஸர்ப்பமுத்திரையுடன் " இருக்க வேண்டும். அதாவது அவனது கைகள் விரித்து, பாம்பு படம் எடுப்பது போல் வலக்கரம் இருக்க, இடக்கரம் பாம்பினைப் பிடித்துக் கொண்டு இருக்க வேண்டும்.

உபநிடதமும் - சம்ஹிதையும் தரும் உருவ விளக்கம் :

தட்சிணமூர்த்தி உபநிஷதமும், சூதசம்ஹிதையும் தட்சிணமூர்த்தியின் ரூபத்திற்குப் பல்வேறுவிதமான பொருளைக் கூறுகின்றன. கல்பகோடி கால முடிவில் அண்டம் முழுவதையும் உள்ளடக்கிக் கொண்டு ஒளி மயமான மகிழ்வான முகத்துடன் இவ்விறைவன் காணப்படுகின்றார். இவரே தட்சிணமூர்த்தி ஆவார், ஞானம் என்பது தட்சிணம் என்று அழைக்கப்படும். தென்திசையானது எப்போதும் (சிவனின் முன்புறம்) அவரை நோக்கியுள்ளது. ஆகவே தட்சிணமூர்த்தி வடிவில் இத்தத்துவம் அடங்கியுள்ளதால் இப்பெருமான் " தட்சிணமுகா " என்று போற்றித் துதிக்கப்படுகின்றார். இவரது காலடியில் உள்ள அபஸ்மார புருஷன் உயிர்களின் அறியாமையின் உருவஅமைப்பாகும். இவ்வறியாமையை இறைவன் தனது திருவடிக்கீழ் அடக்கிவைத்துள்ளார். இவரது கையில் விளங்கும் நூல் (சுவடி) அனைத்து ஆன்மாக்களது அறிவினையும், ஒளிபெறச் செய்யத்தக்கது. இவர்கரத்தில் உள்ள அக்ஷமாலை தத்துவங்களைக் குறிப்பதாகும், குறைவிலா நிரந்தர இன்பமும், சக்தியுமாக இவரது உடல் உள்ளது. விரிந்து படர்ந்த ஆலமரத்தின் இருண்டநிழல் மாயையைக் குறிக்கும். முன்னரே வேதங்களைக் கற்ற முனிவர்களுக்கு " ஆத்மவித்யா தத்துவத்தினை"க் (ஆன்மாக்கள் பற்றிய அறிவு) கற்பிக்கின்றார். சம்சார பந்தங்களிலிருந்து அவர்களை விடுவிக்கின்றார். நிரந்தரமானவரும், பிறப்பு இறப்பு அற்றவருமான தட்சிணமூர்த்திப்பெருமான் கமலாசனம் அல்லது பத்மாசனத்தில் " ஓம் " எனும் வடிவில் காட்சிதருகின்றார்.

தியோகார் – தட்சிணமூர்த்தி (P I. L X X I):

தியோகாரில் உள்ள தட்சிணமூர்த்தியின் திருவுருவமானது மிகவும் குறிப்பிடத்தக்கது. இச்சிற்பத்தில் நடுநாயகமாக இருக்கும் கல்லாலின் கீழ் உள்ள ஓர் மேடையின் மீது அமர்ந்து காட்சி தருகின்றார். இடக் காலானது கீழே தொங்கியும், வலக்கால் ஆசனத்தின் மீது குத்திட்டும் இருக்கின்றன. தலையில் ஜடாபந்தம் காணப்படுகிறது. பின்புற வலக்கரம் அக்ஷமாலையினைத் தாங்கி இருக்க, முன் வலக்கரம் ஞானமுத்திரையாக உள்ளது. பின் இடக்கரம் நீளமான ஒரு பொருளைப் பற்றியபடி உள்ளது.

மேற்படிப் பின்கரத்தில் திகழும் பொருளானது தெளிவாக இல்லை. இது மறைநூல் சுவடியாகவோ அல்லது "கூர்ச்சமாகவோ" (தர்ப்பைக்கட்டு) இருக்கலாம். முன் இடக்கை விஷ்ணுதர்மோத்தரத்தில் கூறியபடி அமிர்தகலசம் தாங்கியுள்ளது. இடையில் உள்ள உடையானது முழங்கால்வரை தொங்குகிறது. இடப்புறத் தோளில் காணப்படும் "கிருஷ்ணஜினம்" எனப்படும் மான்தோலானது வலதுதொடைவரை தொங்கியதாக அமைகிறது. மானின் தலையும் மானின் முன்கால்களும் மிகத் தெளிவாக உள்ளன. "உபவீதம்" என்ற பாணியில் இத்தோல் அணிவிக்கப்பட்டுள்ளது. இப்பெருமானின் முழுத்திருவுருவமானது சற்றே முன்புறம் கவிந்தும், இவரது ஜடையிலிருந்து இரண்டு மூன்று புரிகள் தோளின் மேல் தொங்கியும் உள்ளன. ஆகமங்களில் வலியுறுத்தப் படுவதுபோல் இத்திருவுருவ முக அமைதி அழகுறக்காட்டப் பட்டுள்ளது.

இந்த உருவத்தின் இருக்கையின் கீழ்ப்பகுதியில் – இடக்காலின் அருகில் இரு மான்கள் உள்ளன. இவைகளும் போதனையைக் கேட்கும் பாவத்தில் உள்ளன. இதே விலங்குகள் புத்தரின் தர்ம உபதேசத்தின் போது காணப்படுவது நினைவுகூரத் தக்கதாகும்.

இப்பெருமானின் (தட்சிணமூர்த்தி) பின்புறம் துறவி ஒருவர் தனது இடக்கையில் அக்ஷமாலையுடன் நிற்கின்றார். நுனி சிறுத்த தாடியுடனும் கிரீடம் போன்று, உச்சித்தலையில் கட்டப்பட்ட ஜடையுடனும் இருக்கின்றார். மேலும் பெருமானின் இடப்புறம், ஆலின் கீழ் உள்ள கல் ஆசனத்தில் ஓர் உருவம் காணப்படுகிறது. இது முனிவராகவோ அல்லது வியாக்கியான மூர்த்தியாகவோ இருக்கலாம். பின்னதாகக் கொண்டால் மேலே கூறிய திருவுரு யோக தட்சிணமூர்த்தியாகும். இத்திருவுரு யாது எனத் திட்டமாகக் கூறமுடியவில்லை.

இத்திருவுருவத்தின் வலக்கரம் அக்ஷமாலையைப் பற்றி இருந்தாலும் சின்முத்திரையுடன் உள்ளது. இடக்கரம் "பூ – ஸ்பரிச" முத்திரையில் உள்ளது. நன்கு அலங்கரிக்கப்பட்ட ஜடாமகுடத்துடன் தலையும், மான் தோல் போர்த்திய உடலும் அமைந்து உள்ளன. வலக் கால் இருக்கையின் கீழே பூமியில் ஊன்றியும், இடக்கால் மடித்து ஆசனத்தின் மேலும்

உள்ளன. முழங்காலுக்குக் கீழே தொங்கும் உடையானது கீற்ப்புறம் உள்ளது. முன் கூறியது போலவே இவருக்கும் பின்புறத்தில் வலக்கரத்தில் அக்ஷமாலையுடனும் இடக்கரத்தில் கெண்டியுடனும் ஒரு முனிவர் காணப்படுகிறார். பாய்வதற்கு முன் பதுங்கிப் படுத்திருக்கும் நிலையில் சிங்கத்தின் உருவம் இப்பீடத்தின் அடியில் உள்ளது. சிங்கத்தின் தலையானது நிமிர்ந்தும் அதன் முன் கால்கள் நீட்டியும் காணப்படுகின்றன.

தேவர்களும் கந்தர்வர்களும் இவ்விரு திருமேனிகளைச் சூழப் பறப்பது போலக் காணப்படுகின்றனர். இரு தேவர்கள் மட்டும் தம் கரங்களில் மாலையுடன் விளங்குகின்றனர். இதற்குமேல் தனிநிலையாகப் பிரமன் மட்டும் காணப்படுகின்றார். தமது இருபுயங்களிலும் நான்கு கரங்கள் விளங்க பத்மாசனத்தில் வீற்றிருக்கின்றார். இவரது கரங்கள் சின்முத்திரை அல்லது அபய ஹஸ்தமாக விளங்கும். வலக்கரமும், கமண்டலம் தாங்கிய இடக்கரமும் உண்டு. வலமும் இடமும் வானில் பறந்தபடி பிரமன் புகழ் பாடும் தேவர்களும், இவர்களின் தேவியர்களும், காட்டப்பட்டுள்ளனர்.

ஆலூர் ஆலய தட்சிணாமூர்த்தி :

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆலூர் எனும் தலத்தில் காணப்படும் தட்சிணாமூர்த்திச் சிற்பம் மிக அழகுடன் ஆக்கப்பட்ட ஒன்றாகும். லலாடபட்டாவினால் கட்டப்பட்டுள்ள ஆடை மிக்க வேலைப்பாடு கொண்டது. இடக்காதில் பத்ரகுண்டலமும், வலக்காதில் மகரக்குழையும், மார்பில் யக்ஞோபவீதமும், கழுத்தில் உருத்திராக்க மாலையும் சன்னவீரமும் அதன்கீழ் உதரபந்தமும் காணப்படுகின்றன. உபவீட பாணியின், அவரது மேனியில் வஸ்திரம் அணிவிக்கப்பட்டிருக்கிறது. வல முன்கரம் சின்முத்திரையினைக் காட்டுகிறது. இடது முன்கரம் சுவடிகொண்டு முழங்காலின் மீதும், விளங்குகிறது. வலப் பின்புறக் கரத்தில் நாகமும், பின் இடக்கரத்தில் அக்னியும் காணப்படுகின்றன. வலக்காலானது அபஸ்மார புருஷன் மீது பதிந்திருக்கிறது. இடக்கால் வலத் தொடைமீது வீராசனமாக விளங்குகிறது. இச்சிற்பம் சோழர் காலத்தைச் சேர்ந்ததாகும்.

திருவொற்றியூர் தட்சிணாமூர்த்தி :

திருவொற்றியூர் சிவாலயத்தின் இரண்டாம் பிரகாரத்தில் காணப்படும் மூர்த்தி காலத்தால் பிற்பட்டது. நேர்த்தி இல்லை. கரட்சியின் பரதிபலிப்பும் குறைவு. விசிறி போன்ற அமைப்பில் ஜடைகள் (ஜடாமண்டலம்) உள்ளன. நெற்றியின் மேல் லலாடபட்டம் உள்ளது. முன்னர் கூறப் பட்டுள்ளது போன்ற பொருள்கள் யாவும் கைகளில் விளங்குகின்றன. இவை தவிர, தொழுது அமர்ந்துள்ள நிலையில் ஒரு முனிவரும் உள்ளார். இவர் பத்மபீடத்தில் அமர்ந்துள்ளார்.

சுசீந்திரம் - ஞான தட்சிணமூர்த்தி :

தென் திருவாங்கூர் - சுசீந்திரத்தில் உள்ள சிற்பம் அண்மைக் காலத்தது ஆகும். நல்ல வேலைப்பாடுகளுடன் கூடிய ஜடாமகுடம் இவரது சிரசினை அலங்கரித்தபோதும் ஓரிரு சடைகள் மேலிருந்து கீழாகத் தோளில் தொங்குதலைக் காணுகின்றோம். இம்மூர்த்தி சுகாசனமாக அமர்ந்துள்ளார். வலப் பின்கரத்தில் தாமரையும், இடப் பின்கரத்தில் சர்ப்பமும், விளங்குகின்றன. முன்வலக்கரம் சின் முத்திரையினைக் காட்டுகிறது. முன் இடக்கரம் சுவடி கொண்டு விளங்குகிறது.

காவேரிப்பாக்கம் – தட்சிணமூர்த்தி :

காவேரிப்பாக்கத்தில் உள்ள தட்சிணமூர்த்தி திருவுருவம் பல்லவர் காலத்தைச் சார்ந்ததாகும். இவரது சிரசில் உள்ள அடர்ந்த சுருள் முடிகள் எல்லாம் ஜடாபாரமாக அமையப் பெற்றுள்ளன. வலப் பின் கரத்தில் அக்ஷமாலையும், இடப் பின் கரத்தில் அக்னியும் (?) உள்ளன. முன் வலக்கரம் வியாக்யான முத்திரையுடனும் முன் இடக்கரம் சுவடி ஏந்தியும் விளங்குகின்றன. இப்பெருமான் உத்குடிகாசனத்தில் காட்சிதருகின்றார். இவரது கழுத்தில் இரண்டு ஹாரங்களும் (ருத்திராட்சமாலை, கண்டாபரணம்), மார்பில் யக்ஞோபவீதமும், ஒரு காதில் விருத்த குண்டலமும், மற்றொரு காதில் அணி ஏதும் இல்லாமலும் காணப்படுகின்றன. பெருமானின் கீழ்ப்பகுதியில் உபதேசம் கேட்கும் நிலையில் மான் ஒன்றும், நாகம் ஒன்றும் உள்ளன.

திருவெங்கவாசல் ஞானமூர்த்தி : (Pl. Lxxv)

புதுக்கோட்டை – திருவெங்கவாசல் சிவாலயத்தில் கருப்பக்கிருகத் தென்புறச் சுற்றுச் சுவர் மாடத்தில் (படம் 61) ஞானதட்சிணமூர்த்திப் பெருமான் அருட்காட்சி வழங்குகின்றார். இங்கு இப்பெருமான் "உத்குடிகாசனத்தில் " விளங்குகின்றார். இவரது இடக்கரம் இட முழங்கால் மீது நீண்டு தொங்குகின்றது, திரு. கே. என்பவர் சில வெண்கலத் திருவுருவங்களைச் சேர்த்துவைத்துள்ளார், இந்த ஞான தட்சிணமூர்த்தியின் திருவுருவத்தையும் திருவொற்றியூரில் காணும் தட்சிணமூர்த்தியின் திருவுருவத்தையும் காணவேண்டும். இவைகள் வடிவமைப்பில் ஒன்றுபோலவே உள்ளன. இத் திருவுருவத்தின் பின் கரங்களில் சிறிது மாற்றம் உள்ளன. பின் வலக்கரத்தில் அக்னியும், பின் இடக்கரத்தில் சர்ப்பமும் தாங்கி இடம் வலம் மாறுபட்டுள்ளது என்பதனை அறியவும்.

ஞான தட்சிணமூர்த்தி :

வியாக்யாந மூர்த்தி, ஞானமூர்த்தி திருவுருவங்களின் அமைப்பில் வேறுபாடுகள் அதிகம் இல்லை. ஆனால் ஞானமூர்த்தியின் திருவுருவமானது

பின் வலக்கரத்தில் அக்ஷமாலை இருக்க வேண்டும். பின் இடக் கரத்தில் " உத்பலாமலர் " தாங்கி இருக்க வேண்டும். முன் வலக்கரமானது ஞான முத்திரையுடனும், முன் இடக்கரமானது அபய முத்திரையுடனும் அமைதல் வேண்டும்.

யோக தட்சிணமூர்த்தி :

முதல் அமைப்பு :

இத்திருவுருவம் மூன்றுவித வடிவமைப்புகளில் அமையப்பெறு கின்றன. " ஸ்வஸ்திகாசன நிலையில் " இரு கால்கள் அமைந்தும், முன் வலக்கரம் மார்புக்கருகே யோக முத்திரையிலும், முன் இடக்கரம் மடிமீது யோக நிலையிலும் அமைந்தும் இருக்கும். பின் வலக்கரத்தில் அக்ஷமாலையும், பின் இடக்கரத்தில் தாமரைமலரும் இருக்கும். பார்வையானது மூக்கின் நுனியினைப் பார்த்தவாறும், கீழ் நோக்கித் தொங்கும் சில ஜடைகள் தோள் மீதும் காணப்படும். இப்படியாக அமைந்த இத்திருவுருவத்தைச் சூழ முனிவர்கள் பலர் தொழுது நிற்குமாறு அமைத்தல் வேண்டும்.

இரண்டாவது அமைப்பு :

இந்த இரண்டாவது அமைப்பு முறையில் காணப்பெறும் யோக மூர்த்தியின் திருவுருவம் இடக் கால் மடித்து உத்குடிகாசன நிலையில் இருக்கும். உடலையும், இடக்காலையும் இணைத்துக்கட்டப்பட்ட யோக பட்டையானது விளங்கும். வலக்காலானது ஆசனத்தின் கீழே தொங்கும் நிலையில் காணப்படும். முன் இடக்கரமானது நீட்டப் பட்டு, மடக்கப் பட்ட முழங்கால் மீது விளங்கும். மற்ற உருவ அமைப்புகள் யாவும் முதல் அமைப்பு சிற்பத்துக்குக் கூறப்பட்டது போலவே இருக்கும்.

மூன்றாவது அமைப்பு :

இந்த மூன்றாவது அமைப்பு முறையில் காணப்பெறும் யோக மூர்த்தியின் கால்கள் வளைந்து பின்னி இருக்கும் (யோக நரசிம்மர் போல,) (தட்சிணமூர்த்தி – முதற்பாகம் – 27ம் பக்கம் காண்க). கால் களையும் உடலையும் (இடுப்புப் பகுதி) யோக பட்டத்தால் பிணைக்கப் பட்டிருக்கும். முன் இருகரங்களும் நீட்டப்பட்டு முழங்கால் மேல் வைக்கப்பட்டிருக்கும், பின் வலக்கரத்தில் அக்ஷமாலையும், பின் இடக்கரத்தில் கமண்டலமும் விளங்க வேண்டும். ஜடாமண்டலத்தின் முன்புறச் ஜடைப்பகுதியில் பிறைச்சந்திரனும், சர்ப்பமும் பிறவும் அமைத்தல் வேண்டும். இந்நிலையில் உள்ள படிமத்தின் உடல் வெண்மை நிறமாகவும், ஆனால் கழுத்து மட்டும் கருமை நிறமுள்ளதாகவும் அமைத்தல் வேண்டும். இத்திருவுருவத் திருமேனியில் அணிகளும், பாம்பு களும் ஆபரணங்களாக விளங்க அமைத்தல் வேண்டும்.

திருவொற்றியூர் தட்சிணமூர்த்தி : (PI. LXXVI)

திருவொற்றியூர் சிவாலயத்தின் தென் பிரகாரத்தில் தட்சிணமூர்த்திப் பெருமான் யோகாசனத்தில் (படம் – 62 – மேல்பகுதி) அமர்ந்துள்ளார். இத் திருக்கோயிலின் சுவரில் உள்ள கல்வெட்டுகள் யாவும் இப்பெருமானை படம்பக்க நாயனார் என்று கூறுகின்றன. சோழமன்னர் வீரராஜேந்திர தேவரால் (கி. பி 1067 – 68) இத்திருக்கோயிலானது திருப்பணி செய்யப் பட்டதாகத் தெரியவருகிறது. மூல மண்டபத்தின் தென்புறத்தில் அமைந்த இத்திருவுருவத்தினை, நோக்கும்போது முதல் வடிவமைப்பாகக் கூறியுள்ள ஞானமூர்த்தியின் வடிவமைப்பாகவே விளங்குதலால் இப்பெருமானை ஞான தட்சிணமூர்த்தி என்றே துணிந்து கூறலாம். வேலைப்படுகள் அமைந்த இப்பெருமானின் ஜடைகள் எல்லாம் ஒரு சேர அமைந்து "ஜடாமகுடமாக" விளங்குகிறது. காதுகளில் குண்டலமும், கழுத்தில் ஹாரமும், உருத்திராக்க மாலையும் அணிசெய்ய யக்ஞோபவீதம் திருமார்பில் எடுப்பாக விளங்கப் பெருமான் காட்சிதருகின்றார். இப்பெருமான் "ஸ்வஸ்திகாசனத்தில் உள்ளங்கால் தெரிய அமர்ந்துள்ளார், பின் வலக்கரத்தில் சூலம் இருந்திருக்க வேண்டும். ஆனால் சூலத்தின் மேற்பகுதி சிதைந்து அடிப்பாகம் மட்டுமே தற்போது காணப்படுகிறது. பின் இடக்கரத்தில் கபாலம் இருக்கிறது. முன்வலக்கரம் சின் முத்திரையினைக் கர்ட்டுகிறது, முன்இடக்கரம் ஞான ஆசானுக்குரிய பாவத்தில் உள்ளது. தற்காலம் பொருள்விளங்காத "குலீஸ்வரர்" என எழுதப்பட்டுள்ளது.

காஞ்சி கைலாசநாத சுவாமி ஆலயச்சிற்பம் (PI. LXXVII):

இரண்டாவது (படம் – 62 – மேல்பகுதி) வடிவமைப்பைச் சேர்ந்த இச் சிற்பத்தில் சிவன் தன் இடக்காலை மடித்து இருக்கைமீது குத்திட்டு வைத்துள்ளார். இக்காலும் உடலும் யோக பட்டையால் பிணைக்கப் பட்டிருக்கிறது. முன் வலக்கரமானது யோக முத்திரையினைக் காட்டுகிறது. முன் இடக்கரமானது அபய ஹஸ்தமாக விளங்குகிறது. பின் வலக்கரம் அக்ஷமாலையினைப் பற்றியிருக்கிறது, பின் இடக்கரம் அக்னியை ஏந்தி யுள்ளது. சில ஆகமங்களில் பின் கரத்தில் தாமரையினை ஏந்தியிருப் பதாகவும் சொல்லப்படுகிறது. இவரது வலக்கால் ஆசனத்திலிருந்து இறங்கி கீழே தொங்கவும், ஆலின் நிழலில் முன் கூறிய சிற்பங்கள் போலவே அமர்ந்துள்ளார். சிவனை நோக்கியவாறு மான்கள் அவரது திருவடிக் கீழ் உள்ளன. முன் வலக்கரத்தில் படம் எடுத்த நாகம் உள்ளது. இதுவும் இறைவனை நோக்கியபடி உள்ளது. இவ்விறைவனின் தலையின் இருமருங் கிலும் இரு பூதங்கள் அமர்ந்துள்ளன. மேலும் இச்சிற்பத்தின் இருபுறமும் அமைந்துள்ள சுவரின் மாடத்தில் முனிவர்கள் அமர்ந்துள்ளனர். இவர்கள் பெருமானின் யோக விளக்கத்தைச் சிரத்தையுடன் செவி ஏற்கும் தோற்றத்தில் உள்ளனர். இக்கோயிலில் உள்ள மற்றொரு தட்சிணமூர்த்தி யின் சிற்பம் பத்ர பீடத்தில் காணப்படுகிறது. இப்பீடம் ஒரு மலைமீது காணப்படுகிறது. பெருமானின் வலக்கரத்தில் சர்ப்பத்தினைக் காண் கிறோம்.


PLATE - LXXVI
PLATE - LXXVII
PLATE - LXXVIII
PLATE - LXXIX



பக்கம் - 14.



நஞ்சன்கோடு யோகதட்சிணமூர்த்தி
படம்-63 — பக்கம்-17



பாதாமி - வீணைதர அர்த்தநாரீஸ்வரர்
படம்-64 — பக்கம்-19



முவலூர் — குருமூர்த்தி

படம் - 65 பக்கம் - 20



முவலூர் — திருக்கோயிலின்

திருமாளிகைப்பத்தில் — தட்சிணமூர்த்தி

படம் 102 பக்கம் - 20

மைசூரில் உள்ள நஞ்சன்கோடு ஆலய யோக தட்சிணமூர்த்தி :
(Pl Lxxlx)

மைசூரில் உள்ள நஞ்சன்கோடு ஆலய தட்சிணமூர்த்தியின் திருவுருவம் மூன்றுவதாகக் கூறப்பட்ட வடிவமைப்பான — " உக்குடி காசன " முறையில் அமர்ந்துள்ளதாகக் கூறலாம். கால்கள் உடலோடு யோக பட்டையினால் பிணைக்கப்பட்டுள்ளன. அவர் அமர்ந்துள்ள நிலையிலிருந்தே (படம்-63) யோக தட்சிணமூர்த்தியாகிறார். பின் இடக் கரத்தில் வீணை உள்ளதால் வீணாதர தட்சிணமூர்த்தியாகிறார். முன் வலக்கரம் சின்முத்திரை காட்டுகிறது. முன் இடக்கரம் நூலினைத் தாங்கியுள்ளது. எனவே வியாக்கியான தட்சிணமூர்த்தியாகிறார். மேற்சொன்ன மூன்று வகை வடிவமைப்புகளும் சேர்ந்த இச்சிற்பம் சிறப்பாக இங்கு அமைந்துள்ளது. ஆலின் கீழ் அமர்ந்துள்ள இவர் முன்பு ரிஷபம் உள்ளது. இது இறைவன் அமர்ந்துள்ள பீடத்தின் முன்பாக அமைந்துள்ளது. இப்பெருமான் ஆசனத்தின் கீழ், பீடத்தின் மத்தியில் இடக்கையில் லிங்கம் ஒன்றினை ஏந்தியபடி லிங்காயத்துக் குருக்கள் ஒருவர் அமர்ந்துள்ளார். இவரைக் குருவாகக் கொண்டு இருபுறமும் இவரது சீடர்கள் அஞ்சலி ஹஸ்தர்களாக இருக்கின்றார்கள். தட்சிணமூர்த்திக்குப் பின் " பிரபாவளி " உள்ளது. இதன் இருமருங்கிலும் பக்கத்திற்கு ஒருவராக முனிவர்கள் அஞ்சலியுடன் காணப்படுகின்றனர்.

வீணாதர தட்சிணமூர்த்தி :

குரல் இசையையும், கருவி இசையையும் போதிக்கும் பேராசானாக இறைவன் போற்றப்படுகின்றான். இம்மூர்த்தியின் வடிவமைப்புகளைப் பற்றிக் காமிகாகமம், அம்சுமானாகமம், காரணாகமம் முதலான ஆகம நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அம்சுமானாகமம் – இடக்கால் உத்குடிகாசன நிலையில் இருக்க வேண்டும் என்கிறது. முன் இரு கரங்களும் வீணைஏந்தி இருக்க, மற்ற இரு கரங்களும் வியாக்கியான மூர்த்தி போல் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

காமிகாகமம் – ஞான தட்சிணமூர்த்தியின் முன்புறமுள்ள வல இடக்கரங்கள் " கடக " பாவத்தில் இருக்க வேண்டும் என்கிறது. வல உள்ளங்கை கீழ்ப்புறமும், இடஉள்ளங்கை மேல்புறமும் நோக்கியிருக்க வேண்டும் என்கிறது. கடக முத்திரையிலிருந்து சற்றே வேறுபடும் முத்திரையினைச் சர்ப்பகரம் என்று காமிகாகமம் கூறுகிறது.

இடக் கரம் உயர்ந்து, வலக்கரம் அதற்குச் சற்றே தாழ்ந்து நீண்ட வாத்தியமான வீணையினை முறையாகப் பிடிப்பது போல் இருக்க வேண்டும். வீணையின் நுனியை இடக்கரமானது பற்றி இருக்கவும், வலக்கரம் அதன் அடிப்பாகத்தைப் பற்றி இருக்கவும் வேண்டும்.

வீணையினை எவ்வாறு ஏந்தி இருத்தல் வேண்டுமென்பது பின் வருமாறு கூறப்படுகின்றது. வீணையானது வலத் தொடையில் இருந்து மூன்று அங்குலம் நீண்டு இருக்க வேண்டும். கடக ஹஸ்தம் உள்ள இடக்கரத்திற்கு, நான்கு அங்குலம் மேலே இருக்க வேண்டும். இவ்விரு புள்ளிகளின் இடையே உள்ள தூரம்தான் வீணையின் தண்டுப்பகுதியின் நீளமாகும்.

பொதுப்படையான சில கருத்துக்கள் :

தட்சிணமூர்த்திப் பெருமானின் முகம் " சந்தர்சன " முத்திரையில் உள்ள கரத்தின்பக்கம் திரும்பி இருக்க வேண்டும், பார்வையும் இக்கரத்தில் படிய வேண்டும். தட்சிணமூர்த்தியினைச் சுற்றிப் பலவித மிருகங்களும், ஊர்வனவும், முனிவர்களும், சித்தர்களும், மாணவர்களும், பூதகணங்களும், கின்னரர்களும் பொறிக்கப்பட்டிருக்கவேண்டும். நன்கு வளர்ந்த மரங்கள் அடர்ந்த குன்றில் ஆலமரநிழலில் இப்பெருமானின் திருவுருவம் இருக்கவேண்டும். ஆசனமானது வேலைப்பாட்டுடன் கூடிய தாகவும், அதில் புலித்தோல் விரிக்கப்பட்டதாகவும் இருக்கவேண்டும். அதில் சிவபிராணகிய தட்சிணமூர்த்திப் பெருமான் கருணைப் பொலிவோடு தோன்ற வேண்டும். இப்பெருமானைச் சுற்றி " சிவாத்விஜாக்களின் " (சிவப்பிராமணர்கள்) முன்னோர்களான ரிஷிகள் அமர்ந்திருக்கவேண்டும், தட்சிணமூர்த்தியின் திருவுருவம் நின்ற கோலம் அல்லது அமர்ந்த கோலம் ஆகிய இரு நிலையிலும் இருக்கலாம். பெருமானின் திருவடிகள் அபஸ்மாரபுருஷன் மீது ஊன்றியும், ஊன்றாமலும் இருக்கலாம் ஆலமரமும், பூதமும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்.

சென்னை – அருங்காட்சியக வீணைதர தட்சிணமூர்த்தி :

(P. L. Lxxxl. Lxxx)

சென்னை அருங்காட்சியகத்தில் வீணைதர தட்சிணமூர்த்தியின் வெண் கலத்திருவுரு ஒன்று உள்ளது. இம்மூர்த்தியின் வலத்திருவடி பூமியில் ஊன்றி இருக்க, இடத்திருவடி சற்றே வளைந்து முன்புறம் வைக்கப் பட்டுள்ளது. மூன் இரு கரங்களும் " கடக " முத்திரையில் உள்ளன. இடக்கரம் மேல் நோக்கியும், வலக்கரம் கீழ் நோக்கியும் உள்ளன; தனியே வீணை ஒன்று செய்து இருகரங்களிலும் பொருத்த இருந்தனர் எனப் புலனாகிறது. ஆனால் வீணைகாணப்படவில்லை. பின் வலக்கையில் பரசும், பின்இடக்கையில் மானும் (மிருகா) உள்ளன. இத்திருமேனியில் வேலைப்பாடுள்ள அணிகலன்கள் அணிவிக்கப்பட்டுள்ளன. இது போன்ற அமைப்புள்ள மற்றோர் (படம்-62 – கீழ்ப்பக்கம்) வெண்கலத் திருவுருவம் தஞ்சை மாவட்டம் – வடரங்கத்தில் (கொள்ளிடக்கரைக்கு அருகில் சீர்காழி வட்டம்) உள்ளது. இத்திருவுருவம் காலத்தால் முற்பட்டதும் கலைநயம் கொண்டதுமாகும்.

அர்த்தநாரீஸ்வர வீணைதரமூர்த்தி :

பாதாமி குடைவரைக் கோயிலில் வீணைஏந்திய அர்த்தநாரீஸ்வர மூர்த்தியின் திருவுருவத்தைக் காணலாம். இத்திருவுருவத்தின் முன்வலக் கரத்தில் (படம் – 64) பரசு உள்ளது. இதனை நாகம் ஒன்று சுற்றிக் கொண்டுள்ளது. புஜத்தில் சர்ப்ப வலையத்தை அணிந்திருக்கின்றார். மற்றொரு வலக்கரத்திலும் இடக்கரத்திலும் வீணையினை ஏந்திக் காட்சி தருகின்றார். மற்றொரு புஜத்தில் அரவு சுற்றி உள்ளது. வலக்காதில் சர்ப்ப குண்டலம் உள்ளது. இத்திருவுருவச் சிரசின் வலப்பாகத்தில் பிறைச் சந்திரனும் மண்டையோடும் தாங்கிய ஜடாமகுடம் விளங்குகிறது.

அழகிய கலைநுட்பத்துடன் கூடிய கழுத்து அணியும், மார்பில் யக்ஞோபவீதமும் உள்ளன. வலப்புறம் மான் தோலானது இடுப்பு வரை அணிவிக்கப்பட்டுள்ளது வேலைப்பாடுள்ள பீடத்தின் மீது சற்று வளைந்தபடி "கரண்டமகுடத்தோடு" இடப்புறம் அம்பிகை காணப்படுகின்றாள். கொண்டையில் கல்பதித்த ஆபரணங்களும், ஆபரணங்களுடன் கூடிய ஜடையும், புஜங்களில் பல கங்கணங்களும் காணப்படுகின்றன. கணுக்கால்வரை நீண்டு உள்ள பட்டாடையைப் பிடித்திருக்கும் மேகலையும் உள்ளது. முன்காலில் சிலம்பு இருக்கின்றது. இடக்கரத்தில் நீலோற்பல மலரும் காணப்படுகிறது, சிரசினைச் சுற்றி "பிரபமண்டலம்" உள்ளது, வீணைதர அர்த்த நாரீஸ்வரரின் இடப்பாகத்தில் பணிப்பெண் இருக்கின்றாள். இடக்கையை மடித்தும் அதில் பாத்திரம் ஒன்றினைத் தாங்கியும் உள்ளாள். பலவித ஆபரணங்கள் அணிந்து உடலில் மெல்லிய ஆடை உடுத்தியிருக்கின்றாள். கூந்தலானது "தம்மில்லா" முறையில் கொண்டையாகக் கட்டப்பட்டிருக்கிறது.

வலப்புறத்தில் விளங்கும் ரிஷபமானது நிலத்தின் மீது தனது பார்வை படிய சாத்வீகமாக உள்ளது. ரிஷபத்தின் பின்புறம் மனித உருவம் ஒன்று காணப்படுகிறது. உடலானது மெலிந்து காணப்படுவதால் பைரவராகவோ அல்லது பிருங்கி முனிவராகவோ இருக்கலாம் என யூகிக்கப்படுகிறது. மேலும் இவரது கரங்கள் அஞ்சலி ஹஸ்தமாக உள்ளன. அர்த்த நாரீஸ்வர வீணைதரமூர்த்தியின் தலைப்பகுதிக்கு மேல் தேவர்கள் பறந்தபடி துதித்தவாறு உள்ளனர். இம்மூர்த்தியானவர் நிற்கும் பீடத்தின்கீழ் சில கணங்கள் நாட்டியமாடும் நிலையிலும், சில கணங்கள் இசைக்கருவிகளை மீட்டும் நிலையிலும் உள்ளன. காணவேண்டிய கலைச் சிற்பங்களில் இம்மூர்த்தியானவர் முதன்மை பெற்று விளங்குகின்றார்.

மூவலூர் - குருமூர்த்தி

*மூவலூர் எனும் தலம் கும்பகோணம் - மயிலாடுதுறை கற்சாலையில் உள்ளது, இத்தலம் வைப்புத்தலமாக போற்றப்படுகின்றது. இங்கு அருள் வழங்கும் பெருமானின் திருநாமம் ஸ்ரீ மார்க்கசகாயேசுரர் என்பதாகும். இத் திருக்கோயிலின் கருப்பக்கிருகத் தெற்குத் தேவகோஷ்ட மாடத்தில் (படம் – 65) சிற்பியின் கைத்திறத்தால் அமைந்த ஜகத்குருவாக விளங்கும் தட்சிணமூர்த்தியின் திருவுருவ அழகினைக்கண்டு கொண்டே இருக்கலாம். ஆனந்தத்தின் மேலீட்டால் ஆடல் வல்லானின் சடைகள் விரிசடையாக இருப்பதை நாம் ஆலயங்களில் கண்டிருக்கின்றோம். ஆனால் இங்கோ ஞானத்தின் மோன நிலையாதலால் விரிசடைகள் எல்லாம் அமைதியாக (மேலிருந்து கீழ்நோக்கி) அப்படியே செயலிழந்து ஜடாபாரமாகக் காட்சிதருகின்றன. இவர் பின் கரங்களில் நாகமும், அக்கினியும் ஏந்தி முன் கரங்களில் சின் முத்திரையும், சுவடியும் விளங்க சர்வாபரணமும் அணிந்து வீராசனத்தில் எழுந்தருளியிருக்கிறார். இத்திருவுருவத்தின் உயரம் சுமார் 3½ அடியாகும். இங்கு கல்லாலமரம் காணப்படவில்லை. பெருமான் வீற்றிருக்கும் மலையின் இடப்பக்கம் கட்டீரமான தோற்றத்துடன் நந்தியம் பெருமான் அமர்ந்த நிலையில் உள்ளார். அதற்கு மேல் யானையின் முகமும், கீழ்ப் பகுதியில் சிங்கமும், மான்களும், விளங்குகின்றன. பெருமான் தனது வலப்பாதத்தினை மிரண்டுஓடும் முயலகன் முதுகில் பதிய ஊன்றியுள்ளார். அவன், அழுத்தம் தாங்க மாட்டாமல் எழமுயலுகின்றான். முயலகன் தலைக்கு மேல் பகுதியில் கொம்புடைய மான் செயலற்று நிற்கின்றது. பக்கச்சுவரின் வலப்பக்கம் இருமுனிவர்களும், இடப்பக்கம் இருமுனிவர் களும் அமர்ந்துள்ளனர்.

திருவாவடுதுறைக்கு எழுந்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஸ்ரீ மாசிலாமணிப் பெருமானைத்துதித்து வழிபடும் போது, மூவலூர்ப் பெருமானை நினைவு கூர்ந்து " வானநாடனே வழித்துணை மருந்தே " (வழித்துணைநாதர் என்ற பெயரும் மூவலூர்ப்பெருமானுக்கு உண்டு) என்று பாடிப்பரவினர் போலும்.

---

* (இந்த வைப்புத்தலமாகப் போற்றப்படும் மூவலூர் தலத்தில்தான் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வராகிய ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள், திருக்கோயிலின் கீழைவீதியில் தேர் நிலைக்கு அருகில் உள்ள வளாகத்தில் திருவவதாரம் செய்தார்கள். அவதாரத் தலத்தில் அவர்கள் வழிபட்ட ஸ்ரீ அம்பலவாணவிநாயகர் ஆலயமும், அவரது திருப் பெயர் கொண்ட நூலகமும் (ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் நூலகம்) உள்ளன.)

திருப்பணி :

இந்த ஆலயம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருப்பணி செய்யப்பட்டதாகும். திருநாவுக்கரசு சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளிய பாக்களில் இத்தலத்தின் சிறப்பினை உணரலாம். விக்கிரமசோழன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசேந்திரன், பாண்டியன் ஸ்ரீ வல்லபன், விஜயநகர – வீரவிருப்பண்ண உடையார், அச்சுததேவராயர், தஞ்சை நாயக்க மன்னர்களான அச்சுதநாயக்கர், சேவப்பநாயக்கர் ஆகிய மன்னர்கள் இத்திருக் கோயில் திருப்பணிகள் பல செய்து, நிவந்தம் அளித்த செய்திகளை இவ்வாலயத்தில் உள்ள கல்வெட்டுகள் நமக்கு உணர்த்துகின்றன.

திருமாளிகைப்பத்தியில் மற்றொரு மூர்த்தி :

இத்திருக்கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் (முதல் ஆவரணத்தில்) உள்ள திருமாளிகைப்பத்தியில் காலத்தால் முற்பட்ட தட்சிணாமூர்த்தியின் (படம் – 102) திருவுருவம் ஒன்று காணப்படுகிறது. ஜடாமண்டலத்துடன் காணப்படும் இவரது பின்கரங்கள் அக்கினியையும் சுடரையும் ஏந்தியுள்ளன. முன் வலக்கரம் சிதைந்து உள்ளது. (இக்கரம் ஞானமுத்திரையினைக் கொண்டிருக்கும்) முன் இடக்கரம் சுவடியினை ஏந்தியுள்ளது. பத்ர பீடத்தில் வீராசனம் கொண்டு திகழும் இவர் கழுத்தில் கண்டாபரணத்தையும், மார்பில் யக்ஞோபவீதத்தையும் கொண்டுள்ளார். கால்களில் காப்புகள் திகழ்கின்றன. இந்த ஞானமூர்த்தியினைக் காணும் போது இப்பெருமான் இவ்வாலயத்தின் மிகப்பழமையான மூர்த்தியாக இருக்கலாம் என்ற ஐயம் ஆராய்ச்சியாளர்களின் மத்தியில் நிலவுகின்றது. இருப்பினும் இவ்வாலயத்தில் இருதட்சிணாமூர்த்திகளைக் காண்பது உண்மை நிலையினை உணரத்தூண்டும்.

அம்பிகை வழிபடும் யோக மூர்த்தி

இத் தென்முகக் கடவுளின் திருவுருவம் (படம் - 66) காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் உள்ளது. இது போன்ற திருவுருங்கள் பல நிலைகளில் அந்த ஆலயத் தூண்களிலும் காணப்படுகின்றன. ஜடாமகுட தாரியாகவும் சாந்த முகத்துடனும் விளங்கும் யோகப் பெருமானது மார்பில் யக்ஞோபவீதமும், மகரகண்டியும் கழுத்தில் ஒரு உருத்திராக்கமும் காணப் படுகின்றன. ஜடாமகுடத்தில் சந்திரன் காணப்படுகிறது. வீராசனத்தில் விளங்கும் இப்பெருமான் சற்று சாய்ந்த அமைப்பில் உள்ளார். பின் இரு கரங்களில் மானும், மழுவும் ஏந்தியுள்ளார். பின் இரு கரங்களை மேல் முகமாக இணைத்தாற்போன்றும் மகுடத்திற்கு, மேலும் அழகு செய்வ தாகவும் உள்ள மாலையும் காணப்படுகிறது. காதுகளில் மகரக்குழையும், காதோலையும் அணிசெய்கின்றன. இடுப்பிலிருந்து கணுக்கால் வரை வஸ்திரம் அணிவிக்கப்பட்டுள்ளது. இவரது முன் வலக்கரம் ஜபமாலையுடன் கூடியதாக அமைந்த ஞான முத்திரையுடனும், முன் இடக்கரம் தண்ட ஹஸ்தமாக உள்ள யோக முத்திரையினைக் கீழ்நோக்கிக் காட்டியவாறும் அமைந்துள்ளன.

இப் பெருமானின் வலப்பக்கம் ஞானமுத்திரையினைத் தாங்கிய நிலையில் படமெடுத்த நாகம் காணப்படுகிறது. முனிவர்கள் இருவர் அமர்ந்த நிலையிலும் ஒரு முனிவர் நின்ற நிலையிலும் காணப்படுகின்றனர். மலையின் மீது அமர்ந்து யோகநிஷ்டையில் விளங்கும் பெருமானின் வலப்பக்கம் உமாதேவியார் சர்வாபரணங்களுடன் உடம்பைப் பணிவாக வளைத்த நிலையில் இருந்துகொண்டு பக்தியுடன் தனது வலக்கரத்தால் பெருமான் திருநெற்றியில் திலகம் (சந்தனம்) வைத்து ஆராதிக்கின்றாள். பெருமானின் வலத்திருவடிக்கீழ் தருமத்தின் திருவுருவான ரிஷபம் அமர்ந்த நிலையில் உள்ளது. இந்த புடைப்புச் சிற்பத்தை பத்மமானது (தாமரை) தாங்கியுள்ளது. இத்தகைய அமைப்பு வேறு எங்கும் காணாத வகையில் இங்கு அமைந்துள்ளது.



ஆதி கோமுக்தீஸ்வரர் - விமானத்தில் ஞானமூர்த்தி

திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயிலின் இராஜகோபுர வாயிலுக்கு அருகே (உட்பக்கம்) வலப்பக்கம் ஒரு தனிக்கோயில் விளங்குகின்றது. இதுவே ஸ்ரீ ஆதிகோமுக்தீஸ்வரர் திருக்கோயில் ஆகும். கருப்பக்கிருகமும், முகமண்டபமும் விளங்க ஏகதள விமானத்துடன் இக்கோயில் விளங்குகின்றது. விமானத்தினைச் சுற்றிலும் (படம் – 67) எட்டு நந்திகளும் பூதங்களும் காணப்படுகின்றன. இத்தலம் திருநந்தித் தலம் என்று போற்றப்படுவதால் மதிற்சுவரில் நந்தியின் உருவத்தைக் காணமுடியாது. அதற்கு மாறாக மதிற்சுவர் நந்திகளெல்லாம் ஒன்று சேர்ந்து விஸ்வரூபமாக அதிகார மூர்த்தியாக விளங்குகின்றார் என்பது இத்தல புராண வரலாறு ஆகும். (துறைசைப் புராணத்தில் விளக்கம் காண்க) இத்தகைய சிறப்பு பொருந்திய இக்கோயிலின் விமானத்தின் தென் பகுதியில் மௌனமூர்த்தியினைக் காணலாம். இது ஓர் சுதைச்சிற்பமாகும். திருமுடியில் மூன்றாம் பிறைச்சந்திரன் விளங்கப் பெருமான் தன் வலத் திருவடியினைச் சற்று முன்னேக்கியபடி நீட்டியும் முயலகனது முதுகின் மீது திருப்பாதப்படமானது பதியவும் அமர்ந்துள்ளார். இடக்கால் குத்திட்டு அதன் மேல் தண்ட ஹஸ்தமான முன் இடக்கரத்தை வைத்துள்ளார். ஞானமுத்திரையினைக் காட்டும் முன் வலக்கரமானது சற்றுமாறுக இங்கு பூமியைத் தொட்டவாறு காணப்படுகிறது. பின் கரங்களில் மானும் மழுவும் காணப்படுகின்றன. நினைத்த ஒன்றினை சிந்தனைக்குக் கொண்டு வருதல் போன்ற ஒரு யோக முறையினை இவரது திருவுருவத்திலிருந்து நாம் உணருகின்றோம். சிந்தனையாளர்களும், ஞானவான்களும் ஏகாந்தமாகத் தனிமையான இடத்தில்தான், இப் பெருமானின் உருவ அமைதி போல இருப்பது உண்டு. உலகத்திற்கே ஆதி மூர்த்தியாக விளங்கும் இம்மோன மூர்த்தியை இங்கே கண்டு அனுபவிக்கலாம். மேலும் இத்திருக்கோயிலின் தென்வாயிற் பகுதியில் (கற்சிற்பங்கள்) அருங்காட்சியகம் அமைப்பதன் பொருட்டு, தொகுத்து வைக்கப் பெற்ற பல்வேறுபட்ட தெய்வத் திருவுருவங்களைக் காண்லாம். இவற்றில் மூன்று தட்சிணாமூர்த்தி உருவங்கள் நல்லூர் கோயிலிலிருந்து இடைக்கப்பெற்றனவாகும். அந்தத் தட்சிணாமூர்த்தியின் திருவுருவங்களின் அமைதியினை இங்கு வருகை புரிவோர் கண்டு மகிழலாம்.

மாமல்லபுரம் - வீணுதர சிவன்

மாமல்லபுரம் எனும் மகாபலிபுரம் சென்னைக்குத் தெற்கே 55 கி. மீ தொலைவில் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள ஒரு சிற்றூராகும். இங்குள்ள கோயில்கள் அனைத்தும் குடைவரை மற்றும் கட்டுமான நிலையில் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிற்பமும் நமக்குப் பிரமிப்பை ஊட்டுவதாகவும் அழகின் செறிவாகவும் அமைந்துள்ளது.

இது பல்லவர் காலத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு கடற்கரைப் பட்டினமாகவும், துறைமுகமாகவும் விளங்கியது. இதற்குக் "கடன் மல்லை" என்ற பெயரும் உண்டு. இது பல்லவர் காலத்தில் பேரரசுக விளங்கிய முதலாம் நரசிம்மவர்மன் (கி. பி. 630 – 668) காலத்தில் மிகவும் செல்வச் செழிப்புடனும் பெரும் புகழுடனும் விளங்கியது. மேலை நாட்டினருக்கும், கீழை நாட்டினருக்கும் இது சிறந்த வணிகத் தலமாக இருந்தது.

நரசிம்மவர்மன் என்பவன் தன் தந்தை மகேந்திரவர்மனைப் போலவே கலைத்துறையிலும், வணிகத்துறையிலும் சிறந்து விளங்கினன். பல்லவர்கள் காலத்துக்குச் சற்று முன்பு தமிழகத்துக் கோயில்கள் செங்கற்களாலேயே கட்டப்பட்டுவந்தன. பல்லவர்கள் காலத்தில் தான் கருங்கற்கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்களைக் கட்டும்போது தனித்தனிக் கருங்கற்களை இணைத்துச் சுவர் எழுப்பியும், நீண்ட கருங்கற்களைக் கொண்டு மேற்கூரை வேய்ந்தும், தூண்கள் வைத்தும் கட்டப்பட்டன. விமானம் கோபுரம் முதலிய நுட்ப வேலைப்பாடுகள் செய்யும் போது அவற்றைச் செங்கற்களைக் கொண்டு செய்தும் அவற்றில் எழில்மிக்க சிற்பங்களைச் சுதை வேலைகளாகச் செய்தும் வண்ணம் தீட்டியும் கோயிலுக்கு எழிலூட்டினர்.

கலையார்வம் கொண்ட நரசிம்மவர்மன் கைதேர்ந்த சிற்பிகளைக் கொண்டு நூதனமாகப் பெரிய சிறிய கற்பாறைகளை உச்சிமுதல் சேதம் ஏற்படாதவாறு குடைந்து பெரியதும் சிறியதுமான ரதங்களின் அமைப்பில் கோயில்களை அமைத்தான். இவற்றிற்குக் குடைவரைக் கோயில்கள் என்று பெயர்.

அதாவது மலையைக் குடைந்து செய்யப்பட்ட கோயில்கள் என்று பெயர். இத்தகையனதான் மாமல்லபுரத்தில் (மகாபலிபுரம்) கடற்கரை ஓரமாக அமைந்த குடைவரைக் கோயில்கள். இவற்றைப் பஞ்சபாண்டவ ரதங்கள் என்றும் திரௌபதி ரதம் என்றும் குறிப்பிடுகின்றனர்.



மகாபலிபுரம் தருமர்ரதம் (மாடத்தில்)
ஸ்வதிகாசன விஷ்ணுதர சிவன்
படம் - 68 பக்கம் - 25



மகாபலிபுரம் தருமர்ரதம் (மாடத்தில்)
வைதஸ்திக ஸ்தானத்தில்
விஷ்ணுதரர்



ஸ்ரீ ஞானதக்ஷிணமூர்த்தி
ஐயாரப்பர் ஆலயம்
மயிலாடுதுறை

படம் - 70 பக்கம் 27



திருவீழிமிழலை
ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி
(முயலகன் இல்லாமல்)

படம் - 71 பக்கம் 28



திருப்பெண்ணாகடம் சுடர்க்கொழுந்துநாதர் திருக்கோயில்

ஞானமூர்த்தி

படம் - 72 — பக்கம் 30



காஞ்சிபுரம்
அம்பிகை வழிபடும்யோகமூர்த்தி
படம் - 66 பக்கம் - 22



திருவாவடுதுறை
ஆதிகோமுக்தீஸ்வரர் — விமானத்தில் —
ஞான முர்த்தி (சுதைச்சிற்பம்)
படம் - 67 பக்கம் - 23

அவற்றுள் ஒன்று தருமர்ரதம் என்பது. அதன் வெளிச்சுற்றுப் பகுதி மாடங்களில் இரண்டு வீணைதர தட்சிணமூர்த்தியின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. இவ் வீணைதரர் நின்ற நிலையில் விளங்குகின்றார். இத்திருவுருவத்தினை விவரிக்கின்ற வரலாற்றுப் பேராசிரியர் திரு. கோபிநாத ராவ் வீணைதரசிவன் என்றே குறிப்பிடுகின்றார். மேலும் மற்றொரு வீணைதரசிவனும் உள்ளார். ஆகமூன்று திருவுருவங்களை மகாபலி புரத்தில் காணலாம்.

ஸ்வஸ்திகாசன வீணைதர சிவன் :

இந்த வீணைதரசிவன் நின்ற நிலையில் சற்று மாறுதலான அமைப்பில் விளங்குகின்றார். அதாவது ஸ்வஸ்திகாசன நிலையில் (படம் – 68) நின்று முன் இருகரங்களில் வீணை ஏந்தி அதனை மீட்டும் நிலையில் உள்ளார் ஒரு காலை நிலையாகவுன்றி மற்றொரு காலை அதற்குக் குறுக்கே வைத்து நிற்கும் அமைதியே ஸ்வஸ்திகாசன மென்று சொல்லப்படும். இந்நிலையினை ரிஷபாந்திக சிவமூர்த்தங்களிலும், கொடிப் பெண்வடிவங்களிலும் காணலாம். நின்று கொண்டிருக்கின்ற அபஸ்மாரத்தின் தலைமீது தனது பின் இடக்கரத்தை வைத்துப் பதித்து அழுத்துகின்றார். பின் வலக்கரத்தில் ஜபமாலை போன்ற அமைப்பும் உள்ளது. கரங்களில் காப்புகள் அழகு செய்கின்றன. இவரது ஜடைகள் ஒருங்கே அமைந்து தொங்கிய நிலையில் உள்ளன. காதுகளில் குழையும் குண்டலமும் விளங்குகின்றன. கழுத்தில் உருத்திராக்க மணிகள் கோக்கப்பட்ட மாலை விளங்குகின்றது. இடுப்பில் வஸ்திரக் கட்டும், வலப்பக்க இடுப்பில் வஸ்திரக்கட்டுப் பகுதியும் விளங்குகின்றன. புன்முறுவலுடன் கூடிய கிழ்நோக்கிய பார்வையுடன் இப்பெருமான் காட்சிதருகின்றார். இக்காட்சியினை அப்படியே சற்று மாறுதலாகத் தாராசுரம் திருக்கோயிலின் (சோழர் கலைப்பாணி) மகா மண்டபத்தூணில் வீணைதரர் முயலகன் தலைமீது தனது திருவடியைப் பதியவைத்திருப்பதைக் காணலாம். வேறு எங்கும் காணப்படாத வகையில் அமைந்த இச்சிற்பத்தின் கலை அழகினை வர்ணித்துக் கொண்டே போகலாம்.

வைதஸ்திக ஸ்தானகத்தில் வீணைதரர் :

இதே தருமர்ரத சுற்றுச்சுவர் மாடத்தில் (படம் - 69) மற்றொரு வீணைதர சிவன் காணப்படுகின்றார். இவர் இரண்டு பாதங்களையும் முன் பக்கமாக விலக்கியவாறும் தலையினை வலப்பக்கம் சாய்த்த வாறும் காணப்படுகின்றார். (சமபாத ஸ்தானக நிலையில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று வைதஸ்திக ஸ்தானகம் என்றும் மற்றொன்று அர்த்த வைதஸ்திக ஸ்தானகம் என்றும் பெயர் பெறும். சமபாத ஸ்தானக நிலையில் சமமாக வைக்கப்பட்ட பாதங்களின் பெருவிரல்களின் இடைவெளி ஒரு விதஸ்தி [இரண்டு சாண்] அளவிருப்பின் இக்கோலம் வைதஸ்திக " ஸ்தானகம் " என்று சொல்லப்படும்) லாவகமாக வளைந்து நிற்கும் இவரது முன்

கரங்களில் வீணையினை ஏந்தியுள்ளார். பின் கரங்களில் ஒன்று ஜபமாலை போன்ற அமைப்புடன் காணப்படுகின்றது. மற்றொன்று தொங்கும் பாவனையில் உள்ளது. கரங்களில் மும்மூன்று காப்புகள் விளங்குகின்றன. இடையில் வஸ்திரக்கட்டு அமைந்துள்ளது. அதில் முன் வலக்கரத்திற்கும் இடுப்புக்கும் இடையே வஸ்திரம் ஒன்றும் காணப்படுகிறது. நெற்றிப் பட்டையுடன் கூடிய ஜடைகள் எல்லாம் மேல் நோக்கியவாறு கட்டி அமைந்த ஜடாமகுடமாக உள்ளது. புன்னகை தவழவிளங்கும் இவர் கீழ் நோக்கிய பார்வையுடன் வீணையின் நாதப் பேரொலியால் தன்னையும் மறந்த நிலையினை உடையவராக அமைக்கப் பட்டிருப்பது சிற்பியின் கைத் திறத்திற்குச் சான்றாக அமைகிறது.



மயிலாடுதுறை - ஐயாறப்பர்கோயில் தட்சிணமூர்த்தி

இக்குருமூர்த்தி – இவ்வாதீனத்திற்குச் சொந்தமான மயிலாடுதுறையில் விளங்கும் ஐயாறப்பர் திருக்கோயிலின் தெற்குத்தேவ கோஷ்ட மாடத்தில் (படம்–70) விளங்கியருளுபவர். கல்லால மரம் தனிக்கற்பலகையில் அமைக்கப் பெற்றுள்ளது. இந்த வியாக்கியான மூர்த்திப்பெருமான் பத்ர பூரிமமும், மூன்றும் பிறைச் சந்திரனும் கூடிய ஜடாபாரத்துடன் விளங்குகின்றார். பத்ர பீடத்தில் அமர்ந்த இப்பெருமான் தனது இடமுழங் காலினைச் சற்று மேல் நோக்கியவாறு (தூக்கிறற் போன்று) வீராசனம் கொண்டு அமர்ந்துள்ளார். கண்டாபரணமும், ஐம்பத்து நான்கு உருத்திராக்க மணிகள் கொண்ட மாலையும், யக்ஞோபவீதமும் இவரது திருமார்புக்கு அழகூட்டுகின்றன.

பின் இருகரங்களில் அழித்தலுக்குரிய அனலும் (சுடர்) ஜபத்திற்குரிய ஜபமாலையும் தன்தோளைவிட்டு எப்போதும் அகலாத சர்ப்பமும் (நாகம்) உள்ளன. முன்வலம் இடம் ஆகிய இருகரங்களிலும் முறையே வியாக்யான முத்திரையும், சிவஞானபோதச் சுவடியும் விளங்குகின்றன. வியாக்ர சர்மத்துடன் கூடிய சுரோணிப்பட்டையும், கால்களில் வீரகண்டாமணி, சிலம்பு, தண்டை ஆகியவையும் எடுப்பாக உள்ளன.

இப்பெருமானின் பின்னல் கழுத்து மணிகள் அணிந்த நந்தியம் பெருமான் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றார். இவரது வலத்திருவடி ஜடாமண்டலத்துடன் கூடிய முயலகனின் நடுமுதுகில் பதிந்துள்ளது. மாயத்தால் சிக்குண்ட ஆன்மாக்கள் படும் துன்பம் இவன் முகத்தில் பிரதிபலிக்கின்றது. 6—5—1990 அன்று இத்திருக்கோயிலில் கும்பாபிஷேகம் நிகழ்ந்தமையால் கோயில் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.

திருவீழிமிழலை
பத்ம பாதம் வைத்த பரமன்

தஞ்சை மாவட்டத்தில் – மயிலாடுதுறை திருவாரூர் புகைவண்டிப் பாதையில் உள்ள பூந்தோட்டம் நிலையத்திற்கு மேற்கில் 10 கி. மீ, தூரத்தில் திருவீழிமிழலை எனும் தலம் உள்ளது. குப்பகோணம், திருவாரூர் நகரங்களிலிருந்து இத்தலத்திற்குச் செல்ல பேருந்து வசதிகள் உண்டு.

சுவாமி — வீழிநாதர்

அம்பிகை — சுந்தரகுஜாம்பிகை

இத்தலம் சமயாசாரியர்கள் மூவர் அருளிய 23 தேவாரத் திருப்பதிகங் களைக் கொண்டது. இத்திருக் கோயில் துறைசை யாதீனத்திற்குச் சொந்தமானதாகும்.

கோயிலமைப்பு :

ஸ்ரீ வீழிநாதர் கோயில் மாடக்கோயில் அமைப்பினதாகும். சுவாமி மற்றும் அம்பாளுக்குத் தனித் தனிக் கோயில்கள் உள்ளன. கிழைக்கோபுர வாயிலின் அருகில் உள்ள வெளவால் நத்தி மண்டபம் கட்டட வேலைப்பாடு மிக்கது. விண்ணீழி விமானத்தைக் கொண்ட கருப்பக் கிருகத்தில் வீழிநாதரின் (இலிங்கத்திருமேனி) பின்புறம் பெருமான் திருமணக் கோலத்தில் அருட்காட்சி வழங்குகின்றார். கருப்பக்கிருகத்தின் வாயிலில் அரசாணிக் காலும், பந்தற்காலும் தூண்களாக உள்ளன. இத்திருக்கோயில் சிற்பம், கட்டடம், கல்வெட்டுச் சிறப்புகளைக் கொண்டது ஆகும்.

சிற்பச் சிறப்பு :

இத்தகைய சிறப்புடைய திருக்கோயிலின் தேவ கோஷ்ட வரிசையில் பத்ம பாதம் வைத்த மோனமூர்த்தி அருட்காட்சி (படம் - 71) வழங்கு கின்றார். இப் பெருமானின் திருமுடி கூடமகுடத்துடன் கூடியதாக அமைந்த ஜடாமண்டலமாகும். காதுகளில் காதோலையும், மகரக்குழையும் விளங்குகின்றன. திருமார்பில் எடுப்பாக விளங்கும், உருத்திராக்கமாலை, கண்டாபரணம், யக்ஞோபவீதம் ஆகியவை காணப்படுகின்றன.

இவரது பின்கரத்தில் அக்னியும், வலக்கரத்தில் மேல் நோக்கி உருட்டும் பாவனையில் அமைந்த ஜபமாலையும் உள்ளன. முன் வலக்கரம் ஞான முத்திரை காட்டுகிறது. முன் இடக்கரம் சுவடியைக் கொண்டுள்ளது. இங்கு இவர் பத்ரபீடத்தில் வீராசனம் கொண்டு விளங்குகின்றார். இவரது வலத் திருவடி தாமரை மலரின் மீது பதிந்துள்ளது. இங்கு முயலகன் இல்லாதது நோக்கத் தக்கதாகும்.

நன்கு நிமிர்ந்த திருக்கோலத்தில் அமைந்த இத்திருவுரு ஒரே கல்லால் ஆக்கப்பெற்ற புடைப்புச்சிற்பம் போல் காணப்படுகிறது. இங்கு பெருமானின் திருப்பாதத்தைத் தாங்கும் தாமரை உடுக்கை போன்ற அமைப்பில் உள்ளது. சோழர் காலக் கலைப்பாணியில் அமைந்த இத்திருவுரு வழிபடுவோருக்கு நன்னெறி புகட்டுவதாக அமைந்துள்ளது.

அருளாளர்களாகிய ஞானசம்பந்தப் பெருமானுக்கும், திருநாவுக் கரசருக்கும் படிக்காசு அருளிய பரமன், இங்கு யோக நிலையில் தாம் அமர்ந்து என்றைக்கும் நிலையாக உள்ள இறைநிலையினை உணர்ந்துகின்றார் போலும்.



திருப் பெண்ணாகடத்து ஞானமூர்த்தி

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற 22 நடுநாட்டுத் தலங்களுள் திருப்பெண்ணாகடமும் ஒன்றாகும்.

இறைவன் — : சுடர்க்கொழுந்து நாதர்

இறைவி — : கடந்தை நாயகி

திருப்பெண்ணாகடம் சிவாலயத்தின் கருப்பக்கிருக விமானம்–கஜப் பிரட்ட விமானமாகும். விமானத்தின் அழகும் அதனுள் விளங்கும் (படம்-72) சுதைச் சிற்பங்களின் அழகும் நம்மை வசீகரப் படுத்துவனவாக விளங்குகின்றன. இவ்விமானத்தின் தென்பகுதியில் மேலிருந்து கீழாக சிவகாமி உடனுய ஆடல்வல்லானும், அதற்கு அடுத்தாற் போன்று அபய கரத்துடன் விளங்கும் ஞானமூர்த்தியாகிய தட்சிணுமூர்த்தியின் திருவுருவமும் உள்ளன. தெற்குக் கோஷ்ட மாடத்தில் சிலாரூபத்தில் சின்முத்திரை காட்டும் பெருமானையும் காணலாம்.

அபயம் அருளும் பெருமான் :

இவ் ஆலயத்தின் கஜபிரட்ட விமானத்தில் இரண்டாவதாக அமைவது அபயஹஸ்தத்துடன் விளங்கும் தட்சிணுமூர்த்தியாகும். பரந்து விரிந்த ஜடைகள் இல்லாது நெற்றிப்பட்டையுடன் கூடியதாக அமைந்த இவரது சிரசில் கங்கையும், சந்திரனும் காணப்படுகின்றன. தட்சிணுமூர்த்தியின் வலப்பாதம் தொங்க விட்டபடி முயலகனை மிதித் துள்ளது. இடப்பாதம் குத்திட்டு மடக்கியும் காணப்படுகிறது. அதில் இடக்கரம் தண்ட ஹஸ்தமாக உள்ளது. மார்பில் உருத்திராக்கமணியும் கண்டாபரணமும், இடுப்பில் புலித்தோலாடையும், பாதங்களில் சிலம்பும் காப்பும் விளங்க இவர் காட்சிதருகின்றார். பின்கரங்களில் அக்கினியும் நாகமும் காணப்படுகின்றன. இருமருங்கிலும் யோகியர் நால்வர் புடை சூழ்ந்து விளங்க, அடர்ந்து படர்ந்துவிளங்கும் கல்லாலமரமும் காட்சி தருகின்றது.

கோஷ்டப் பெருமான் :

இந்த ஆலய கஜபிரட்ட விமானத் தெற்குக் கோஷ்ட மாடம் முகமண்டபத்துடன் விளங்குகிறது. இதற்குள் சர்வாபரணங்களுடன்

முனிவர்கள் சூழ தட்சிணமூர்த்தி அருட்காட்சி தருகின்றார். முனிவர் களுக்கு விளக்கம் தந்தருளுவதால் வியாக்கியான தட்சிணமூர்த்தி எனப் போற்றப்படுகின்றார். (கல்லால மரம் தனியாக அமைந்துள்ளது. உயரம் 1½அடி, பெருமானின் உயரம் 3½ அடி) பத்ர பீடத்தில் அமர்ந்துள்ள இப்பெருமான் வீராசனத்தில் இருந்து காட்சி தருகின்றார். இப்பீடத்தின் இருமருங்கிலும் ஸ்திரங்கள் தொங்கவிட்ட படியுள்ளது. பின் கரங்களில் தீயுகலும், ஜபமாலையும் முன்கரங்களில் சிவஞான போதச் சுவடியும் சின்முத்திரையும் (வியாக்கியான முத்திரை) காணப்படுகின்றன. இவரது கேசங்கள் சுருள் சுருளாக அமைந்த ஜடாபாரமாக உள்ளன. காதுகளில் காதோலை, மகரக்குழை உள்ளன. வலக்கால் முயலகனை மிதித்தபடி உள்ளது. பத்ரபீடத்தின் அடிப்பகுதியில் நாகம் ஒன்று விளங்குகின்றது. வைசிக பந்தம், சடாமகுடம் போல முனிவர்களின் கேசங்கள் அமைந் துள்ளன. அவர்களின் கரங்கள் சின்முத்திரையாகவும் வீஸ்மய கரமாகவும் உள்ளன. இப்பெருமான் எழுந்தருளி விளங்கும் இவ்விடம் தியான நிலைக்கு ஏற்ற இடமாகும்



வீணாகான தட்சிணாமூர்த்தி

மயிலாடுதுறைக்குக் கிழக்கே பொறையாறு கற்சாலையில் 6 கி. மீட்டர் தொலைவில் உள்ள விளநகரில் உசிரவனேஸ்வரர் (துறைகாட்டும் வள்ளல்) திருக்கோயில் விளங்குகின்றது. இத்திருக்கோயில் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானதாகும். உசிரம் என்றால் விழல் என்று பொருள்படும். இவ் வூருக்கு "விழல்" என்று பெயர். இதுவே பின்னர் விழல்நகர், விளநகர் என்றாயிற்று. தஞ்சையை ஆண்ட அச்சுதப்ப நாயக்கர் காலத்தில் இக் கோயிலில் பல திருப்பணிகள் நடந்தசெய்தியும்; உத்தம சோழனின் மனைவி இத்திருக்கோயிலுக்கு அர்த்தசாமக் கட்டளைக்கு நிவந்தம் அளித்த செய்தியும் இத்திருக்கோயில் கல்வெட்டுகளால் தெரியவருகின்றன.

இத் திருக்கோயிலின் ராஜகோபுரத்தின் முதல் வரிசையில் (படம் 73) இந்தவீணாகான தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் சுதைச் சிற்பமாகக் காட்சி தருகின்றது. கல்லாலமரத்தின் கிளைகளும் இலைகளும் நாக படங்களைப்போல விளங்குகின்றன. இந்த வீணை இசைக் குருமூர்த்தியின் திருமுடியில் பத்ம பூரிமமும் பிறைச் சந்திரனும் காணப்படுகின்றன.

பின் இரு கரங்களில் தீச்சுடரும், நாகமும் விளங்குகின்றன. முன் வலக்கரம் வீணையின் தந்திகளை லாவகமாக மீட்டும் பாவனையில் உள்ளது. முன் இடக்கரம் "மிக நல்லவீணை தடவி" என்று ஞான சம்பந்தப் பெருமான் கூறுவதுபோல, ஏழு சுரங்களையும் ராகபாவ நிலைகளுக்கு ஏற்றாற் போலத் தந்திகளை விரல்களால் இழைக்கும் பாவனையில் அமைந்துள்ளது. இடையில் புலித்தோலாடை காணப்படுகிறது. வலப் பாதம் முயலகனை ஊன்றியுள்ளது. வீரக்கழல் மணியும், காப்பும், சிலம்பும் வலப்பாதம் கொண்டுள்ளது. இங்கு இடமுழங்கால் மடங்கிய நிலையில் சற்று மேலெழுந்தவாறு வீராசனத்தில் ஒருவகை என்று கூறத்தக்க நிலையில் உள்ளது. குருமூர்த்தியின் அருகில் அஞ்சலி ஹஸ்தங்களுடன் வலமாக சுகமுனிவரும, இடமாக தும்புருவும் அமர்ந்து பக்தியுடன் நாதத்திற்கே தலைவனாக விளங்கும் பெருமானின் நல் வீணையின் இசை கேட்கும் பாவனையில் அமர்ந்துள்ளனர். மற்றும் இவர்களின் முன்னால் முனிவர்கள் இருவர் வெவ்வேறு நிலையில் அமர்ந்துள்ளனர். இங்கு பெருமானின் திருவடியில் சிக்குண்ட முயலகன் மகிழ்ச்சியுடன் காணப் படுவது போல் உள்ளான். நல்லிசை என்றாலே நம் உள்ளத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுத்து, துன்பத்தை நீக்கும். அவ்வாறே பெருமானின் நல்வீணை இசை இவன் காதுகளில் ஒலித்தமாத்திரத்தில் தான் விடுபட்டது போன்ற உணர்வு ஏற்பட்டவன் போலக் காணப்படுகின்றான். இத்தகைய சுதைச்சிற்பம் காண்பவரின் உள்ளத்தை உருக்குகின்றது.



வீணாகான தக்ஷிணாமூர்த்தி
விளநகர் திருக்கோயில்
(சுதைச்சிற்பம்)
படம் 73 — பக்கம் 32



குரூநாதர்
திருப்பாதூர் — செங்கைஆண்ணு மாவட்டம்
படம் 75 பக்கம் 34



தாராசுரம்
ஸ்ரீ ஐராவதேஸ்வரர் ஆலயம்
மேதா தட்சிணமூர்த்தி



சிவபுரம் — ஞானமூர்த்தி
செங்கை - அண்ணுமாவட்டம்.
படம் 79 பக்கம் 45

வரதஹஸ்த - வீணாதர மூர்த்தி

இப்பெருமானவர் அமர்ந்திருக்கும் ரிஷபத்தின் மீது சுகாசனமாக எழுந்தருளியுள்ளார். பின் இடக்கரத்தில் வீணையினைக் குத்திட்டாக வைத்து (படம்-74) வாசிக்கும் பாவனையைக் கொண்டுள்ளார். சிரசில் உள்ள சிதை உரோமபந்தியாக வாரிவிட்டது போல் அழகுடன் விளங்குகிறது. அழகிய முகமும் கீழ் நோக்கிய சாந்தம் தவழும் கண்களும் குவிந்த அழகிய உதடுகளும் அழகாகத் தோற்றமளிக்கின்றன. கழுத்திலும் மார்பிலும் மிகச் சிறிய அளவினதான உருத்திராக்க மணிகளும், வில்வாபரணமும், திகழ்கின்றன. கரங்களில் ஒற்றை வடமாகவுள்ள உருத்திராக்க மணிகளால் கோக்கப் பெற்ற காப்புகளும் விளங்குகின்றன. முப்புரிநூலில் மணிகள் கோத்தது போன்று காணப்படுகிறது. பின் வலக்கரம் சிதைந்துள்ளது. இம்மூர்த்தியானவர் வலக்கரத்தால் சின்முத்திரை காட்டாது, வரதஹஸ்தமாகக் காட்டி வீரக்கழல் அணிந்த தனது இடப்பாதத்தைக் காட்டுகின்றார்.

இது எதனை உணர்த்துகின்றது என்றால் உலகத்து உயிர்கள் அனைத்தும் இறுதியில் இத்திருவடியினை வந்து அடைகின்றன என்பதையும், மீண்டும் வீணையின் நாதஒலியினால் தோன்றுகின்றன என்பதையும் காட்டுகின்றன. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்ற அப்பர் திருவாக்கு இங்கு நினைவு கூரத்தக்கது.

இவரது முன் இடக்கரத்தில் அபிதகும்பம் விளங்குகிறது. இது மல நீக்கமும் திருவடி அடைதலாகிய சிவப்பேறும் ஆகிய பயன் இரண்டும் வாய்ப்பதற்குச் சாதனம் சிவஞானம் என்பதை உணர்த்துகின்றது. இத்தகு அழகிய சிற்பம் மத்திய பிரதேசத்தில் உள்ள குவாலியர் கண்காட்சி சாலையில் உள்ளது. ஆராய்ச்சியாளர்கள் இதனை 11 – ஆம் நூற்றாண்டுச் சிற்பமாகக் கருதுகின்றனர். இதன் உயரம் 97. 7 செ. மீ. அளவாக உள்ளது.

திருப்பாதூர் - குருநாதர்

செங்கை அண்ணு மாவட்டத்தில் உள்ள திருப்பாதூர் சிவாலயத்தில் இக்குருமூர்த்தி எழுந்தருளியுள்ளார். கல்லால மரக்கினை நீண்டு அடர்ந்த சிலையில் விளங்க, அதன் இலைகளும் வரிசையாக அடுக்கி (படம் – 75) வைத்தாற் போன்று அமைந்துள்ளன. பெருமான் பத்ரபூரிமத்துடனும், நெற்றிப்பட்டத்துடனும் விளங்குகின்றார். சிரசின்மேல் நோக்கி விளங்கும் ஜடைகள் ஜடாபாரமாகவும் அதில் கங்கையும், பிறைச்சந்திரனும் உள்ளன. காதுகளிலும், கைகளிலும் நாகங்கள் அணிகலன்களாக அணிசெய்கின்றன. திருப்பாதங்களில் வீரக்கழல், சிலம்பு, காப்பு அணிந்த இப்பெருமான் வீராசனமாக மலையின் மீது முயலகனை மிதித்த நிலையில் காட்சி தருகின்றார். கரங்களில் அட்சமாலை, தீயகல், சின்முத்திரையான ஞான முத்திரை, சுவடி விளங்க நேரான பார்வையுடன் இடுப்பின் பக்கவாட்டில் வஸ்திரக்கட்டுடன் முனிவர்கள் இல்லாது இருந்தாலும் மௌனியாகக் காட்சிதருகின்றார்.





உத்தரகாமிகாகமம்

(கிரியாபாதம்)

[51-வது – தட்சிணமூர்த்தி ஸ்தாபனவிதி படலம் – பகுதியில் த்ரிவிதபேதம், அங்ககல்பநம், வியாக்யான தட்சிணமூர்த்தி, கேய தட்சிணமூர்த்தி, பலம், பிரதிஷ்டை, கும்பஸ்தாபனம், ஹோமம், குப்பாபிஷேகம், பலம் முதலான செய்திகளைப்பற்றி கூறும் பகுதியாகும். இதன் கருத்தும் இங்கு தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது.]

தக்ஷிணாமூர்திப்ரஸாதந விதிவடிவ படலம் ।

ஸ்ரீவக்ஷ்யே தக்ஷிணாமூர்த்ஸ்ய ஸ்ரீணாம்ஸ்ச விக்ரஹலக்ஷணம் ।
வ்யாக்யாந மேயமேஷாம்நிஷ்டஸ்ய த்ரிவித்யஸ்ய ॥ க

வ்யாக்யாயாம்ஸ்ஜ்ஞாநமூர்தௌதமேயி வீணாஸமேதம் ।
தாஹ்யாம் விரஹிதௌ யோகீஸநாநாகாரஸமந்விதம் ॥ உ

யதாஸ்ஸுஜ்ஞிணைர்தஸ்ஸ கூர்நந்யாயவதுச்யதே ।
ஸ்வதவிதூர்மிஸமாஸ ஸ்ரீயா சாஸாவா வுகீர்திதம் ॥ ங

வ்யாக்யாசிந்மௌநரோவாவி ஜிவ்யாம்வாரயந்ஸ்ஸுவா ।
உத்தரீயஸமோவெத ஸ்ஸுக்ஷயஜ்ஞாவவீதகம் ॥ ச

விசீணமிஜ்ஞாநஜோவாவி ஜடாசிகூட வளவா ।
வபுகாவதுநோவாவி ஸத்தரோபிகயாயதம் ॥ ஞ

யாதமுத்ரா ரஸ்வயெளமா வவைதஸ்வநுணாஸிதம் ।
வஹ்நிதூவஸமோவெதா மஹாகிங்கிணிஸம்யதம் ॥ ட

கயஸ்தாபடவ்யக்ஷஸ்ய மெஷ்டா முத்ஜ்ஞமுத்ரிதம் வாதம் ।
வ்யாக்யாசிந்மௌநரோவாவி ஸ்தாநரோபிகயாவா ॥ ண

மம்பிதந்தக்ஷிணம்வாஹ ஜ்ஞாந முவாரி ஸம்ஸ்திதம் ।
வாமோம்ஸ்ரிநாஸகம் கூர்ஸ்யாஸ் ஸவ்யஹஸ்தஸ்தமூர்த்யா ॥ த

ஸாதஸமுஸம்ஜ்ஞயோவெதா வாசிஹஸ்தஸ்தவஸ்தகம் ।
தாக்ரிஸ்ஸ நந்திதோதாஸ்ஸ நெஷ்வம்ஸ்யாஸ் ஸதவஸ்தகம் ॥ ந

ஸயுவாநாம ஸம்யக்தோ வாசிஹஸ்தஸ்தநீநிதம் ।
வரதஞ்ச ஜிநாநீயாஜ்ஞாந முத்ரிணி வைந்தகம் ॥ ப

உணுவுவிஞ்ஞ யடிவாவவ்யாஸ் வுகொவ்ஜ்ஜா நவாவ்வ்ஜ்தி தீ ।
விகவஸ்ஸவ்டிவஸ்ஸுகாஸ வ்ஸுயஜ்ஜா ஜிவ்வ்ஜ்தா ம்ஸ்ஜ்ஜீ ॥ ௧௧

வரவாஜ்ஜுயெவாகஷ் சோமாஜ்ஜாமாவஸிஜ்ஜி தீ ।
வடிவாவொஜ்ஜுமவாவி வ்யாஜ்வா ஜெத்ஜ்ஜுயெஸ் ॥ ௧௨

கடிஜ்ஜன தன்வுகஜ்ஜுவுள வுவஜ்ஜவஸிஜ்மொயதீ ।
நாவாமுவ்டிய்ஜ்ஜ் வாசி ஜவ்வொவாவ்வ்யாஜ்ஜ்ஜ் வ்ஜ்ஜுகீ ॥ ௧௩

சூவும்முவஜ்ஜிதம் கர்ஸ்யா ஜெவஸிஜ்ஜெஜ்ஜ் வாசிதீ ।
வஸ்ஜ்ஜுவவ்ஜ்ஜிவ்ஜ்ஜுவ்ஜ்ஜுய ஜ்ஜா ஜெஜ்ஜிவ்ஜ்ஜுஸ் சுஜ்ஜ்ஜ்ஜ் ॥ ௧௪

சோஜுசுகாம்ஜ்ஜுவாம்ஜுவ துஜ்சுவ்ஜ்ஜிவ்ஜ்டிவ்ஜிவ்ஜுதீ ।
மம்வவாஜ்வ்ஜ்ஜிதம்ஜிவ்ஜு வஸ்ஜிதுஜ்ஜுஸ் ம்ஸ்மாஜ்ஜுஜெ ॥ ௧௫

கவ்ஜுஸ்ஜுவ்ஜிஜ்ம வ்யுஜ்வுஜ்ஜ்த ம்யாவஜ்ஜ வாஜ்வ்ஜுயவ்ஜ் ஜவெஜ் ।
வஸ்டிஸ்ஸாம்ஜ்ஜ் ஜிஸ்மொவ்ஜ்வுஜ்ஜ நாஜுவ்ஜுவயிஜ்ஜொவ்ஜ்ஜ ॥ ௧௬

நயஜெநிஜ்வுஜ்ஜிம் விஜ்வுஸ் ஏம்ஜ்ஜ்வ்ஜ்வுஜ்ஜ யொவ்ஜுதீ ।
நாஜெவ்ஜு ஜிணிவ்ஜெ நூஸ்ஜெஜ் வ்யுஜ்ஜும்ஜ்ஜ்மிஜ்ஜ் ஜாவ்ஜ்வுஜ்ஜ் தீ ॥ ௧௭

வவஜ்ஜ்வுஜ்ஜவ்வுஜ்ஜவ்வு யொஸ்ஜ்ஜிவ்ஜுஸ் ஜாஜ்ஜிஜ்ஜுஸ்ஸுஜ் ।
நாஜெவ்ஜு ஜிணிவ்ஜெ நூஸ்ஜுஜ் வவ்வுஸ்ஜெஜொ நவிம்ஜ்ஜ்தீ ॥ ௧௮

ஜொஜிவ்ஜுஸ் வாஜ்ஜுஜிஜ்வுஸ்ஜு வ்யுஜ்ஜுவவ்வுஸ்ஜு வவாஜுஜ்ஜ்ஜ்மிஜ்ஜு
வரவவ்வுஜிணிவ்ஜெ நூஸ்ஜு ஜ்ஜாஜிஜ்வுஸ்வுஸ்ஜு வவாஜுஜ்ஜ்ஜ்மிஜ்ஜு ॥ ௧௯

வ்யுஜ்ஜுவஜ்ஜ்ஜிஸ்ஜுஜ்ஜ் வவ்வுஸ் ஜொஜிவ்ஜுஸ்ஜ்மாவ்ஜுஸ்ஜுஜிஸ்ஜுவ்ஜ்ஜ்ஜ்மாஜ்ஜ்ஜ்ஜ்
வஸ்ஜிவவ்ஜ்ஜிஜ்ஜ் ஜிஜ்ஜ்ஜ் நூஸ்ஜ்ஜ் கூஜ்ஜ்ஜ்ஜ்ஜ் வவ்ஜிஜ்ஜ்ஜ்ஜ்ஜ் ॥ ௨0

வஸ்ஜூஸ்ஜிகூஜ்ஜ் ஜெவ ஜ்ஜிஜ்ஜ்ஜ்ஜ்ஜ்வவ்வு ஜ்ஜ்ஜாஜ்ஜ்ஜ்ஜ்ஜ் ।
ஜ்ஜ்ஜ்ஜ்ஜ் ஜ்மாவஸ்ஜிஜ்ஜ்ஜ்ஜ்ஜ் ஜ்ஜ்ஜ்ஜ்

வ்ரவ்ரந ச்மி கி்ரேவம் வ்ரஸ மெச்மி கி்ரஸ்தோச்தம் ।
ஸஜ்ஜு்ராயொ ச்ஜ்ருகூடகெள தவ்ரம் ஸவெ்ருகுராவ்ஸள ॥ உச

வீணா்தஃகூஷிணெவாஹ்ரு உகூஷிணெகூடகுஷ்டி்தஃ ।
உகூஷிணெ கூடகுஞ்ஞுராஃ வ்ஷ்டி்தாயாம் விநீயெஸயெஸ ॥ உந

கொமகுஞ்ஞுராஃவொஹ்ரு்தா தஷ்மிமம் கூடகொஜ்ஜு்தஃ ।
ஹாஸச்ரு்தஹாவாசொ ஹ்மாயி கவ்தாச்ரு்வஃ ॥ உக

விஜ்ஞாஸ்ரஜ்ஞா கமா தவ்ரஃ வரிணாஹஸ்தா வ்மிவ்ருகஸ ।
கமாவகுவ்ரு விஜ்ஞாரம் ப்ரம்வா விஷபம்ர்ஷ்டி ॥ உள

தத்தாம்ரஸ்தா தஜ்ஜ்ரம்வ்ர ஜெவம்ஜ்ஞாகுவாவ ரோவரொஸ ।
ஹஜ்ஜவ்ரு ணிவ்ரநூராஸ்தம் ஹிகூவாவ்மி்தூராதி்தஃ கூரோஸ ॥ உம

கிம்ஸஜ்ரம்ம ச்தி்ரு்தஸ்த ச்யோந்ரு ணிவ்ரநூ்தஃ ।
கூநாஹொஸஜ்ஞராஸ்தாம்ம ஸொஷம்வ்வ்ருஸ்தா வ்மிவ்ருகஸ ॥ உக

வ்ரவ்ரந வஹி்தஜ்ஜெவ வஸ்ரு்ஸ்ரு்வஹரோவ்ரு்யாகூ ।
த்தூராக்ஷி வரதயொமெந வஹரகூஜ்ஜி்தமொஉந்ர் ॥ ஈ0

ரூவ்ரு்தொவாரோஹவ்ருவ்ரு ஜ்ரோமச்மி்தீர்ஸ்ரு்தஃ ।
கூபகூஜ்ஜி்தவாரோம்ர்ரி ப்ரூவ்ஷ்டி்ரு்தவாஜ்ஜி்ருகஃ ॥ ஈக

உச்ரு்தஜ்ஜவ்ருஜ்ரநூரு உஜ்ஜுகொவ்ரு்ரூகூரு்தாகூ ।
வஸ்ரம்வஸ்ரு்வவ்டிவ்ரு்தஸ்ரு கூஹம்ரஜ்ஞெவ வ்மிவ்ருகஸ ॥ ஈஉ

தாகாரீஜ்ஞெஷ்ரு்வாவம்ஞ்ஞ ஜ்ரா ரோவ்ரு்ஞ்ஞெஷ்ரு்வா வ்யாகூ்தஃ ।
தாகாரி்ரு்தி்ரஜ்ஞெவ்ரஜ்ரம் வ்ரிஜவிச்ரு்யஜ்ஞொரஜ்ரி ॥ ஈஈ

ஹ்மிஜ்ஞெதஸ்ரு கிஜ்ஞொரஜ்ஞெரு்ச் உ்ரஷ்வ்ரு்ஜ்ஞெகூஸ்ரு ஜீர்ரு்தி ।
ஜ்ஞொமம் கூ்ரு்ரு்தாகூ்தஃ தகுவாஜ்ஞெரு்ரு வ்ரவ்ரு்தகுஷ்ரு்ரஸ்ரு்ரஷ்ரு்ரு்தஃ ॥ ஈச

வஜ்ரஸ்ரஜ்ஞொவ்ரு ஸ்ரஜ்ரவ்ரஜ்ஞெரு்ரு ச்ரு்ரோவகுச்ரி வ்ரோர்ரு்தாகூ்தஃ ।
தந்ரு்மிஜ்ஞெஉகூஜ்ஜி்ஞெஷ்ரு்ரஸ்ரா நிஷ்ஜ்ஜீஃகூ்மிஜ்ஞெஸ்ரா்ரு்தாகூ்தஃ ॥ ஈஞ

ரஜ்தோவ்ரஜ்ஞெஸ்ரு்ஹிஜ்தவீஜ்ஞெ வ்ரஸ்ரு்ரு்யஜ்ஞொ்ரு்தோ்ரு்ரு்ஹஜ்ஞெ ।
கூவீஜ்ஞொரோ்ரு்நிஜ்ஞிவ்ரு்ஹிஸ்ரு் களஸ்ரிகூஜ்ஜிஜ்ரிரோ்ரு்ரோச ॥ ஈக

ஶிவதீஜகுலஹ்யாதி ஹரிதெதஹ்வரி தவ்ஸீதெதஃ ।
சூமசோஹி தவெதெதா ஹிஃ வரதெரொந தீக்ஷிதெதஃ ॥ ஈள

வஸவதெஉக்ஷிணாசி ஶிதெதுரு தி துஹொதா உதாஹ்ரு தாஃ ।
வ்ரவ்ராய குரு ஜ்ரா நஜஃ வ்ரொகொதா மெயப குரு ஹ்ரிதொதாதஃ ॥
வயொஹொசி க்ஷிம்ஹாஜ்ஜெய உ தீஜ்ரா கவா வசோவதொரு ।
சுவீநொவாவ்ஸ்தி தாவாவி ஔஷிஹிஃ வ்ஸம்வ்ரு தொ நவா ॥ ஈஊ

வடவ்ரு கவி ஹீநொவா ஹரி தாஹ்ரு வ்ரு த வஸவவா ।
ஹரி தவ்ஸுயம்வெவாதொவா உக்ஷிணெ ஸவ்ஸீரி தஃ ॥ சம

வஸவம்கவ்ஷணசோஷிவ்ஷ்ம் வ்ரு தி வ்ஷ்டாவியிரவ்ரு தெ ।
வாரஹ்ரு ம் வரிவ்ருவஸ ஸ்ரு ஹ்ரு ஶிம்கரவ்ரு ணவெவய ॥ சக

ணவ்ரு வம்வரிவ்ருவஸ்கரய்ரு ளவவதெதுகவம்வ்ரு யா ।
கரணாநிவாரி தாஸ்ரு ணி தஜி மஸ்ரு ணிவாஹவெஸ ॥ சஉ

ரதந்ரு யாஹாக்ஷிஃரோக்ஷளய வ்ரு தீரொரய நதயா ।
ஸ்ரு ரி வ்ரு உக்ஷிண தெதுவ ஜமெ தெவாயிவாவ நழ் ॥ சங

வரணாஹ தொக்ஷண தெதுவ வஸ்ரு ரஸ வ்ரு ஹரணஹொஜநழ் ।
வரணாஹம் வாஸ்ரு ரொசிதுவ ஹரிவாரி ஸ்ரு ஹவிவா ॥ சச

கூரு கூ தரு தெவதெவவஸ்ரு ஔஷ்ணாதுயாயாஹ ருகுழ் ।
வெஸ்ரு ரிவ்ருவ்ருஸ்ரு ணீரு ம்கரு கூ ஸய நிம்கரு ரு யெஸ்ரு ரு யரு ॥ சரு

வ்ரு நதவெஸ்ரு ரு ஔஷிஹிஃ வ்ரு வ நம்காரு யெஸ்ரு ரிவெ ।
ஸயரு யாம் ஸாயயெஸ்ரு வம் களஸிகாஷி ஔஷ்ணயு ॥ சசு

உக்ஷிணெ தரு ஹரு ஆஜ வ்ரு உவாந வ்ரு உக்ஷிணெ ।
ஸாயயெ உவ்ரு கரி வ்ருவ்ருஷி ஹரி வஷி தாம் வ்ரு ந்ரு ரு யரு ரு யரு ॥ சள

வ்ரு வ்ரு நதெயயொமா நா தெதஜ்வஸாசோ நரு ரீரி தஃ ।
வ்ரு ரம்ஸ்ரு கரு ம்ஹாம் ஹ்ரீரொரொஸ்ரு ரொஸ்ரு ந்ரு வெஉவ்ரு ரிஷி ஹரி வஷி தாந்ரு ॥ சஅ

வஜ்ரு நீம் கி நரு வெஸ்ரு ஶிசாந்ரு ஸிவகரு ம்வஸ்ரு ரு வொ தீரொ ।
கவிதா வவரு கரு ம்ஹாம்வரு ரு விதெரு ஸா யிவஷி தாஸ்ரு ந்ரு வெஸரு ॥ சகூ

ரரு ஹிவவஸம்வ்ரு ந ஹாவெவரு ரு வரு ஹிஜயிகுவாயயாகரு ஜஃ ।
தகுவசி ஹி தீரு ரு ஷிவி நரு ரு ரு கூ ரு வாரி ஹ்ரீரீம் வஸோவதொரு ॥ ஙம

தகூஹரூர்ஃ வ்ரீவ்ருவஜ்ஜெவெ ஃ்ரிஷ்டவி டயொதி தழ்
கூரகூஹர்ழிக்ஷ்ணவஃஷ்ஹரா ஃ்ரஸ் வாஹ்ருஸ்ரிவவாவகூழ் ருக

வஸ்ரிஷாஜ்ருவரா ஸ்ரிருயாஜ திஷ்வஸஷ்டுவ்ரெவெணவாரு ।
ஜ்ஹ்ரூயாத்ர ஃஹராஷராவஸ்ர வ்ருயாநெவிவஷராஷகூழ் ॥ ருஉ

ரெவெஷ்டர்ஃ கொணெஷ்ர ஹொதவ்ர்ஃ வ்ருயாநெதவ்ருயெஹ்ரவ்ஸீரு ।
ஹ்ருவெவ்ருரெஹிஃ கூரோஜ்கூர வ்ரிணாஹ்ரூர்தவ்வஹாநகழ் ॥ ருங

ராதி ரெஷர வ்ருவொரெஹ்ரவ்ம வ்ருஹாதெத விஃரெததஃ ।
வஸ்ரிஷ்டெவ்ராய ம்ராஸ்ரஹ்ரா தஃ கூர்தஃஜ்ஹ்ராஜ்விவிஹ்ரூஹஃ ॥ ருச

வ்ஸம்வ்ரிஜ்ஜெவ்ராஜ்ரு தவ் ஐவிம்வொரஃஷ்டுகஸ்ரஸ்ரஹாருகஸ்ரஞ்ஜெவஷ்ர வாவகாரு।
ரெஷிகாஜீஃஷ்டுவ்ஸம்வஸ்ரிஜ்ய ஏகூஷிணார ஹாவரெத வ்ருயக்ஸ் ॥ ருடு

ஃஸ்ரஹ்ரிதெத நாஃபிகா வஸ்ரிரெவ்ரு ஃஜ்ஜ நவ்ராவம வஃராரஹெக ।
கூரஸ்ரஹாரு ஐவிம்வஸவஸ்ரொரநவ்ரு வ்ஷ்ணிஜ்ரெ வஸ்ரிவ்ருவக்ஷ்ரவ்ரெதி॥ ருசு

கூரஸ்ரஹாகஸ்ரஐீஜம் வஃராஹாய ஷிவவ்ரு ஹ்ரூஜ்ஜிவி நவ்ருஹெக ।
வஜ்ஜ்ருநவ்ரா ஐீஜஃராஹாய தவ்ருவீரெஸ்ரத விநவ்ருஹெக ॥ ருள

விஹ்ரூஷ்ராநாஜ்ஞ ஐீஜாஸ்ரி வீரெ உகூராஜ்ஜிவ்ரெதா நவ்ருஹெக ।
தத்தக் கூரஸ்ரஹஜ்ரெஜெ ரெஸ்ரெவ தத்தஜ்ஜெஷிஷெஷவெஸ ॥ ருஅ

ஏக்ஷ்ணாரவி ஐீஜாஸ்ரி வ்ரெஷாஜ்ஞ்ரஹ்ரூஜ்ஜி விநவ்ருஹெக ।
தத்தக் கூரஸ்ரஹொஜ்ரெகெ ரெஸ்ரெவ வ்ரெஷாஜ்ஞ வ்ஸவ்ரநஜ்ஞவெக ॥ ருகூ

ஸ்ரீகண்ணர்ஸ்ரிஹவ்ஸவ்ஸ வ்ரஸ்ரகெவ்ஷ விஷ்ராமழிழ் ।
விநவ்ருஹெக காரிகாஜ்ருஜ்ஞ வொவஹெஹ்ம ம்ராஸ்ரஷ்தஜீஃ ॥ சூம

ஜ்ரெவெஸ்ரம ஸ்ரூவஸ்வெக வஸ்ரா ஜ்ரூவஜீம வ்ஸஜ்ரகூஷவாரஜீயொஃ ।
வ்ஸவ்ரநம வொத்ஸவம ஹ்ரஸ்ரிரெநவெஹ்ரூம காராயெஜ்ஞவா ॥ சூக

கூரந்ரகூரஜ்ரதவாரோரநு ஸ்ரூவஸ்ரெநாகூவஜ்ரூவஸ்ரெக ।
வ்ஸவஷ்டுயொ ஏக்ஷ்ணாரஜீஸ்ரஷ்ரெதரு ஸ்ரூவஸ்ரிஃகாராஸ்ரஷ்ரெத நராஃ ॥ சூஉ

வொவிஷ்ரா ஹிஷ்ர ஹாகூர்ரய்ரு வொழாநு வ்ஸாத்ரஹிவாஜ்ஞ்தாரு ।
ஜெஹாஜ்ஞெ வராஜீவராரநம கதருராயாயாஷவஸ்ரஷ்ராஃ ॥ கூக

ஏ தி ஏக்ஷ்ணாரஜீஸ்ரி தி ருஸ்ரூவஸ்ரநவியி

வட்ஸ்ர வஸ்ரகவ்ஜ்ஞாரஸ்ரதஜீஃ ।

முல்லைவன - தட்சிணாமூர்த்தி

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த திருக்கருகாவூரில் ஸ்ரீ முல்லை வனநாதர் (படம்-76) திருக்கோயில் விளங்குகின்றது. இத்திருக்கோயிலின் தேவகோஷ்ட மாடத்தில் வனத்தில் இருப்பது போன்ற ஓர் உணர்வினை அப்படியே நமக்கு மோனநிலையில் இருந்து ஞான நிலையினைப் புகட்டும் உயர்நிலை தட்சிணாமூர்த்தியைத் தரிசிக்கலாம். பத்ரபீடத்தில் விளங்கும் இப்பெருமான் வீராசனம் கொண்டு வேதத்தின் உண்மைப் பொருளை முனிவர்களுக்கு உணர்த்துகின்றார். பின்னல் விளங்கும் ஆலமரத்தில் உருத்திராக்க மாலையும், விபூதிப்பையும், மரப்பொந்தில் புறவைகளும் மரக்கிளையிலிருந்து படம் எடுத்துச்சீறும் பாம்பும், யோகதண்டமும் காணப்படுகின்றன.

ஞானகாரணராகிய பெருமான் ஜடாபாரத்துடன் விளங்குகின்றார். நெற்றிப்பட்டம், பத்ரபூரிமம், கண்டாபரணம், ஏகருத்திராக்கம் யக்ஞோபவீதம் ஜபமாலை ஆகியவை திகழ, காதுகளில் காதோலையும், மகரக்குழையும் அணிசெய்யக் காட்சிதருகின்றார். பின்கரங்களில் அக்னியும், ஜபமாலையும் ஏந்தியுள்ளார். முன்வலக்கரம் விபாக்கியாக முத்திரையினைக் காட்டவும் முன் இடக்கரம் வேதச்சுவடி கொண்டு விளங்கவும் அருள் நோக்கராய் பத்ர பீடத்தில் அமர்ந்துள்ளார்.

இப்பெருமானின் திருவுருவம் சுமார் 3½ அடி உயரம் உள்ளதாக அமைந்துள்ளது. வலப்பக்கம் மேற்குப்பகுதியில் தம்பதிபர் இருவர் தொழுத வண்ணம் வரம் பெறவேண்டும் என்ற நிலையில் காணப்படுகின்றனர். இதன் கீழே முனிவர் இருவர் மௌனியாக விளங்கும் பெருமானின் திருக்குறிப்பை நோக்கிய பாவனையில் அமர்ந்துள்ளனர். இடப்பக்கம் மேலே வீணை ஏந்திய இருவர் உள்ளனர். இதற்குக் கீழ் இருமுனிவர்கள் உத்குடிகாசனத்தில் இருந்து யோசிக்கும் பாவனையில் விளங்குகின்றனர். முனிவர்கள் கேசங்கள் எல்லாம் ஜடாமகுடமாகக் காணப்படுகின்றன. பெருமானது திருவடிக்கீழே முயலகன் உள்ளான். பத்ரபீடத்தின் இருமருங்கிலும் இருமான்களும் மற்றும் சீறிப்படம் எடுத்துள்ள பாம்பும் தம்பகைமை நீங்கி அமைதியாக உள்ளன. முல்லை வனத்தில் மோன நிலையில் விளங்கும் பெருமானைத் தரிசித்தால் மனத்தில் சாந்தி என்றும் நிலவும்.

காஞ்சி - சத்யேனேசுவரர் கோயில் ஜடாமண்டல ஞானமூர்த்தி

காஞ்சி-சத்யேனேசுவரர் ஆலயத்தில் இக்குருமூர்த்தி எழுந்தருளியுள்ளார். இத்திருவுருவம் மிகநுண்ணிய வேலைப்பாடு அமைந்ததாகும். அடர்ந்து பரந்து விளங்கும் கல்லால மரத்தின் இலைகள் அடர்த்தியாகவும் (படம் - 77) (கி. பி. 13 ஆம் நூற்றாண்டு) தெளிவாகவும் விளங்குகின்றன. பெருமானின் திருமுகப் பொலிவினை மேலும் அழகூட்டு வனவாக, அவரது ஜடைகள் ஜடாமண்டலமாக சூரியபிரபை போன்று விளங்குகின்றன. நெற்றியில் நெற்றிப்பட்டம் விளங்க, சிரசில் பிறையும், கங்கையும் ஒளிந்துகாணப் படுகின்றன. பின் கரங்களில் இவரது திருமுகப் பொலிவைப் பார்த்தவாறு அமைந்துள்ள படம் எடுத்த நாகமும், தீச்சுடரும் விளங்குகின்றன. முன்கரங்களில் வேதச்சுவடிகளை ஏத்திக்கொண்டு, வேத தத்துவார்த்தங்களை விளக்குமுகத்தான் தாம் மௌன நிலையில் ஞானமுத்திரையினைக் காட்டுகின்றார். திருப்பாதத்தின் அடியில் முனிவர்களின் கூட்டங்கள் விளங்குகின்றன. அம்முனிவர்கள் மகா மௌனியாக இருந்து ஞான நிலையினைப்பெருமான் மூலமாக உணர்ந்தவாறு உள்ளனர். பெருமான் சுரோணிப் பட்டையுடன் பட்டு வஸ்திரம், காற்சிலம்பு, வீரக்கழல், மற்றும் திருமார்பில் சர்வாபரணங்களும் கொண்டுவிளங்குகின்றார். பெருமானின் இடப்பக்கம் முனிவர்களைப் பார்த்தவண்ணம் நந்தியம் பெருமானும் அமர்ந்துள்ளார். முயலகனின் பார்வை பெருமானைப்பார்த்ததால் ஆணவமலம் நீங்கினாற்போலக் காணப்படுகிறது. ஞானநிலைகளையுணர்த்தும் இக்குரு மூர்த்தியின் பேரழகினை நேரில் கண்டு உணர்க.

மாங்கல்யப்பிச்சைக் கேட்டு அழுது புலம்புகின்ருள். ஞான மூர்த்தியின் திருவடியை நோக்கித் தனது இருகரங்களையும் தலைக்கு மேலே தூக்கியவாறு "சம்போ" என்று கூறுவது போல கண்ணீர்மல்க வேண்டுகின்ருள். பெருமான் ரதியின் துயர்துடைக்க அருக்கிரகிக்கின்ருர். ரதியின் மாங்கல்யம் காக்கப்படுகிறது. இத்தகைய புராணக் காட்சிகளைச் சிற்பி நமக்கு உயிரோட்டமாக வடித்துக் கொடுத்துள்ளார்.

ஆய்விற்குரியது :

தாராசுரம் ஸ்ரீ ஐராவதேஸ்வரர் திருக்கோயிலினுள் விளங்கும் மத்திய தொல்பொருள் ஆய்வுக்கூடத்தில் ஒரு தட்சிணமூர்த்தி சிலை காணப்படுகின்றது இச்சிலை மிகவும் தெளிவின்றிப் பின்னமாக உள்ளது. இதன் உயரம் 60 செ. மீ. ஆகும். முடிகளெல்லாம் ஒரு சேர அமைந்த கேசபந்தமாக உள்ளது. பின் இருகரங்களும் அலபத்ம ஹஸ்தமாகவும் விஸ்மய ஹஸ்தமாகவும் உள்ளன. பெருமான் ஒருவகை வீராசனத்தில் எழுந்தருளியுள்ளார். கல்லால மரமின்றி இருபத்துமூன்று (23 சுடர்கள்) சுடருடன் கூடிய திருவாசி காணப்படுகிறது. இத்திருவுருவம் ஆய்வுக் குரியதாக அமைந்துள்ளது.

தூணில்காணப்பெறும் வீணைதரர் :

மேலும் தாராசுரம் ஸ்ரீ ஐராவதேஸ்வரர் திருக்கோயிலின் மகா மண்டபத்தூணில் வீணைதர தட்சிணமூர்த்தி நின்ற கோலத்தில் காட்சி தருகிருர். செருக்குடன் நின்று கொண்டிருக்கும் முயலகன் தலையில் தனது இடப்பாதத்தைப் பதியவைத்துள்ளார். திருவடியின் சிறப்பை அறியாத இவனே மாய இருளில் அகப்பட்டமையால் துன்பம் தாங்க மாட்டாது அலறி இரு கரங்களையும் விரித்தாற்போன்று காணப் படுகின்ருன். இது இப்பகுதியில் ஓர் அரிய சிற்பமாகும். பல்லவர்களின் கலைத்திறத்தில் அமைந்த மாமல்லபுரத்து வீணைதர தட்சிணமூர்த்தியானவர் நின்று கொண்டிருக்கின்ற முயலகன் தலையில் தனது பின் இடக்கரத்தை வைத்து அழுத்தியமையினைக் கண்டு இங்கு சோழர்கள் மாய இருளை முழுவதுமாக அகற்றி அருளுபவன் என்பதனை உணர்த்தும் பொருட்டு இப்படி வடித்தனர் போலும் என்று எண்ண வேண்டியுள்ளது.

ஜடாபாரத்துடன் விளங்கும் இவர் இருகரங்களுடன் விளங்குவது சற்று உற்று நோக்கத்தக்கது. அவ்விரு கரங்களும் வீணையினை ஏந்தி மீட்டும் நிலையில் உள்ளன.

வீணைதரப் பெருமானின் இருமருங்கிலும் இருமுனிவர்கள் வீணை ஏந்திய நிலையில் நிற்கின்றனர். முனிவர்களின் கரங்கள் அலபத்மகரமாக உள்ளன. இக்கர அமைதியானது நாதத்திற்கே தலைவனுகிய பெருமான் வாசிக்கும், நாதஒலியின் சிறப்பை மகிழ்வுடன் அறிவிப்பனவாக அமைந்துள்ளன.



தாராசுரம் - கலைத்தூணில் யோகமூர்த்தி

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தாராசுரம் எனும் தலம் சிற்ப வேலைத்திறனுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இதனை ராஜராஜேஸ்வரம் என்பர். இங்கு அருள் வழங்கும் பெருமானின் திருநாமம் ஐராவதேஸ்வரர். இத்திருக்கோயிலின் பலிபீடத்திலிருந்தே சிற்ப நுணுக்க வேலைப்பாடுகள் தொடங்குகின்றன. அவை நம் உள்ளத்தை நெகிழவைக்கின்றன. பலிபீடத்தின் படிகள் நாத ஒலியை எழுப்புகின்றன. இத்தகைய திருக்கோயிலின் மகாமண்டபத்தூண்களில் எண்ணற்ற புராணக்கதைகளைக் காணலாம். சிலதூண்களில் சிவன்வடிவங்கள், விஷ்ணுவடிவங்கள், விலங்குகள், மலர்கள் முதலான வடிவங்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிற்பமும் ஒரு அடிக்கு மிகாமல் அமைந்துள்ளது. இவை அனைத்தும் புடைப்புச் சிற்பங்களாகும். இக்கலையழகு மிக்க திருக்கோயிலினை நமக்கு அளித்த மன்னன், இரண்டாம் ராஜராஜன் (காலம் 1150 – 1173). ஆவான்.

இத் திருக்கோயிலின் மகா மண்டபத்தூண்களில் 28 தட்சிணமூர்த்தியின் திருவுருவங்கள் பல் வேறு நிலைகளில் காணப்படுகின்றன.

இவைகளுக்கு எல்லாம் சிகரம் வைத்தாற் போன்று விளங்குவது தேவ கோஷ்டத்தில் உள்ள தட்சிணமூர்த்தியின் திருவுருவம் ஆகும். இந்த 28 தட்சிணமூர்த்தியின் திருவுருவங்கள், 28 சிவாகமங்களைக் குறிப்பனவாக அமைந்துள்ளன எனலாம். இந்தத் தூணில் உள்ள காட்சிகள் முன்று பிரிவுகளாக அமைந்துள்ளன. மேற்பகுதியில் ஜகத் குருவாக விளங்கும் தட்சிணமூர்த்திப் பெருமானின் முன்னால் சனகாதி முனிவர்கள் நால்வர் நின்ற வண்ணமாய், இருகரங்களைக் கூப்பிக் கொண்டும் பெருமானின் உபதேசச் சிறப்பு அம்சங்களை அனுபவித்துக் கொண்டும் இருகின்றனர்.

இதற்குக் கீழ்ப்பகுதியில் தேவர்களின் துயர்துடைக்கவும், முருகப் பெருமான் திருவவதாரம் கொண்டருளவும், இந்திரன் முதலான தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மன்மதன் தனது கரும்பு வில்லால் யோகநிலையில் விளங்கும் பெருமானின் மீது கணை தொடுக்கின்றான். பெருமானை ஒன்றையும் பற்றாது ஞான சொரூபமாக இருந்து தன் மனத்துள் எல்லாவற்றையும் கண்டும் காணாமலும் உணர்ந்து வீற்றிருக்கின்றார். காமனின் கணை பட்டவுடன் பெருமானின் நெற்றிக்கண் மலரக் காமன் பஸ்பமாகி அப்படியே விழுகின்றான். இக்காட்சி மூன்று வதாக அமைந்துள்ளது. விழும் போது காமன் இருகரங்களைக் கூப்பிய வாறே விழுகின்றான். இவனது கரங்களுக்குப் பக்கத்தில் ரதிதேவி

யோக பட்டை கொண்ட இலம்பையங் கோட்டூர் ஞானமூர்த்தி

இலம்பையங் கோட்டூரில் உள்ள இந்தத் தட்சிணமூர்த்தியின் திருவுருவம் சற்று மாறுபட்ட (படம்-85) அழகிய தோற்றத்துடன் காணப்படுகிறது. ஜடாபாரத்துடன் தோன்றும் இவரது திருமுகத்தின் எழில் அமைதி காண்பவரின் உள்ளத்தை நெகிழச் செய்கின்றது. பின் வலக்கரத்தில் விளங்கும் திரிசூலம் பீடத்திலிருந்து சோராக (செங்குத்தாக) நெற்றிப்பட்டைவரை நீண்டு காணப்படுகிறது. பின் இடக்கரத்தில் தீச்சுடர் விளங்குகின்றது. முன் வலக்கரம் சின்முத்திரையை மார்போடு பொருத்திக் காட்டுவதாக அமைந்துள்ளது. இதன் கருத்து சின்முத்திரையின் உட்பொருளை நெஞ்சில் நிறுத்த வேண்டும் என்று அறிவிப்பது போன்றுள்ளது. சுவடியேந்திய முன்இடக்கரமானது இடக்கால் முட்டியின் மீது காணப்படுகிறது. வல முழங்கால் யோக பட்டையால் இடுப்புடன் பிணைக்கப்பட்டுள்ளது. இடப்பாதம் முயலகனை மிதித்துள்ளது. ஜடாமகுடத்துடன் விளங்கும். இருமுனிவர்கள் இப்பெருமான் அருகில் காணப்படுகின்றனர். இத்திருவுருவத்தின் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு என்பர்.



சிவபுரம் - ஞானமூர்த்தி

செங்கை அண்ணாமாவட்டத்தில் உள்ள சிவபுரத்துச் சிவாலயத்தில் (படம் – 79) இந்த ஞானமூர்த்தி காட்சி தருகின்றார். கல்லாலமரத்தின் கிளைகள் பெரியனவாக விளங்குகின்றன. மரத்தின் கிளையில் பாம்பு ஒன்று படம் எடுத்துச் சீறும் நிலையில் உள்ளது, விபூதிப்பையும், தொங்குகிறது. மரப்பொந்தில் பறவைகள் பெருமானை எட்டிப்பார்த்தபடி உள்ளன. இப்பெருமான் பத்ரபீடத்தில் சர்வாபரண பூஷிதராக வீராசனம் கொண்டு காட்சி தருகின்றார். பின் இடக்கரத்தில் திகழும் தீச்சுடர் உயர்ந்தும் எடுப்பாகவும் உள்ளது. பின் வலக்கரத்தில் ஜபமாலையும், முன் கரங்களில் சுவடியும், ஞானமுத்திரையும் கொண்டு விளங்குகின்றார். வலக் காதில் மகரக்குழையும் இடக்காதில் அணி ஏதும் இல்லாமலும் இருக்கின்றார். ஜடைகள் எல்லாம் மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்தாற்போன்று (ஜடாபாரம்) உள்ளன. சின்முத்திரையான ஞானமுத்திரை ஹஸ்தத்தின் கீழ் ஓர் நாகமும் உள்ளது. முயலகன் சற்று மாறி காணப்பட்டாலும் பெருமானின் ஆற்றல் தாங்கமாட்டாது பூமியை நோக்கியவாறு விழிகள் பிதுங்கக் காணப்படுகின்றான். மேலும் பீடத்தில் சில சிறுசிலங்குகள் பெருமான் தமது சிந்தனையை ஒன்றுக்கிய ஞான நிலையினை இத்திருவுருவத்தில் நாம் காண்கிறோம். இத்திருவுருவம் கி. பி. 10–ஆம் நூற்றாண்டு சோழர் காலத்தது ஆகும்.

அத்தியூர் - குருமூர்த்தி

இத்திருவுருவத்தைச் செங்கை அண்ணுமாவட்டத்தில் உள்ள அத்தியூர் (படம்-80) சிவாலயத்தில் காணலாம். பெருமானது ஜடைகள் வனைந்தனவாக, சற்றுப்பக்க வாட்டில் விரிந்து கீழ்நோக்கிய படி உள்ளன. எல்லா ஆபரணங்களும் அணிந்துள்ள இப்பெருமான் நான்கு கரத்திலும் அக்னி, ஜபமாலை, சின்முத்திரை, சுவடி கொண்டு அருட்காட்சித் தருகின்றார். வீராசனத்தில் திகழும் பெருமானின் பாதப்பகுதியில் நான்கு முனிவர்கள் ஜடாபந்தத்துடன் அமர்ந்துள்ளனர். பெருமானின் காலடியில் முயலகன் அழுந்திய நிலையில் காணப்படுகின்றான். புன்முறுவலுடன் காணும் இக்குருமூர்த்தியின் பேரழகு சிறப்புடையதாகும். இத்திருவுருவம் கி. பி 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என ஆராயாச்சியாளர் கருதுகின்றனர்.



நாகலாபுரம்
சமபாத ஸ்தானக வீணைதர தட்சிணாமூர்த்தி

நாகலாபுரத்தில் கோயில் கொண்டு விளங்கும் (படம் – 81) வீணைதர தட்சிணாமூர்த்தி சமபாத ஸ்தானகமாக நின்ற நிலையில் முன்வலக்கரத்தால் வீணையினைவாசிக்கும் பாவனையிலும், இடக்கரத்தால் வீணையைப்பற்றிய நிலையிலும் காட்சி தருகின்றார். பின் இடக்கரத்தில் மானும், பின் வலக் கரத்தில் மழுவும் காணப்படுகின்றன. சந்திரனும் கங்கையும் இவரது ஜடாமண்டலத்துக்கு மேலும் அழகூட்டுகின்றன. ஜடாமண்டலத்தைப் போன்று இவருக்குப் பின்னல் கல்லாலமரம் விளங்குகிறது. சர்வாபரணத் துடன் காட்சி தரும் இவரது திருவடிகளின் கீழ் பல்வேறு நிலைகளை உடைய நான்கு முனிவருவர்களும் காட்சிதருகின்றனர். முயலகன் பெருமானது திருவடிகளுக்கும் முனிவர்களின் ஜடாபந்தத்திற்கும் இடையில் காணப்படுகின்றான். (சமபாதஸ் தானகமாவது – நின்ற கோலத்தில் பாதங்களைச் சமமாகவைத்து உடலைவளைக்காமல் நேராக நிற்பதாகும்.)



கணித சாத்திரத்தில் வீணைதர தட்சிணமூர்த்தி

சிவபெருமானை – அறிவியல் – நுண்கலைகளின் தலைவனாக வீணைதர தட்சிணமூர்த்தியாகச் சித்தரிக்கும் இந்த வெண்கலச் சிலை சோழர் காலத்து 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. குறியீடுகளின்படி "ருத்ரஸ்யா" (சிவபிரானின் ஐம்முகங்கள்) என்ற சமஸ்கிருதச் சொல், இலக்கம் ஐந்தினைக் குறிக்கும்.

கி. பி. 8-ஆம் (படம்-82) நூற்றாண்டில் இந்தியாவில் சமஸ்கிருத கணித நூல்களை அரபு அறிஞர்கள் ஆராய்ந்து இரு உண்மைகளைக் கண்டனர். 1. சுன்னக் (○) குறியுடன் சேர்த்து தசம முறையைப் பயன்படுத்தும் இட மதிப்பு எண் குறியீட்டு முறை; 2. நிமிர் வீதங்கள் (Sines) அடங்கிய ஒரு திரிகோண மிதி. வடமொழியில் எழுதப்பட்ட கணித நூல்கள் செய்யுள் வடிவில் மாணாக்கன் மனப்பாடம் செய்யத் தக்க எளிய முறையில் இயற்றப்பட்டன. கணிதச் செய்யுளுக்கு விளக்கம் தர உரை நூல்கள் பல எழுதப்பட்டன.

எண்கள் செங்குத்தாகப் பலவரிகளில் எழுதப்பட்டன. "ஆரியா பாட்டியா" குறித்து கி. பி. 629ல் "மூத்த பாஸ்கரர்" எழுதிய விளக்க உரையிலிருந்து எண்களை எழுதும் முறைபற்றி அறியமுடிகிறது. இவை அனைத்தும் கணிதத்தைத் தெளிவாக அறிவுதற்குத் துணை செய்யவில்லை. காரணம் ஓலைச்சுவடிகள் பெரும்பாலும் அழிந்து விட்டன.

ஆனால் மிகப்பழைய ஆவணம் எனக் கருதப்படும் 12 — ஆம் நூற்றாண்டு "பக்ஷாலி" எழுத்துப் படியில் வடமொழியில் எழுதப் பட்ட ஒரு கணித நூலின் உடற்பகுதியில் கட்டங்களுக்குள் பல வரிகளில் அரபு எண் குறியீடுகள் காணப்படுகின்றன. இந்தக் குறியீடுகள், இலக் கண அல்லது சொல்லணித் தன்மையனவாக உள்ளன. அதில் இலக்கியச் சொற்றொடர்களாலும் உருவகங்களாலும் குழூஉக் குறிகளாலும் எண்கள் குறிக்கப்படுள்ளன. ஆகாயம் என்றால் சூனியம் என்று பொருள் இச்சூனியத்தை "○" (சைபர்) என்ற வடிவம் குறிக்கிறது.



அத்தியூர் குருமூர்த்தி
செங்கை அண்ணாவட்டம்
படம் 80 பக்கம் 46

நாகலாபுரம் சமபாதஸ்தானக
விஷ்ணுதர தட்சிணாமூர்த்தி
படம் 81 பக்கம் 47





வீணதர தக்ஷிணமூர்த்தி
"ருத்ரஸ்யா"
[உலோகச் சிற்பம்]



திருநாகேஸ்வரம்
அர்த்தபத்மாசன ஞானமூர்த்தி
படம் 83 பக்கம் 50



திருவலஞ்சுழி
ஊர்த்துவஜானு வீணைதரர்
(தஞ்சை ராஜராஜசோழன்
அருங்காட்சியகம்)

படம் 84 பக்கம் 51

யோகபட்டைகொண்ட
இலம்பையங்கோட்டூர் — ஞானமூர்த்தி
படம் 85 பக்கம் 52





கால்மாறி அமர்ந்தருளும்
தக்ஷிணமூர்த்தி
(இராக்கிணம்பாளையம்)
ஈரோடு அருங்காட்சியகம்
படம் 86 பக்கம் 53



வீணைதரர்
தஞ்சை அரண்மனை
(மராட்டா தர்பார்ஹால்)
படம் 88 பக்கம் 58



வெட்டுவான்கோயில்

மிருதங்க தக்ஷிணாமூர்த்தி

படம் 87 பக்கம் 54



மராட்டியர் காலத்து

சக்தி தக்ஷிணமூர்த்தி (தஞ்சாவூர்)

படம் 89 பக்கம் 70



ஆலங்குடி ஆலமர்செல்வர்

(உற்சவர்)

படம் 90 பக்கம் 75



தனிக்கோயில் கொண்ட
மோனமூர்த்தி
(அகரம்கோவிந்தவாடி உற்சவர்)
படம் 91 பக்கம் 76



தில்லை வீணுதர
தக்ஷிணமூர்த்தி
படம் 92 பக்கம் 77



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மயிலாடுதுறை கற்சாலையில் அமைந்துள்ளது மூவலூர் என்னும் தலமாகும். இத்தலம் வைப்புத் தலத்தில் ஒன்றாகப் போற்றப்படுவது. இத்தலத்தில் உள்ள மார்க்க சகாயேசுரர் திருக்கோயிலின் துவஜஸ்தம்பத்தில் (கொடிமரத்தில்) தென் திசையில் தட்சிணமூர்த்திப் பெருமான் காட்சிதருகின்றார். கொடிமரம் முழுவதும் (படம் – 97) செப்புத் தகட்டால் போர்த்தப்பட்டுள்ளது.

தட்சிணமூர்த்திப் பெருமானின் வலப்பக்கம் அமைந்த கல்லாலமரம் இடப்பக்கம் நீண்டு பரந்து நிழல் செய்கின்றது. பின்கரங்களில் அக்கினி மற்றும் உடுக்கையுடன் சேர்ந்த நாகம் விளங்க, முன் வலக்கரத்தால் சின்முத்திரையினைக் காட்டியருளுகின்றார். முன் இடக்கரம் முழங்கால் மீது அமைந்துள்ளது. வலப்பாதத்தை நீட்டி முயலகனை ஊன்றி இடப்பாதத்தை வளைத்து அதன்மேல் வைத்து வீராசனமாக அமர்ந்துள்ளார். இது வீராசனத்தில் ஒரு தனிவகை என்று கூறலாம். மலைமீது அமர்ந்த பெருமானின் இருமருங்கிலும் விளங்கும் முனிவர்களுள் ஒருவர் "ஸ்வஸ்திகாசன" நிலையிலும், மற்ற மூவரும் பத்மாசன நிலையிலும் இருந்து பெருமான் உணர்த்துகின்ற உண்மைப் பொருளை அநுபவித்த நிலையில் உள்ளனர். [இவ்வாதீனத்தின் கொடிமரத்தில் இது போன்றே ஸ்ரீ நமசிவாயமூர்த்தியின் திருவுருவம் அமைந்து விளங்குவதனை நோக்குதல் நன்று] மலையில் தாவரங்களும், மிருகங்களும் சூழ்ந்து காணப்படுகின்றன.

திருவிளையாடற் புராணம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறைஆறு
அங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத்தொ டக்கை வெல்வாம்.

— பரஞ்சோதிமுனிவர்

ஓவியத்தில் தட்சிணாமூர்த்தி

பண்டைய ஓவியம் :

இந்தியாவில் சிற்பத்தைப் போலவே ஓவியத்தையும் ஒரு கலையாகப் மக்கள் போற்றி வளர்த்தனர். மக்கள் இதனை "விநோத ஸ்தானங்" களுள் ஒன்றாக எண்ணினார்கள். அரசர்கள், பிரபுக்கள், மக்கள் ஆகியோர் ஓவியம் போன்ற பல கலைகளையும் பயின்றிருந்தார்கள். ஆடல், இசை, ஓவியம், சிற்பம் ஆகியவை அழகுக்கலைகளில் மிக முக்கிய மானவைகளாகக் கருதப்பட்டன. மக்கள் ஓவியரை அவருடைய கலைக்காகப் பெரிதும் மதித்து வந்தார்கள். மக்களுடைய ஆதரவை மிகுதியாகப் பெற்ற சில சித்திரச்சாலைகள் இருந்தனவென்று இலக்கியங்களால் தெரிகிறது. அவற்றுள் சில அரண்மனையில் இருந்தன. பொதுமக்களுக்குப் பயன்படும் சித்திரச்சாலைகள் பொது மன்றங்களில் இருந்தன. சில சித்திரச் சாலைகள் வண்டிகளில் வைத்து ஊர் ஊராகக் கொண்டு போகப்பட்டன.

ஓவியங்களின் வகைகள் :

கட்டடக்கலையை அழகுபடுத்துவதற்காகச் சிற்பம் பயன்பட்டது போலவே ஓவியமும் பயன்பட்டது. ஓவியங்களுள் பெருபாலானவை கோயில்களிலும், குகைகளிலும், அரண்மனைகளிலும் பின்னர் மடாலயங் களிலும் காணப்படுகின்றன. ஆதியில் சிற்பங்களின் மீது வர்ணம் தீட்டியிருந்தார்கள். தற்போது இயற்கையின் அழிவால் புறத்தே இருந்த நிறம் அழிந்துபோய் சுவர்கள், தூண்கள், கூரைகள், முதலானவைகளில் தீட்டப்பெற்ற ஓவியங்களை மட்டும் இன்று, நாம் காண்கிறோம். இத்தகைய ஓவியங்களைத் தான் நாம் அஜந்தா, பாக் பாதாமி, சித்தன்னவாசல், எல்லோரா முதலான குகைகளிலும், திருக்குற்றாலம் காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருவஞ்சைக்களம், திருவீழிமிழலை, கும்பகோணம் திருப்பெருந்துறை, திருவையாறு, சிதம்பரம், லேபாட்சி, தாடலத்திரி போன்ற மிகப்பிரசித்திப்பெற்ற திருக்கோயில்களிலும் ஓவியங்களின் சிறப்பதைக் காண்கிறோம்.

ஓவியங்கள் சுவர்களில் மட்டுமே தீட்டப்பெற்றன என்பதில்லை. சித்திரப்படம் என்னும் சொற்றொடர், ஓவியங்கள் சீலையின் மீது தீட்டப் பெற்றன என்பதைக் காட்டுகிறது. பெரும் பாலும் ஓவியத்தைச் சீலையில் எழுதிக் கவனமாகச் சுருளாகச் சுருட்டி வைத்துக் கொள்வதும் (திருவாவடுதுறை ஆதீனக் கொலு மண்டபத்தில் இத்தகைய ஓவியத்தைக் காணலாம்). வேண்டியபோது விரித்துப் பார்த்துக் கொள்வதும் வழக்க மாகும். சில வேளைகளில் இத்தகைய ஓவியங்களின் மீது சிறு சீட்டுகள்

தீட்டிவைப்பர். சிபிஜாதகக் கதையிலுள்ள சிபியைத் தீட்டிய அஜந்தா ஓவியத்தின் மீது இத்தகைய சீட்டுத் தீட்டப்பெற்றிருப்பதால் அந்தமுறை மிகப்பழமையான வழக்கம் என்று தோன்றுகிறது.

காகித ஓவியம் :

காகிதம் வந்த பின்னர் ஓவியங்கள் அதன் மீதும் வரையப்பட்டன. அவ்வாறு காகிதத்தின் மீது வரைந்த அழகான ஓவியங்களையுடைய மிகச் சிறந்த ஏடுகள் மேற்கு இந்தியாவிலும், நேபாளத்திலும் கிடைத்தன. இந்து. ஜைன, பௌத்த நூல்களில் பளபளப்பான நிறங்களில் விளக்கப்படங்கள் எழுதப்பட்டன. ஓவியம் தீட்டிய கையெழுத்துப் பிரதிகள் இந்தியக்கலை வரலாற்றில் ஒரு முக்கியமான பகுதியாகும்,

மேற்கு இந்தியாவில் கிடைத்த ஜைனக் கையெழுத்துப் பிரதிகளும், நேபாளத்தில் கிடைத்த கையெழுத்துப் பிரதிகளும் பண்டைக்கால மரபின் இறுதியில் வரையப்பட்ட சுவரோவியங்களையும், பிற்கால மொகலாய, ராஜ புரத்திர மரபுகளின் ஓவியங்களையும் இணைப்பனவாக இருக்கின்றன.

தட்சண ஓவியம் :

விஜய நகர சாம்ராச்சியத்தின் காலத்தில் தட்சிணத்தில் ஒரு தனிக் கலை முறை இருந்து வந்தது. அதில் மேற்கிந்திய முறையின் சின்னங்கள் தெளிவாகக் காணப்பட்டன. பீஜப்பூரில் 16 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் ஒரு தனிக் கலைமுறை இருந்து வந்ததாக இலக்கியங் களிலிருந்து தெரிய வருகிறது. தட்சிணக் கலைமுறை ஓவியங்கள் சிறப் பாக பீஜப்பூர் கோல்கொண்டா. அகமத்நகர் ஆகிய இடங்களில் சிறந்து விளங் கிற்று. பீஜப்பூரும், கோல் கொண்டாவும் வீழ்ச்சியடைந்த பின்னர் ஐதராபாத் ஓவியக்கலையை வளர்க்கும் தாயகமாக விளங்கிற்று. இராகமாலா ஓவியங்களையும், உருவச்சித்திரங்களையும் போற்றுகின்ற ஒரு புதிய கலைமுறையானது ராஜபுத்திரர்களிடம் ஊக்கம் பெறலாயிற்று. ராஜபுத்திரக் கலைமுறைக்கு இரண்டு கிளைகள் உண்டு, அதில் ஒன்று ராஜபுத்திரக் கலைமுறை கையாண்ட பொருள்கள் அனைத்தும் இந்துமதம் பற்றியன வாகவே இருந்தன. இந்துக்களின் தெய்வத் திருவுருவங்கள் பல இதில் சித்தரிக்கப்பட்டன.



இராகமாலா ஓவியத்தில்

பத்மாசன வீணைதரர்

இந்தப் பத்மாசன வீணைதர தட்சிணமூர்த்தியின் வண்ண ஓவியம் வடநாட்டில் (ராஜபுத்திரர்களது இராகமாலா ஓவியம்) 18 ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்டதாகும். வடநாட்டுக் கட்டடபாணியில் அமைக்கப்பட்ட சிகரம்வைத்த கொடிகட்டிய மாடியும், அதன் எதிரில் பூந்தோட்டமும் அமைந்துள்ளன. கட்டடத்தின் உட்பகுதியைத் தனியே பிரித்துக் காட்டுவது போல இவ்வோவியம் அமைந்துள்ளது. கீழே உள்ள பகுதி செல்வச் செழிப்பு மிக்கதாகக் காட்டப்பட்டு விலையுயர்ந்த பொருள்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகிறது.

கட்டடத்தின் (படம் – 98) முன்பகுதி முகப்பில், நாதத்திற்கே நாயகனைக விளங்கும் சிவபெருமான் இங்கு இசைக்குரு நாதராக (வீணையினை ஏந்தி மீட்டும் சிவபெருமான்) பத்மாசனத்தில் கல்லும் கரையும் படி வீணையின் நாதத்தை எழுப்புகின்றார். இப்பெருமானின் எதிரில் வடநாட்டு நாகரிகத்துடன் விளங்கும் மாணக்கரும் ஓர் நரம்பு இசைக்கருவியுடன் தானும் உடன் இசைத்து அதில் லயித்து உருகுகின்றார். ஓவியத்தின் மேற்பகுதியில் கதிரவன் வட்டவடிவமாகக் காட்சி தருகின்றான். அக்கதிரவனை மேற்குத்திசையில் படிப்படியாக மறையும்படி வீணைதரப்பெருமான் வீணைநாதமூலமாக வழிகாட்டுகின்றார். இங்கு விளங்கும் பெருமான் இரு கைகளுடன் விளங்குகின்றார். காதுகளில் ருத்திராட்ச மணிகள் விளங்குகின்றன. ஜடைகளை ஜடாபந்தமாகக் கட்டிள்ளார். திருமார்பில் பெரிய ருத்திராட்சமாலையும் புஜங்களில் ருத்திராட்சங்களும் அணிந்துள்ளார். நெற்றியில் வெண்ணீறும் சந்தனமும் விளங்க புன்முறுவலுடன் காட்சி தரும் இவ்வண்ண ஓவியத்தை நேரில் கண்டு அனுபவித்தல் சிறப்பாகும்.

ஆதாரம் : – Ragmala Kota – Bundi School late 18 th century Raga kedar : Depicts lord siva guiding the Sun to set by his music courtesy National museum.

தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயில் ஓவியம்

இத் திருக்கோயிலில் விளங்கும் திருமாளிகைப்பத்தியில் விளங்கும் (பிரதட்சண வீதிச்சுவர்) சுவரிலும் கற்பக் கிருகத்தைச் சுற்றியுள்ள இரண்டு பாதையிலும் இரண்டு அடுக்கு ஓவியங்கள் காணப்படுகின்றன. மேலாக உள்ள ஓவியங்கள் 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இதன் அடிப்பகுதியில் இராசராசன் காலத்தில் தீட்டப்பெற்ற சைவ சமய ஓவியங்களைக் காணலாம். அவ்வோவியங்களுள் சுந்தரருடைய திருமணத் தன்று சிவபெருமான் வேதியர்போல் வந்து அடிமையாக்கிய வரலாற்று வண்ண ஓவியமும், அப்சரஸுகளுடன் நடனம் உள்ள சொர்க்கலோக காட்சி ஓவியமும், இவற்றிற்கெல்லாம் மேலாக 'காலைச் சுற்றி அர்த்த யோகப்பட்டத்துடன் கூடியயோக தட்சிணமூர்த்தி' யின் ஓவியம் மிகச் சிறப்புடையதாகும். மற்றும் திரிபுராந்தகர், திருவிளையாடற் காட்சிகளின் ஓவியங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவ்வோவியங்களை எல்லோரும் காணும் வகையில் மத்திய தொல்பொருள் துறை. இக்கோயிலினுள் ஓர் மியூசியம் நிறுவி அதில் வண்ண ஓவியங்களைச் சேகரித்து வைத்துள்ளனர். இன்றும் அவ்வோவியங்களைக் காணலாம்.

ஓவியம் தீட்டும் முறை :

மறை நூல்களில் காணும் அருவமான கருத்துக்களைப் பருவடிவில் (Abstract & concrete) காட்டும் வண்ணமாகப் பாரத நாட்டு ஓவியம் திகழ்கின்றது. உலகத்திலுள்ள உயிர்கள் மற்றும் உயிரிலிகள் ஆகிய எல்லாப் பொருள்களையும் இறைவனின் தோற்றமாகவே கருதினர்.

கலவை முறை :

ஓவியம் தீட்டுவதற்கு இந்திய ஓவியர் நெய்வண்ணத்தைவிட நீர் வண்ணத்தையும் ஒட்டு வண்ணத்தையும் பெரிதும் விரும்பினர். இவ்வகைகளைக் கொண்டு பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களினால் பெரும்பான்மையான சாயல்களை அமைத்தும், அதில் பளபளப்பான வண்ணங்களைப் பூசி, மேலும் அழகூட்டினர். மேலும் மூலிகைச் செடிவகைகளின் சாறுகளையும் வண்ணத்தில் கலந்து கொண்டு ஓவியம் அழியாது இருக்கச் செய்துள்ளனர்.

அளவு முறை :

ஓர் உருவத்தின் பல்வேறு உறுப்புகளும் குறிப்பிட்ட அளவினவாயும் ஒன்றுக்கொன்று பொருத்தமான விகிதம் உடையனவாயும் இருக்க வேண்டும் என்பது ஓவியத்தின் விதிகளாகும். ஓவியர் பின்பற்றும் அளவு "தாலம்" என்று வழங்கப்பட்டது. முகத்தின் நீளமே 'தாலம்' என்று

வழங்கப்பட்டது. ஒரு தாலத்தின் பன்னிரண்டி லொன்று அங்குலம் எனப் படும். மனித உருவம் எட்டுத்தால அளவு உயரமுள்ள தென்பது ; பிருகத் சங்கிதை ' 'சுக்கிரநீதி' முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளது. இதனை வலி யுறுத்துவதன்பொருட்டு '' எறும்புந் தன் கையால் எண்சாண்'' என்ற பழ மொழியும் உள்ளது.

தமிழர் ஓவியம் :

ஒவ்வு என்னும் வினையடியாகப் பிறந்த ஒவு, ஓவம், ஓவியம் என்னும் இம் மூன்று சொற்களும் ஓவியத்தையே குறிக்கின்றன. '' எது ஒன்றன் பிரதிரூபமாக இருக்கிறதோ அதுவே சில்பம்'' என்று கூறிய '' சதபத பிராமணத்தைப் போலவே '' தமிழர்களும் ஒரு பொருளை ஒத்திருக்கும் தன்மையால் சித்திரத்தை மேற்கூறிய மூன்று சொற்களாலும் விளக்கினர் போலும். தமிழ் நாட்டின் தலைநகரில் ஓவியர்களுக்கு எனத் தனியாக ஒரு வீதி இருந்ததைத் தமிழ் நூல்கள் தெரிவிக்கின்றன. ''நுண்ணிதின் உயர்ந்த நுழைந்த நோக்கின் கண்ணுள் விளைஞர்'' –என்று மதுரைக் காஞ்சியிலும், '' எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி '' என்று மதுரைகாஞ்சியிலும் '' மையறு படிவத்து வானவர் முதலா – எவ்வகை யுயிர்களும் உவமங் காட்டி' என்று மணிமேகலையும், 'உயிராவண மிருந்துற்று நோக்கி யுள்ளத் திழியி னுருவெழுதி'' என்று அருளிய திருநாவுக்கரசர் பாடலிலும் ஓவியத்தின் மேன்மை கூறப்பட்டுள்ளன.

ஸ்ரீ ராஜ ராஜதேவர் தஞ்சாவூர்ப் பெரிய செண்டு வாயில் சித்திர கூடத் தெற்கில் கல்லூரியில் எழுந்தருளி என்ற கல்வெட்டுப் பகுதி தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயில் வெளிப்புறத்துக்கு அருகில் இருந்த ஓவிய மண்டபத்தை நமக்கு நினைவூட்டுகிறது. இது போன்றே சிதம்பரம் ஆயிரங் கால் மண்டபம் திருக்குற்றாலம் சித்திரசபை திருவீழிமிழலை. திருவாரூர் தேவாசிரியர் மண்டபத்திலும் தமிழ் நாட்டின் ஓவிய மேம்பாட்டினைக் காணலாம்.



அம்பர்ப் புராணம்

செய்தொழிலின் அளவும்அருட் சத்தி
பதிதலின் அளவும் சித்தாந்தத்தர்
எய்பொருளின் அளவும் முத்துஇருப்பளவும்
அத்துவிதத் தியல்பும் தேறக்
கொய்மலர்நேர் ஒருகைவிரல் ஒவ்வொன்று
மடக்கி இணைகூட்டி ஆன்றோர்
மெய்கெழுமை இனிதுணர்த்தி ஆலடிவாழ்
அரசடியை விரும்பி வாழ்வாம்.

— மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

நாயக்கர் மன்னர்கள் காலத்து ஓவியம்

பதினேழாம் நூற்றாண்டில் தஞ்சாவூரை ஆண்டு வந்த இரகுநாத நாயக்கர் காலத்து எழுதப்பட்ட 'ரகுநாதாப் யுதயம்' என்னும் நூலினும் விஜயபவனம் என்ற வேறோர ரண்மனையில் சோழர்கள், பாண்டியர்கள், சிங்களவர், செஞ்சி நாயக்கர்கள் இவர்கள்மீது தாம் கொண்ட வெற்றிச் சித்திரங்களும் இவர் காலத்தது ஆகும், கும்பகோணம். இராமசாமிக் கோயில், திருவீழிமிழலைத் திருக்கோயில் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் (நாயன்மார்கள் ஓவியம், புராணக் காட்சிகள்) வரையப்பெற்ற ஓவியத்தின் அடியில் தெலுங்கு எழுத்துகளில் காட்சியின் தலைப்பு எழுதப் பெற்றிருப்பதைக் காணலாம். மேலும் நாயக்கர் காலத்து ஓவியங்கள் சில தஞ்சாவூர் சரஸ்வதிமஹால் நூலகத்திலும், திருவாவடுதுறை ஆதீனத் திலும் காணப்படுகின்றன. மேலும் மராட்டியர்கால ஓவியமும் இங்கு உள்ளன. இவ்வாதீனத்தில் விளங்கும் ஓவியங்கள் யாவும், நீர்வண்ணத் தாலும், ஒட்டுவண்ணத்தாலும் வரையப்பட்டவையாகும்.



திருக்குற்றாலத் தலபுராணம்

ஆல்வருக்கம் தனிலுயர்ந்த வடநிழற்கே
தென்முகங்கொண்(டு) அறவோ ராய
நால்வருக்குள் இருவருக்கும் ஒருவருக்கும்
நவின்றருளி நவிலொணாத
நூல்வருக்கும் ஒருவருக்கும் நுவலாமல்
நுவன்றனனே நுதற்கண் ணீனைப்
பால்வருக்கைக் கனியை அருள் பசுந்தேனைப்
பரவாமல் பரவல் செய்வாம்.

— திரிகூடராசப்ப கவிராயர்

மராட்டியர் கால ஓவியம்

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்திலும் ஓவியக்கலை பின்று நன்கு வளர்க்கப்பட்டு. மரப்பலகையிலும் காகிதங்களிலும் சித்திரங்கள் வரையப்பட்டன. சரபோஜி மகாராஜா தமது காலத்தில் சேகரித்து வைத்த ஓவியச் சுருள்கள் மற்றும் காகித ஓவியங்கள், மருத்துவச் செடிகளின் ஓவியங்கள், மிருகங்களின் ஓவியங்கள், கடவுளரின் ஓவியங்கள் ஆகியவைகளை இன்றும் தஞ்சாவூர் சரஸ்வதிமஹாலில் காணலாம்.

தக்ஷிண ஓவிய முறையுடன் நெருங்கிய உறவுள்ள ஓவிய முறையைத் தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஆதரித்து வந்தார்கள். ஓவியங்களைத், தீட்டியவர்கள் உருவங்களின் சிறுசிறு விஷயங்களைக் கூட மிக நுணுக்கமாகக் கவனித்து வரைந்துள்ளனர். துணியைப் பலகைமீது சேர்த்து வைத்து, அதில் ஓவியம் தீட்டப் பெற்றுளது. இவ்வோவியங்களில் போலி நவரத்தினங்களும் பதிக்கப் பெற்றுள்ளன. உடையிலும் திரைகளிலும் தங்கரேக்கைத் தடவி இருக்கிறார்கள். அக்காலத்தில் மக்கள் பெரிதும் சிவபெருமான் முதலான தெய்வ உருவங்களையும், மன்னர்களின் உருவங்களையும் அழகாய் வரைந்து தமது இல்லத்திலும் கோயில்களிலும், மடாலயங்களிலும் நிறுவி மகிழ்ந்தனர். இவ்வகையில் திருவாவடுதுறை ஆதீனத்திலுள்ள கந்த விலாஸப்பகுதியில் இன்றும் மராட்டியர் காலத்து மன்னர்களின் ஓவியம் காணப்படுகிறது. இதன் விளக்கங்களை ஆதீன வெளியீடு எண் 354 ல் விரிவாகக் காணலாம்.



துறைசைப் புராணம்

செம்மலர்நோன் தாள்சேரல் ஒட்டாமல்
உயிரையெல்லாம் தியக்கம் செய்யும்
அம்மலம்க ழீஇமிகுந்த அன்பரொடு
மருவிநீர் அடையு முத்தி
இம்முறையாம் எனநால்வர்க்(கு) இருவிரற்
சின்முத்திரை யாலியம்பி ஆல்கீழ்
மன்மதன்மேல் நுதற்கண்அனல் இறைத்திருந்த
குருபரனை வணக்கம் செய்வாம்.

— சாத்திரம் சாமிநாத முனிவர்

மராட்டியர் காலத்துப் பலகை ஓவியம்

தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூலக அருங்காட்சியகத்தில் பலகையில் வரையப்பட்ட இந்த தட்சிணமூர்த்திப் பெருமானின் (படம் - 99) ஓவியம் மிகத்தெளிவாகக் காணப்படுகிறது. இப்பெருமானைவர் கங்கையும் மூன்றும் பிறைச்சந்திரனுடன் கூடிய ஜடாபந்தமும் சிரசில் விளங்க காட்சிதருகின்றார். அதில் ஓரிரு ஜடைகள் வீரிசடையாகவும் உள்ளன. மலைகள் சூழ்ந்த கானகத்தில் தாவரங்களும், மிருகங்களும் உள்ள அவ்விடத்தில், கல்லால மரநிழலில் யோக பட்டை அணிந்து வீராசனத்தில் நேராக வீற்றிருக்கின்றார். பின் கரங்களில் சுடரும், ஜபமணிமாலையும் விளங்குகின்றன. முன்வலக் கரத்தில் வியாக்யான முத்திரையினை முனிவர்களுக்குக் காட்டியும், இடக்கரத்தில் வேதச் சுவடிகளைச் சற்று மேல் நோக்கிய நிலையில் வைத்துள்ளார். வலக் காலின் கீழ்ப்பகுதியில் கத்தியும் கேடயமும் தாங்கிய முயலகனை மிதித்துள்ளார். சர்வாபரணங்களும் திகழப் புலித்தோலாடை அணிந்த பெருமானின் இடுப்புப் பகுதியிலிருந்து திருப்பாதம் வரை பரிவட்டம் (பட்டுத்துணி) அணிவிக்கப்பட்டுள்ளது. இடுப்பு வஸ்திரம் இருமருங்கிலும் பக்கவாட்டில் உள்ளன.

இவ்வோவியம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நடுவில் தட்சிணமூர்த்திப் பெருமான் விளங்குகின்றார். இப்பெருமானின் வலப் பக்கம் ஜடாமகுடத்துடன் விளங்கும் கௌசிகர், காஸ்யபர், பரத்வாஜர் முதலானோர் அமர்ந்த நிலையில் கூப்பிய கரங்களுடன் பெருமானின் ஞான மௌன நிலையினைக் கண்டு அனுபவிக்கின்றனர். இதைப் போன்றே இப்பக்கம் விளங்கும் அத்ரி மகரிஷியும் காணப்படுகின்றனர். முனிவர்கள் ஐவரும் புலித்தோலாடை அணிந்து காணப்படுகின்றனர். காமிகாகமம் இத்தகைய முனிவர்களைப் பற்றிக் கூறுகிறது. இவ்வோவியத்தைச் சுற்றிலும் கொடியுடன் கூடிய பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மண்டபம் விளங்குகிறது. கி. பி. 19 ஆம் நூற்றாண்டில் (1700 - 1800) வரையப் பட்ட இப்பலகை ஓவியம் மராட்டியர் காலத்ததாகும். இன்று வரை இவ்வோவியம் புத்தம் புதியதாக விளங்குகிறது.

மராட்டியர் காலத்து காகிதச் சுவடி ஓவியம்

கி. பி. 1700 – 1800 ஆண்டுகளில் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மராட்டிய மன்னர்கள் ஓவியக்கலையினைப் பெரிதும் போற்றி வளர்த்தனர். அவ்வகையில் இவ்வோவியம் காகிதச் சுவடியில் வரையப்பட்டது ஆகும். இது தட்சிணமூர்த்தி உபநிஷத்தில் கூறப்பட்டபடி (படம் – 100) இவ்வோவியம் மூன்று பிரிவுகளாகக் காணப்படுகிறது. ஓவியத்தைச் சுற்றிலும் பூக்கொடிகளால் அமைக்கப் பெற்ற தடுப்பு உள்ளது.

இவ்வோவியத்தின் விளக்கத்தை வலப்பக்கத்திலிருந்து காண வேண்டும். '' ப்ரும்ம வர்த்தம் '' என்ற இடத்தில் முனிவர்கள் எல்லோரும் யாகம் செய்யும் பொருட்டு தத்தமது கரங்களில் சிருக், சமித்து முதலான பொருள்களை வைத்துக் கொண்டிருக்கையில் '' தத்வம் '' என்ற ஒன்றினை அறிய அவர்கள் மனதில் அவா எழுகின்றது. இதனை அறிய மார்க்கண்டேய மகரிஷியை முனிவர்கள் நாடி, 'மகரிஷியே, சாங்கள் என்றும் சீரஞ்சீவியாகவும், ஞான ஆனந்தமாகவும் விளங்குகின்றீர்கள், இதன் காரணத்தை (தத்வத்தை) எங்களுக்கு அருள வேண்டும்' என்று வேண்டினர். இதுவே முனிவர்கள் கூட்டம் முன்பு வேதியர் போல் உள்ள பகுதியின் விளக்கம் ஆகும்.

'மலையின் மீது நீண்டு பரந்து விளங்கும் ஆலமர நிழலில் விளங்கும் தட்சிணமூர்த்திப் பெருமானை வணங்கியமையால் இவை எல்லாவற்றையும் பெற்றேன்' என்றார். அவ்வாறே அக்னி, ஜபமாலை, புத்தகம், (சுவடி), சின்முத்திரை காட்டியருளும் தட்சிணமூர்த்திப் பெருமானை தத்தமது ஐயங்கள் நீங்கும் பொருட்டு முனிவர்கள் தொழுது நிற்கின்றனர். ஆனால் பெருமானே, மௌனியாக இருந்து அருளினர். இதனைக் கண்ட முனிவர்களும் மகாமௌனியாக இருந்து தாம் பெறவேண்டியவைகளைப் பெற்றனர் (இப்பகுதி கல்லால மரத்தில் தட்சிணமூர்த்தி முன் முனிவர்கள் கூட்டத்தின் விளக்கமாகும்).

இந்த ஓவியத்தின் மூன்றும் பகுதியாக வட்டமிட்டபடி உள்ள விசுவநாதர், விசாலாட்சி கோயில் காணப்படுகிறது. பண்டிதர் ஒருவர் தட்சிணமூர்த்திப் பெருமானது தத்துவார்த்தங்களை, திருக்கோயில் மண்டபத்தில் கூடிய மக்களுக்கு விளக்கம் தருகின்றார். இத்தகைய உபநிஷத் விளக்க ஓவியத்தை ஒரு சிறு காகிதத்தில் அடக்கியுள்ள ஓவியரின் செயல்திறன் போற்றுதலுக்குரியதாகும்.

துறைசை ஆதீனத்து தட்சிணாமூர்த்தி ஓவியம்

துறைசை ஆதீனம் என்று போற்றப்படும் இவ்வாதீனத்தில் பழம் பெருமை வாய்ந்த ஓவியங்கள் காணப்படுகின்றன. தெய்வத் திருவுருவங்கள், அடியவர்கள், ஆதீனத்தின் குருமகாசந்நிதானங்கள், ஆதீனத்தின் முனிபுங்கவர்கள், மன்னர்கள், சேவகர்கள் என்ற நிலையில் வகைப்படுத்தப்பட்டு ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்களை இவ்வாதீனத்தில் உள்ள பன்னிருகை விலாசம், கந்தவிலாசம், வேணு வனவிங்க விலாசம், ஆதீனக் குருமுதல்வர் நமசிவாய மூர்த்திகள் திருக் கோயிலின் முகமண்டபம் மகாமண்டபம், கோஷ்டப்பகுதி, பெரியபூசை மடம், வடக்கு ஒடுக்கம் முதலான இடங்களில் நீர்வண்ண ஓவியங்களையும் ஒட்டுவண்ண ஓவியங்களையும் காணலாம்.

தட்சிணாமூர்த்தி ஓவியம் :

தட்சிணாமூர்த்தி ஓவியம் ஒன்று முகமண்டபத்தின் தெற்கு மாடத்திலும், மகாமண்டபத் தென்புறச் சுவரிலும் ஒட்டு வண்ணத்தால் வரையப்பட்டுள்ளது.

தங்கநிறம் கொண்டு வரைப்பெற்ற தஞ்சை நாயக்கர் காலத்து ஓவியம் (கி. பி. 1700 – 1800), (நீளம் 2½ அடி அகலம் 2 அடி) ஒன்று இவ்வாதீனத்தில் விளங்குகிறது.

இவ்வோவியத்தின் மேற்பகுதியில் சிதம்பரம் கோயிலின் தரைவழைப் படம் (Ground plan) அமைத்து அதன் நடுவில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவுருவம் வரையப்பட்டுள்ளது.

இதற்குக் கீழ்ப்பகுதியில் திருவாடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயிலின் வரைபடமும் அமைத்து அதில் திருஞானசம்பந்தர் பொற்கிழி பெறும் காட்சி, தியாகராஜர் உருவம், கோருபாம்பிகை முதலான தலப்புராணச் செய்திகளை ஓவியமாக வடித்துள்ளனர். இதனைத் தொடர்ந்தாற்போன்று, பத்ர பீடத்தில் சுகாசனமாக ஞான தட்சிணாமூர்த்தி விளங்குகின்றார். இவரது பின் கரங்களில் உருத்திராக்க மாலையும், அக்னியும் விளங்க, முன் இரு கரங்கள் நடு மார்புப் பகுதியினைத் தொட்ட நிலையில் முன் வலக்கரம் ஞானமுத்திரையுடனும் முன் இடக்கரம் சுவடியும் கொண்டு திகழ்கின்றது. அடுத்து திருநந்தி தேவர் சனற்குமாரர், சத்தியஞானர் முதலானோர்க்கு அருளுபதேசம் காட்சி உள்ளது. அதன் பின்னர் பரஞ்சோதி முனிவர் மெய்கண்டார்க்கு உபதேசம் செய்கின்றார்.

இதற்குக் கீழ்ப்பகுதியில் மெய்கண்ட தேவர் திருவுருவம் தொடங்கி இவ்வாதீனத்தின் 14வது பட்டம் ஸ்ரீ வேளூர் சுப்பிரமணிய தேசிகர் வரையிலான (கி. பி. 1789 – 1845) திருவுருவங்கள் மிகச் சிறிய வடிவமைப்பில் காணப்படுகின்றன. இவ்வோவியம் இவ்வாதீனக் குருபரம் பரையினைக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குகின்றது

யோக சூத்ர வீராசன மூர்த்தி

இந்த நூற்றாண்டில் வரையப் பெற்ற இக் குருமூர்த்தி கல்லால மரநிழலில் பக்கவாட்டில் அமர்ந்த நிலையில் யோக சூத்திரம் (யோக பட்டையுடன்) கூடிய ஒரு வகை வீராசனத்தில் அமர்ந்துள்ளார். நெற்றிப்பட்டமும் ஜடா மண்டலத்தில் மூன்றும் பிறைச்சந்திரனும் கங்கையும் விளங்கக் காட்சி தருகின்றார். எழில் நிறைந்த (படம் – 101) திருமுகமும் அருள் ஒழுகும் ஞானப்பார்வையும், நெற்றிக் கண்ணும் வினங்க காதுகளில் குண்டலமும், குழையும் தோன்றக் காட்சிதருகின்றார். இவருக்குத் திருமார்பில் உருத்திராக்க மாலையும், கழுத்தில் கண்டா பரணமும் எழிலூட்டுகின்றன. பின் வலக்கரம் ஜபமாலையும், முன் வலக்கரம் சின்முத்திரையும் காட்டுகின்றன. பின் இடக்கரம் அனல் ஏந்தியும், முன் இடக்கரம் டோல ஹஸ்தமாகவும் அமைந்துள்ளன. வலத் தொடையின் மீது வைக்கப்பெற்ற இடது முழங்கால் (வீராசனமாக) இடுப்புடன் சேர்த்து யோக சூத்ரத்தால் (யோகபட்டை) பிணைக்கப் பட்டுள்ளது. சற்று முன்நோக்கிய வலப்பாதம் முயலகன் மீதுபதிந்துள்ளது முனிவர் ஒருவர் மட்டும் கண்ணுற்ற இக்காட்சியினைத் தனது ஞான அநுபவ நிலையினை ஏட்டில் எழுதிவிட்டு, தாமும் அவ்வாறே அமைதியுடன் காணப்படுகின்றார்.

சிற்பம், சுதை இவைகளுள் மிக எளிமையானது ஓவியம் ஒன்றுதான். வரைகோட்டு ஓவியங்களினுலேயே எல்லாவித எண்ணத்தினையும் வெளி படுத்தி விடலாம். சிற்பத்திற்கும், சுதைக்கும், கட்டட அமைப்புக்கும் ஓவியம் மூலமாகத்தான் வடிவங் கொடுத்து முழுமை பெறச் செய்யலாம். இவ்வகையில் இங்கு இடம் பெற்றுள்ள ஞானத்தின் மோனநிலையாக உள்ள தட்சிணமூர்த்திப் பெருமானின் வண்ண ஓவியங்கள் சிந்தனைக்கும் கருத்துக்கும் அப்பாற்பட்டு விளங்குதலைக் காணலாம்.

இன்னும் இதுபோன்ற இப்பெருமானின் திருவுருவம் திருக்கோயில் களில் மறைந்துள்ளன. அவைகளை வெளிக் கொணர்ந்து மக்களுக்கு வழங்குவது ஆராய்ச்சியாளர்களின் கடமையாகும்.

உத்தரகாமிகாகமத்தில்
தட்சிணமூர்த்தி ஸ்தாபனவிதி

* (51-ஆவது படலம்)

சுலோகம் 1 முதல் - 13 முடிய :

தென்முகக் கடவுளின் நிலைத்த இருப்பைச் செய்யும் கிரியையின் ஆரம்பம். அதாவது தட்சிணமூர்த்தியைப் பிரதிட்டை செய்யும் விதி முறைகளின் துவக்கம்.

தட்சிணமூர்த்தியின் பிரதிட்டையைக் கேளுங்கள் :- விளக்கம் செய்தல், பாடுதல், யோகமுறையைக் கூறல். இது போன்ற நிலையில் இருப்பவை மூன்று விதமாகும். சின் முத்திரையினல் விளக்கம் செய்தல், பாடும் படிச்செய்தல் - சரீரமும் ஜீவனும் ஒன்று பட்ட நிலையினைச் செய்வது.

ஞானமுத்திரையாவது கட்டைவிரல் ஆள்காட்டி விரல் இரண்டும் ஒன்றை ஒன்று தொட்டும், மற்றைய விரல்கள் உயர்த்திய நிலையிலும் காணப்படுவது ஆகும். இவரது கையில் வீணை இருக்கும். இது இல்லாத போது யோகநிலையினை உணர்த்தும். அதாவது வியாக்யான மூர்த்தி, வீணைமூர்த்தி இவ்விரண்டு நிலைகளிலும் இல்லாத போது யோக மூர்த்தி யாகக் காட்சி தருகின்றார்.

இவர் நான்கு கைகளையும் - மூன்றுகண்களையும் உடையவர். முல்லைப்பூ போன்ற நிறமுள்ள சந்திரனை ஒப்பவர். உடலின் நிறம்: அதி வெண்மை, பவளம் போன்ற நிறம், தங்கம் போன்ற நிறம், பச்சை வர்ணம் ஆகியவை ஆடைகள். புலித்தோலாடை, + வெள்ளை நிறநூல் ஆடை, அரைவஸ்திரம், மேல்வஸ்திரம் வெண்மையான பூணூல் ஆகியவை சிரசில் உள்ள ரோமங்கள் ஜடாபாரமாகவும், ஜடைகளே மகுடமாகவும், பட்டி காந்தத் தோடும், முண்டமாலையும் கொண்டு விளங்கும். வெள்ளெருக்கம் பூ, கொன்றைப்பூ, பாம்பு, மயில் தோகை, சந்திரன் இவைகளுடன் கங்கையும் விளங்கும். அரைஞாணுடன் மலை உச்சியில் ஆலமரத்தடியில் வீற்றிருக்கும் பெருமானர், புலித்தோலாடை அணிந்து வீராசனத்தில் வீற்றிருப்பார். இடக்காலை மடக்கி வலத்தொடை (வல முட்டிசமீபம்) மீது வைத்தும் அல்லது வலக்காலை மடக்கி இடது தொடை மீது வைத்தும் விளங்கக் கூடிய கோலமும் உண்டு.

---

* (இப்பகுதி 35 முதல் 38 பக்கங்களின் விளக்கம்).

கையில் விளங்கும் புத்தகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே, சகல சந்தேகங்களையும் போக்க வல்லவர் என்பது புலனாகும். மேல் கைகளில் அக்கினியும், பாம்பும், – அபய வரத கரங்களில் புத்தகமும் அட்சமாலையும் தாம்பரையும், நீலோத்பல மலரும் காணப்படுகின்றன. இவரது பார்வை மூக்கின் நுனியைப்பார்த்தவாறு அமையும். (சுலோகம் 14 முதல் 32 வரை சில்ப விஷயங்கள் அடங்கிய இச்செய்திகள் யாவும் இப்புத்தகத்தின் இடையே வருகின்றன.) – சுலோகம் 1 முதல் 13 முடிய விளக்கம் முடிந்தது. 33 வது சுலோகத்தின் விளக்கம் தொடர்கிறது.

சுலோகம் 33 முதல் 44 வரை :

நானவித மிருகங்கள், நானவித பாம்புகள், ரிஷி கூட்டங்கள், சித்தர்கள், வித்யாதரர்கள், தேவலோகப் பாடகர்கள் - பூதங்கள், கின்னரர்கள், புஷ்ப விருஷங்கள், மலைகள், ஆலமரத்தடியில் மணற் குன்றுகள் ஆகியவை விளங்க; மரத்தில் பல கிளைகளும் அவற்றில் பழங்களும் தோன்ற, அதில் நானவித பறவைகளும் விளங்கத் தெற்குத் திசைநோக்கி தென்முகப் பெருமானர் அருள்புரிகின்றார் (என்றவாறு,)

தட்சிணமூர்த்தியானவர் நவரத்தினங்களினாலே இழைக்கப்பட்ட ஆசனத்தில் புலித்தோல் மீது அமர்ந்து கொண்டு, கௌசிகாதி மகரிஷிகளோடும், இன்னும் அகோர சிவாசாரியார் முதலிய பதினெண்மர்களும் சூழ வீற்றிருப்பார். முனிவர்கள் பரமசிவத்தால் தீக்ஷிக்கப்பட்டு, ஆகம ஞானம் கூடியவருமான தென்திசைப் பெருமானின் உருவ பேதங்களை அறிந்து செய்ய வல்லவராவர். ஞானப்ரத தட்சிணமூர்த்தி, புக்திப்ரத தட்சிணமூர்த்தி, முக்திப்ரத தட்சிணமூர்த்தி - இவ்வகையான திருவுருவங்கள், ஆலமரம் இல்லாமலும் – பூதங்கள் மட்டும் விளங்க உட்கார்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் அமைவது உண்டு.

இம் மாதிரியான இலக்கணத்தைக் கூறி, பிறகு தட்சிணமூர்த்தி பிம்பத்தை மந்திர சுத்தி செய்து, ஸ்திர ப்ரதிட்டை செய்யும் முறையும் கூறப்படுகிறது. நாள், கோள் குறைபாடு இல்லா வேளை தன்னில் அஷ்டபந்தனம் செய்து, கும்பாபிஷேகம் செய்வது முறையாகும். சாஸ்திர சம்பிரதாயப்படி யாகசாலையில் ஓமகுண்டம் மற்றும் வேதிகை அமைத்து; அதனை அலங்காரம் செய்து, ஏக குண்டம், பஞ்ச குண்டம், நவகுண்டம் என்ற முறையில் அமைத்து, தட்சிணமூர்த்தியின் சிலா பிம்பத்திற்கு 18 சம்ஸ்காரங்கள் செய்து, ரத்ன நியாசம், கண் திறத்தல், பிம்ப சோதனம், கிராமத்தை வலம் வருதல், போஜனம் செய்வித்தல், முதலான வைகளைச் செய்வது முறையாகும்.

சுலோகம் 45 முதல் 50 வரை :

தட்சிணமூர்த்தி – மற்றும் ரிஷிகளுக்கு வேதிகையின் மேல் கும்பவர்த் தனிகளை வைத்து சயனத்தில் – சுவாமியை அமர்த்தவும், தெற்கே

பரத்துவாஜாதி ரிஷிகளுக்கும், வடக்கே-சனகாதி ரிஷிகளுக்கும் கும்பங்களை வைக்க வேண்டும். தட்சிணமூர்த்தி வர்தனி கலசம், அஷ்டோத்தியசுவர கும்பம், சப்தவிம்சதி கும்பம் இவைகளை வைத்து ஹோமம் செய்ய வேண்டும். அக்னி கார்யம் செய்தும், மூர்த்திஹோமம் செய்தும், அர்ச்சனை செய்தும், ஸ்பர்சாகுதி செய்தும் - (என்றவாறு)

சுலோகம் 51 முதல் 56 முடிய :

மூர்த்தியினிடத்தில் பூஜிக்க வேண்டிய முறைப்படி பூசித்து பின்பு ஹோமம் செய்து ஸம்யோஜன பூர்ணகுதி செய்து, திரவியாகுதி, அன்னகுதி, பழஆகுதி, சமித்தாகுதி முதலியவை செய்து, சுப முகூர்த்தத்தில்,

சுலோகம் 57 முதல் 63 முடிய :

சுவாமி கும்பத்திலிருந்து மந்திரங்களைத் தட்சிணமூர்த்திப் பெருமானின் திருமார்பில் சேர்க்கவும். அம்பிகையின் கலசத்தில் இருக்கும் மந்திரத்தை அவளது பீடத்தில் சேர்க்கவும். ரிஷி கலசத்தில் இருக்கும் மந்திரத்தை அந்தந்த ரிஷியின் மார்பகத்தில் சேர்க்கவும்

அந்தந்த கலசத்தில் உள்ள நீரை அந்தந்த மூர்த்திகளில் அபிஷேகிக்கவும். அதிகமான நைவேத்தியத்தை அர்ப்பணம் செய்யவும், ஏதேனும் விஷயம் (கார்யம்) விடுபட்டிருப்பினும் வேறு ஆகமப் படி செய்யவும்.

ஸ்ரீ கண்டாசார்யருடைய கையில் உள்ள புத்தகத்தில் 18 ஆகமங்களையும் உபாகமங்களையும் பூஜிக்கவும். நடுவில் தட்சிணமூர்த்தியையும், இருபுறங்களிலும் ரிஷிகளையும், வெளியில் பூதங்களையும் தரிசிக்க வேண்டும். யாரொருவர் ஞானமூர்த்தி பிரதிஷ்டையும், உத்ஸவமும் செய்வாரோ, நித்ய பூஜை, விசேஷபூஜை இவைகளைச் செய்வாரோ அவர் இவ்வுலகிலேயே சுகபோகங்களை அனுபவித்துப் பெருமானின் திருவடித் தாமரைப் பேற்றினைப் பெறுவர் என்பதாம்.

தட்சிணமூர்த்தி திருவடிவாழ்க

(தட்சிணமூர்த்தி பிரதிஷ்டை முற்றும்)

அஜிதாகமத்தில் தட்சிணமூர்த்திரூபம்

अजितागमः दक्षिणामूर्तिरूपम

दक्षिणामूर्तिरुच्यते । त्रिनेत्रं चतुर्भुजं चैव किञ्चित्कुञ्चितमूर्धस्य
वामोरूपरिविन्यस्तदक्षिणाङ्घ्रिं सितद्युतिम् । लम्बितं वामपादं स्याद्दक्षिणेतरयोरपि
संदंशमक्षमालां च वरदं चानलं तथा । दधत्कराग्रैर्मुनिभिर्नागोत्रैः सुसंयुतम् ॥
दक्षिणामूर्तिरूपं तु प्रोच्यतेऽन्यञ्जनार्दन । लम्बितं दक्षिणं पादं वामपादं प्रकुञ्चितम्
तस्य जानूपरिन्यस्त वामहस्त प्रकोष्टकम् शेषं पूर्ववदुद्दिष्टम् ॥

தட்சிணமூர்த்தி ரூபம்

மூன்று கண்களும் நான்கு கரங்களும், சிறிது- வளைந்து சுருண்ட கேசங்களை உடையவரும், இடது தொடைமீது வைத்துள்ள வலது காலை உடையவரும் (வீராசனத்தில் சற்றுமாறுதலாக – வலது தொடைமீது இடது தொடைபோட்டு இரண்டு பாதங்களும் கீழ்நோக்கியபடி தொங்க விட்டிருத்தல் இதுபோன்ற சுதைச் சிற்பத்தினைப் பெரும்பாலும் இராஜ கோபுரங்களின் தென்திசையில் காணலாம்) தமது கரங்களில் முறையே பாம்பு, ருத்திராக்ஷமாலை, வரதஹஸ்தம், அக்னி முதலியன கொண்டு பல முனிவர்கள் சூழ தட்சிணமூர்த்திப் பெருமான் விளங்குகின்றார்.

— அஜிதாகமம் Vol - II

திருவானைக்காப் புராணம்

மும்மலம் வேறுபட் டொழிய மெய்த்துயிர்
அம்மலர்த் தாள்நீழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியில் கதுவ நல்கிய
செம்மலை அலதுளம் சிந்தியீ தாரோ.

ஸ்ரீ கச்சியப்ப முனிவர்.

ரௌரவ ஆகமத்தில்
தட்சிணாமூர்த்தி லட்சணம்

रौरवागमः :-

(क्रियापादे पञ्चविंशः पटलः)

दक्षिणामूर्तिलक्षणम्

त्र्यक्षं चतुर्भुजं शान्तमार्जव मार्दवान्वितम् ॥

अन्योन्याङ्गितलौ द्वौ च स्फिक्पिण्डाधः प्रकल्पयेत् ।
हृदये ज्ञानमुद्रां तु ह्यभ्यन्तरमुखं करम् ॥

वरदं वामहस्तं तु कटिसूत्रोपरि न्यसेत् ।
दक्षिणे परहस्तेऽक्षमालाधृग्वामसूचिका ॥

नासाग्रं तु समीक्ष्याक्षि स्वल्पासितप्रकाशकम् ।
अपरे पार्श्वयोश्चैव जटाधाराः प्रलम्बयेत् ॥

ऋषयः पार्श्वयोश्चैव नीत्या तृप्तिं प्रकल्पिताः ।
बाह्वोश्चैव जटाभारे व्याला यानसमन्विताः ॥

मृगपक्ष्यादयश्चैव योगाभ्यासं प्रचारिताः ।
दक्षिणामूर्तिराख्याता योगमूर्तिस्तथैव हि ॥

---

1. த்ரேட்சம் சதுர்புஜம் சாந்தம்
ஆர்ஜவ மார்த்தவான் மிதம் ॥

2. அன்யோன்யாங்க்ரி தலவெள த்வோச
ஸ்பிக் பிண்டா தः பரகல்பயேத் ।
ஹ்ருதயே ஞான முத்ராம் து
ஹ்யப்யந்த்ர முகம் கரம் ॥

3. வரதம் வாமஹஸ்தம் து
கடி சூத்ரோ உபரி ந்யாசேத் ।
தக்ஷிநே பரஹஸ்தே அக்ஷமாலா
த்ருக் வாம சூத்ரிகா ।।

4. நாசாக்ரன் து சமிக்ஷ்யாக்ஷி
ஸ்வர்பாஸித ப்ரகாசம் ।
அபரே பார்ஸ்வயோ ஸ்சைவ
ஜடாதார: ப்ரலம்யேத் ।।

5. ருஷய : பார்ஸ்வயோ ஸ்சைவ
நீத்யா த்ருப்திம் ப்ரகல்பிதா ।
பாஹ்வோ ஸ்சைவ ஜடாபாரே
வ்யாளா யாக சமன்விதா : ।।

6. ம்ருக பக்ஷ்யா தய சைவ
யோகாப்யாஸம் ப்ரசாரிதா : ।
தட்சிணமூர்த்தி ராக்யாதர்
யோக மூர்த்திஸ் ததைவஹி ।।

விளக்கம் :

இங்கு ரௌரவ ஆகமத்தில் கூறப்பட்டுள்ள தட்சிணமூர்த்தி லட்சணத்தைக் காண்போம்.

மூன்று கண்களும், நான்கு கரங்களும், அமைதியான முகத் தோற்றமும் நேராக நிமிர்ந்து விளங்கும் மார்பும், சாதுவான தோற்றமும் கொண்டு விளங்கும் பெருமானின் இரண்டு பாதங்களையும் கீழ்நோக்கியபடி தொங்க விட்டபடி அமைக்கவும். வாம ஹஸ்தத்தை (இடதுகரத்தை) வரத ஹஸ்தமாக அமைத்து, கடிசூத்திரத்தின் (அரைஞாண்கயிறு) மேல் வைக்கவும். வலது கையில் ஞானமுத்திரையுடன் கூடிய அக்ஷமாலை ஏற்று இடது கரத்தைக் காட்டுவது போன்று அமைக்கவும். கருமையான பிரகாசத்தையுடைய கண்ணனது மூக்கினுடைய நுனியினைப் பார்த்துக் கொண்டும். தோளின் இரண்டு பக்கங்களிலும் ஜடைகளைத் தொங்க விட்டுக் கொண்டும், இருபக்கங்களிலும் திருப்தியுடன் கூடிய முகத் தோற்றத்துடன் விளங்கும் ரிஷிகளையும், அமைக்க வேண்டும். இரண்டு கைகளிலும் ஜடாபாரத்திலிருந்து சர்ப்பங்கள் (பாம்புகள்) போகின்ற நிலையில் அமைத்தல் வேண்டும். மிருகங்களும், பறவைகளும் யோகாப்பிய நிலையினை உடையதாக இருக்க வேண்டும். இத்தகைய அமைப்புடன் விளங்கும் பெருமானை யோக தட்சிணமூர்த்தி என்றும் கூறுவர்.



ரௌரவோத்தர ஆகமம்

रौरवोत्तरागमः

दशमः पटलः

दक्षिणामूर्तिप्रतिष्ठाविधिः

(தட்சிணமூர்த்தி பிரதிஷ்டாவிதி)

प्रतिष्ठां दक्षिणामूर्तेर्वक्ष्यामि शृणु ते गुरो ।
प्रासादं कल्पयेदुक्तस्थाने द्वारस्य दक्षिणे ॥ 1 ॥

(प्रतिमाद्रव्यम्)

शिलाभिर्वाथ लोहैर्वा प्रतिमां कारयेत्पृथक् ।

(नेत्रोन्मीलनम्)

प्रासादपुरतो बाह्ये प्रपां कुर्यात्सवेदिकाम् ॥ 2 ॥
प्रक्षाल्य प्रतिमामद्भिर्वेदिकायां निवेशयेत् ।
पूर्वाभिमुखमास्थाप्य प्रतिमां वेष्टयेत्पटैः ॥ 3 ॥
प्रपां पटैः समावेष्ट्य लोचनानि विमोचयेत् ।
लेखयित्वा यथा सूच्या पक्ष्मरेखां च मण्डलम् ॥ 4 ॥
ततः सुवर्णसूच्या तु नेत्रमन्त्रेण लेखयेत् ।
अर्पयेन्मधुसर्पिर्भ्यां हेमदूर्वाभिरक्षिषु ॥ 5 ॥
कृष्णां गां कपिलां वापि स्थापयेत्प्रतिमाग्रतः ।
पृष्टवत्सं च गोवक्त्रं गोलिङ्गेनैव दर्शयेत् ॥ 6 ॥
तदग्रे स्थण्डिलं कुर्याच्छालिभिश्चतुरङ्गुलम् ।
गोमूत्रं गोमयं क्षीरं दधि सर्पिः कुशोदकम् ॥ 7 ॥
मध्विक्षुरससारं च स्थापयित्वार्चयेत्क्रमात् ।
आपो हि ष्ठेति मन्त्रेण प्रतिमामभिषेचयेत् ॥ 8 ॥
अर्चयेद्गन्धपुष्पाद्यैर्वस्त्रैराभरणैरपि ।



தட்சிணாமூர்த்தி

(ग्रामप्रदक्षिणम्)

रथे वा शिबिकायां वा रङ्गे वारोप्य यत्नतः ॥ 9 ॥
ग्रामं वा नगरं वापि शनैः कुर्यात्प्रदक्षिणम् ।

(जलाधिवासः)

नद्यां वापि तटाके वा प्रतिमां संप्रवेशयेत् ॥ 10 ॥
जलाशये प्रपां कुर्यात्पटेनावेष्टयेत्प्रपाम् ।
कुशैश्च नववस्त्रैश्च प्रतिमां वेष्टयेत्तवः ॥ 11 ॥
प्रवेशयेत्प्रपामध्ये शाययेत्प्राचि शीर्षकम् ।
अब्लिङ्गानि जपित्वा तु पुण्याहं वाचयेत्ततः ॥ 12 ॥
एकरात्रं त्रिरात्रं वा पञ्चरात्रमथापि वा ।

(प्रतिमायाः प्रासादप्रवेशनम)

जलादुत्तार्य बिम्बं तु प्रोक्षयेत्तु कुशोदकैः ॥ 13 ॥
अर्चयेद्गन्धपुष्पाद्यैर्वस्त्रैराभरणैरपि ।
रथमारोप्य यत्नेन प्रासादं संप्रवेशयेत् ॥ 14 ॥

(मण्डपः, तत्र वेदिकाकुण्डकल्पनं च)

प्रासादस्याग्रतः कुर्यान्मण्डपं चतुरश्रकम् ।
चतुर्द्वारसमायुक्तं चतुस्तोरणभूषितम् ॥ 15 ॥
तन्मध्ये वेदिकां कुर्यान्नव भागैकभागिकाम् ।
एकहस्तसमुत्सेधां दर्पणोदरसंनिभाम् ॥ 16 ॥
वेदिकायास्ततो बाह्ये नवकुण्डं प्रकल्पयेत् ।
चतुरश्रं भवेत्प्राच्यामाग्नेय्यां योनिरेव च ॥ 17 ॥
दक्षिणे त्वर्धचन्द्रं च त्रिकोणं नैर्ऋते दिशि ।
प्रतीच्यां वर्तुलं कुण्ड वायव्यां तु षडश्रकम् ॥ 18 ॥
उदीच्यां पद्मकुण्डं तु ऐशान्यामष्टकोणकम् ।
ईशानेन्द्रकयोर्मध्ये वृत्तकुण्डं प्रकल्पयेत् ॥ 19 ॥
त्रिमेखलासमायुक्तं नाभियोनिसमन्वितम् ।

(मण्डपालंकारः)

प्रोक्षयेत्पञ्चगव्येन गोमयेनानुलेपयेत् ॥ 20 ॥

स्तम्भान्वस्त्रैः समावेष्ट्य दर्भमालाभिरावृतम् ।
मुक्तादामैर्वितानैश्च ध्वजैश्च फलपल्लवैः ॥ 21 ॥

अङ्कुरैः पूर्णकुम्भैश्च दशास्त्रैरष्टमङ्गलैः ।
मण्डपं समलंकृत्य वेष्टयेच्चित्रकैः पटैः ॥ 22 ॥

(शयनाधिवासः)

स्थण्डिलं कल्पयेत्तत्र वेदिकोपरि शालिभिः ।
शयनं कल्पयेत्तत्र ह्यण्डजाद्यैरनुक्रमात् ॥ 23 ॥

कुशैर्वस्त्रैः समाच्छाद्य प्रतिमां समलंकृताम् ।
शयने शाययेद्रात्रौ प्राक्शिरश्चोर्ध्ववक्त्रकम् ॥ 24 ॥

(कुम्भाधिवासः)

कुशैर्वस्त्रैः समाच्छाद्य ; नवकुम्भेऽधिवासयेत् ।
ससूत्रान्सोदका न्वस्त्ररत्नहेमकुशान्वितान् ॥ 25 ॥

सकूर्चान्सापिधानांश्च नवकुम्भान्प्रकल्पयेत् ।
दक्षिणे कर्णपार्श्वे तु मूर्तिकुम्भं न्यसेत्पृथक् ॥ 26 ॥

परितश्चाष्टकुम्भान्वै विन्यसेद्वेदिकोपरि ।
ईशानमूर्तिं पुरुषं शर्वं घोरं कपर्दिनम् ॥ 27 ॥

सद्यमीश्वरकं वामं शिवमावाहयेत्ततः ।
स्वलिङ्गं समुच्चार्य गन्धाद्यैरर्चयेत्क्रमात् ॥ 28 ॥

(होमः)

पालाशं खादिरं प्लक्षं शम्यश्वत्थमुदुम्बरम् ।
अपामार्गं वटं बिल्वं समित्पूर्वादिषु क्रमात् ॥ 29 ॥

समिद्घृतचरुक्षीरयववेणुप्रियङ्गवः ।
लाजसर्षपमाषाश्च तिला मधुगुलाः स्मृताः ॥ 30 ॥

अग्नेः सदनमासाद्य ह्याज्यभागान्तमाचरेत् ।
यस्यां दिशि स्थिता मूर्तिस्तस्यां कुण्डाधिपः स्मृतः ॥ 31 ॥

तस्मिन्कुण्डे समावाह्य स्वलिङ्गेनार्चयेत्क्रमात् ।
स्वलिङ्गैः समिधो हुत्वा हृदयेन घृतं हुनेत् ॥ 32 ॥

अन्नमन्त्रेन जुहुयादाप्यायेन पयो हुनेत् ।
यवं हुत्वाग्निमीलेन सावित्र्या वैणवं हुनेत् ॥ 33 ॥

प्रियङ्गवमिषे त्वेति त्र्यम्बकेणैव लाजकम् ।
सर्षपं चान्न आयेति मानस्तोकेन माषकम् ॥ 34 ॥

शं नो देव्या तिलं हुत्वा स्वलिङ्गेन मधुं हुनेत् ।
कद्रुद्रेण गुलं हुत्वा प्रत्येकं चाष्टविंशतिः ॥ 35 ॥

प्रतिद्रव्यं कुशैः स्पृष्ट्वा प्रतिमां स्पर्शयेत्ततः ।
पञ्चाङ्गैश्च षडङ्गैश्च मूर्तिनामादिबीजकैः ॥ 36 ॥

पुनराहुतिमाज्येन हुत्वाङ्गैस्तु कुशैः स्पृशेत् ।
त्रयोदशद्रव्ययुतं पूर्वाभिमुखमास्थितः ॥ 37 ॥

स्वमूर्तिलिङ्गमुच्चार्य स्रुचा पूर्णाहुतिं हुनेत् ।
कुशैः स्पृष्ट्वा तु सर्वाङ्गम्'

(रत्नन्यासः, प्रतिमास्थापनं च)

'शयनाद्बिम्बमुद्धरेत् ॥ 38 ॥

पूर्वाभिमुखमास्थाप्य गन्धादिभिरथार्चयेत् ।
प्रासादे स्थापनस्थाने नवरत्नानि विन्यसेत् ॥ 39 ॥

सुवर्णं विन्यसेत्तत्र प्रतिमां संप्रवेशयेत् ।
ईशानेनैव मन्त्रेण स्थापयेन्मूर्तिपैः सह ॥ 40 ॥

सकुशेन करेणैव कुम्भकूर्चोदकेन च ।
स्वस्वलिङ्गं समुच्चार्य प्रतिमायां न्यसेत्क्रमात् ॥ 41 ॥

पञ्चाङ्गानि षडङ्गानि स्वस्थानेषु च विन्यसेत् ।
प्रोक्ष्याभिषेचनं कृत्वा गन्धाद्यैरर्चयेत्क्रमात् ॥ 42 ॥

आचार्यं पूजयेत्तत्र वस्त्रैराभरणैरपि ।
होमकान्पूजकान्मूर्तिधारकान्परिचारकान् ॥ 43 ॥

पूजयेद्धेमवस्त्राद्यैः शिवभक्तान् द्विजानपि ।
प्रायश्चित्ताहुतिं हुत्वा स्विष्टान्तं जुहुयात्ततः ॥ 44 ॥
गुलान्नं पायसान्नं च गुलाज्यदधिभिर्दवेत् ।
ब्राह्मणान्भोजयेत्तत्र यथाविभवविस्तरैः ॥ 45 ॥

इति श्रीमद्रौरवोत्तरे प्रतिष्टातन्त्रे दक्षिणामूर्तिप्रतिष्ठाविधिर्नाम
दशमः पटलः ॥



தட்சிணமூர்த்தி பிரதிஷ்டா விதி

(10-வது படலம்)

ரௌரவோத்தர ஆகமம்

வாசலின் வலப்பக்கத்தில் (தெக்ஷிணபாகம்) பிரதிமையை வைக்க வேண்டிய இடத்தில் மேடையை அமைத்துக் கொள்ளவேண்டும்.

பிரதிமாதிரவீயம்

(உருவம் அமைத்தல்)

கற்சிலையினுலோ, உலோகத்தினுலோ தட்சிணமூர்த்தி உருவத்தினைச் செய்து கொள்ளவும்.

நேத்ரோமிலநம்

(கண்திறத்தல்)

மேடைக்கு எதிரில் வெளிப்பக்கத்தில் வேதிகையோடு கூடிய பிரபை ஒன்று அமைக்கவும்.

பிரதிமையை ஜலத்தினுல் சுத்தம் செய்து வேதிகையில் வைக்கவும். கிழக்கு முகமாக வைத்து (பூர்வாபி முகம்) வஸ்திரத்தைச் சிலையின்மீது சுற்றவும். பிரபையையும் வஸ்திரத்தினுல் சுற்றி கண்களைத் திறக்கவும். ஊசியினுல் கண்களின் ரப்பட்டையையும், மண்ட லத்தையும் (கண்களின் முன்பகுதி) எழுதிப் பிறகு,

தங்க ஊசியினுல் கண் மண்டலத்தின் நடுவில் கண்ணை அமைக்கவும். தங்க அருகம்புல்லால் கண்களில் தேனையும் நெய்யையும் வைக்கவும்,

கருமையான பசுவையோ, கபில நிறமுடைய பசுவையோ திருவுரு வத்திற்கு முன்பாகப், பின்பாகத்தையும், கன்றின் பின்பாகத்தையும், பசுவின் முகத்தையும், பசுவின் முழுவடிவத்தையும் காண்பிக்கவும்,

அதன் முன்பு நான்கு அங்குல உயரம் உள்ளதாகத் தான்யத்தைப் பரப்பவும் கோமயம், கோஜலம், பால், தயிர், நெய், தர்ப்பையின் ஜலம், (குசோதகம்), தேன், கருப்பஞ்சாறு முதலானவற்றை வைத்து வரிசையாக அதற்குரிய பூசையினைச் செய்யவும், சந்தனம், புஷ்பம், வஸ்திரம், ஆபரணம் முதலானவற்றை வைத்துப் பூசிக்கவும்,

கிராமபிரதக்ஷணம்

(கிராம வலம் வருதல்)

ரதத்திலோ, பல்லக்கிலோ, மஞ்சத்திலோ வைத்து கிராமத்தையோ நகரத்தையோ மெதுவாகப் பிரதக்ஷணம் செய்யவும்.

ஜலாதிவாசம்

(நீரில்வைத்தல்)

நதியிலோ, குளத்திலோ. பிரதிமையைப் பிரவேசம் செய்க. நீர் நிலையில் பிரதிமையை வைக்க ஒரு பிரபையை அமைக்கவும். பிரதிமையைத் தர்ப்பையினாலும், புதிய வஸ்திரத்தினாலும் சுற்றவும். பிரபையின் நடுவில் – கிழக்குப் பக்கத்தில் தலையினை வைத்துப் படுக்கையாக வைக்கவும்.

அப்லிங்காதி " எனும் மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு புண்யாக வாசனம் செய்யவும். ஓரிரவோ, மூன்று இரவுகளோ, ஐந்து இரவுகளோ ஜலாதி வாசம் செய்து வைக்கவும்.

ப்ரதிமாதியா : ப்ராசாதுப்ரவேஷணம்

நீர் நிலையிலிருந்து எடுத்துத்தர்ப்பை ஜலத்தால் பிம்பத்தை ப்ரோக்ஷிக்கவும். சந்தனம், புஷ்பம் முதலியவைகளாலும், ஆடை ஆபரணங்களாலும் அலங்கரித்துப் பூஜிக்கவும். அவர்க்குரிய ரதத்தில் எழுந்தருளச் செய்து பிம்பம் வைக்கவேண்டிய இடத்தினை அடைவிக்கவும்.

மண்டப : தத்ர வேதிகா குண்டகல்ப நம்ச

மேடைக்கு எதிரில் சம அளவு உள்ள மண்டபம் அமைக்கவும். நான்கு துவாரத்தை உடைதாகவும், நான்கு வாயிற்படிகளை உடைய தாகவும் உள்ள மண்டபத்தை (யாகசாலை) அமைக்கவும். மண்டபத்தின் மத்தியில் வேதிகையை அமைக்கவும். ஒன்பதில் ஒரு பாகமுடையதாக வேதிகையை அமைக்கவும். வேதிகைக்கு முன்னால் நவ குண்டங்களை அமைக்கவும். கிழக்குப் பாகத்தில் சதுரகுண்டமும். அக்னி மூலையில் த்ரிகோண குண்டமும், மேற்கில் வ்ருத்தகுண்டமும், வாயுமூலையில் ஷட்கோண குண்டமும், வடக்கில் பத்மகுண்டமும், ஈசான மூலையில் எண்கோண குண்டமும், ஈசான மூலைக்கும் கிழக்குத் திக்குக்கும் நடுவில் வ்ருத்தகுண்டமும் அமைக்கவும். நாபி, யோனி, மேகலா யுக்தமாக ஹோம குண்டங்களை அமைக்கவும்.

மண்டப அலங்காரம்

முதலில் பஞ்சகவ்யத்தினால் ப்ரோக்ஷணம் செய்யவும். சாணத்தினால் அவ்விடத்தினை மெழுகவும். அதில் உள்ள தூண்களை வஸ்திரத்தினால் சுற்றவும். தர்ப்பையை மாலையாகச் செய்து சுற்றவும். முத்து மாலைகளால் விதானங்களை அமைக்கவும். மண்டபத்தைக் கொடிகளாலும், பழவர்க்கங்களாலும், துளிர்களாலும் அலங்கரிக்கவும் முளைவந்த தான்யங்களாலும் பூர்ணகும்பங்களாலும், தசாயுதங்கள், அஷ்டமங்கலப் பொருள்கள் முதலானவற்றாலும் மண்டபத்தை அலங்கரித்து சித்திரங்கள் எழுதின வஸ்திரங்களால் சுற்றி வைக்கவும்.

சயனாதி வாசம்

வேதிகையின் மேலே தான்யங்களைப் பரப்பிவைக்கவும், பரப்பிய இடத்தினைத் தர்ப்பையினாலும், வஸ்திரத்திரத்தினாலும் மூடி, நன்முக அலங்கரிக்கப் பெற்ற பிரதிமையைத் தலை – கிழக்காகவும், முகம் மேல் நோக்கிப் பார்த்தவாறும் இரவில் சயனத்தில் வைக்கவும்.

சூர்பாதி வாசம்

தர்ப்பை, வஸ்திரம் இவைகளால் மூடி – நவகும்பத்தில் சுவாமியினை வாசம் செய்விக்கவும் நூல் சுற்றியதும், நீர் நிரம்பியதும், வஸ்திரம், ரத்னங்கள், தங்கம், தர்ப்பை இவைகளோடு கூடியதும், கூர்ச்சத்தோடு கூடியதும் ஆகிய ஒன்பது புதிய கும்பங்களை அமைத்து வலக்காது பக்கத்தில் மூர்த்தி கும்பத்தைத் தனியாக வைக்கவும். நான்கு பக்கங்களிலும், எட்டு கும்பங்களையும் வேதிகையின் மேல் வைக்கவும். ஈசானமூர்த்தி, தத்புருஷமூர்த்தி, சர்வமூர்த்தி, அகோரமூர்த்தி, கபர்திமூர்த்தி, சத்யோஜாதர், வாம மூர்த்தி, சிவமூர்த்தி முதலானவர்களைத் தனித்தனியே ஆவாஹனம் செய்யவும். மேற்கூறிய மூர்த்திகளுக்குரிய மந்திரங்களைக் கூறி சந்தனம் முதலானவைகளால் பூஜைகளைச் செய்யவும்.

ஹோமம்

புரசு, கருங்காலி, இச்சி, வன்னி, அரசு, அத்தி, நாயுருவி, ஆல், வில்வம், முதலான சமித்துகள் – நெய், ஹவிஸ், பால், எவை, மூங்கில் முதலியனவும் – பொரி, கடுகு, உளுந்து, எள், தேன், வெல்லம் ஆகியவைகளையும் கிரமமாக ஹோமம் செய்யவும்.

அக்னி இடத்திற்கு வந்து, எந்தத் திசையில் மூர்த்தியானது இருக்கின்றதோ அந்தத்திசையில் விளங்குபவரை குண்டாதிபதியாக (அக்னி காரியம் செய்பவர்) நினைக்கவும். அந்தக் குண்டத்தில் அதிபதியை ஆவாஹனம் செய்து அவர்க்குரிய பூஜையினைச் செய்யவும். அந்தந்த மூர்த்திக்குரிய பெயர்களைச் சொல்லி சமித்துக்களால் ஹோமம் செய்யவும். " ஹிருதய " என்று தொடங்கும் மந்திரத்தால் நெய் ஹோமம் செய்ய வேண்டும். " ஹவிசை " ஹோமம் செய்யும் போது " அன்னம் அன்னேன " என்று தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி ஹோமம் செய்யவும். " ஆப்யாயஸ்வ என்று தொடங்கும் மந்திரத்தினால் பாலை, ஹோமம் செய்யவும். யவம் என்ற தான்யத்தை " அக்னிமேதோக " என்று தொடங்கும் மந்திரத்தால் ஹோமம் செய்து விட்டு, காயத்ரி மந்திரத்தினால் " மூங்கில் அரிசியையும் ", " ப்ரியங்கு " என்ற கொடிவகை தான்யத்தை " இஷேத்வா " என்று தொடங்கும் மந்திரத்தினாலும், " திரியம்பக " என்று தொடங்கும் மந்திரத்தால் பொரியையும், " அக்ந ஆயாஹி " என்ற மந்திரத்தினால் கடுகையும், " மாநஸ்தோ கே நா " என்று தொடங்கும் மந்திரத்தால் உளுந்தையும், சந்தோ தேவி " என்று தொடங்கும் மந்திரத்தால் எள்ளையும் ஹோமம் செய்து விட்டு, " மதுவாதா " என்று

தொடங்கும் மந்திரத்தால் தேனை ஹோமம் செய்யவும்; " கத்ருதோ "என்று தொடங்கும் மந்திரத்தால் வெல்லத்தையும் - இப்படியாக ஒவ்வொன்றையும் இருபத்தெட்டு முறைகள் ஹோமம் செய்யவும். ஒவ்வொரு திரவியத்தையும் தர்ப்பையினால் தொட்டு பிரதிமையை ஸ்பரிசிக்கவும். பஞ்சாங்கங்களாலும் (9வது சுலோகத்தின்படி), ஷடங்கத்தினாலும் (22-வது சுலோகத்தின்படி) மூர்த்தி மந்திரத்தினாலும் சிருக்கினால் ஹோமம் செய்யவும்.

ரத்னன்யாசம் - ப்ரதிமாஸ்தாபனம்

சயனத்திலிருந்து பிம்பத்தை எடுத்து, அதனைக் கிழக்கு முகமாக நிறுத்தி, சந்தனம் முதலானவைகளால் பூஜை செய்யவும். எந்த இடத்தில் சுவாமியை வைக்க இருக்கின்றீரோ அவ்விடத்தில் நவரத்தனங்களையும், தங்கத்தையும் வைக்கவும். அவ்விடத்தில் பிரதிமையைக் கொண்டு சேர்க்கவும். " ஈசான என்று தொடங்கும் மந்திரத்தினால் ரிஷிகளோடு கூட ஸ்தாபிக்கவும். கையில் தர்ப்பையுடன் கும்பத்திலிருக்கக் கூடிய கூர்ச்ச நீரை " ஸ்வஸ்வலிங்க " என்று தொடங்கும் மந்திரத்தை உச்சரித்து பிரதிமையில் கூர்ச்சத்தால் வைக்கவும். ஐந்து அங்கங்களினாலும், ஆறு அங்கங்களினாலும் (சுலோகம் 9, 11, 21, 22 ன்படி) வைக்கவும். கும்ப நீரை ப்ரோக்ஷித்தும், அபிஷேகம் செய்தும், கந்த புஷ்பங்களினால் பூசிக்கவும். ப்ரதான ஆச்சார்யர்க்கு வஸ்திரங்கள் மற்றும் ஆபரணங்கள் அளித்து மரியாதை செய்யவும். மற்றவர்களான ஹோமம் செய்தவர்கள், பூஜை செய்தவர்கள், மூர்த்திப் ப்ரதிமையைத் தூக்கி வந்தவர்கள், பரிசாரகர்கள் முதலானோர்களுக்கு வஸ்திரங்கள் முதலியன கொடுத்தும், தரிசிக்க வந்த சிவபக்தர்களுக்கும், அந்தணர்களுக்கும் பிரசாதம் கொடுக்கவும்.

பின்னர் ப்ராயச்சித்த ஆஹுதியைச் செய்து " த்விஷ்டகருதே " என்று முடியும் மந்திரத்தால் ஹோமம் செய்யவும். சர்க்கரைப் பொங்கல், பர்யசன்னம் (பாலில் வெந்த அன்னம்) இவைகளில் வெல்லம், நெய், தயிர் சேர்த்து நைவேத்யம் செய்யவும் அவரவர்களின் சக்திக்கேற்ப அன்னம்பாலித்தல் செய்யவும்.



திருக்கோளப் புராணம்

மாலினேன் மலரோன் மைந்தர் நால்வர்க்கும்
சீலமாம் அத்து விதந்தெ ளிந்திட
பாலின் நெய்யென எங்கும் பரந்துங்கல்
ஆலின் மேவும் அடிகளை வாழ்த்துவாம்.

— வேலாயுத தேசிக சுவாமிகள்.

தட்சிணாமூர்த்தி உபநிஷத்

யன்மௌன வ்யாக்யயா மௌனி படலம் க்ஷணமாத்ரதஹ ।
மஹா மௌன பதம் யாதி சஹிமே பரமா கதிஹி ॥

ஓம் சஹன வவது இதி சாந்தி :

(எந்த பரம்பொருளே மௌனமாக இருந்து, விரிவுரையினை மௌன மாக அருளியதோ, அதைக் கண்ணுற்ற முனிவர்களின் கூட்டம் மகா மௌனத்தை அடைந்தார்களோ அந்தப் பரம்பொருளே எனக்கு அருள வேண்டும். '' சஹன வவது '' என்ற தைத்ரிய உபநிஷத் வாக்கியமானது மாணவர்களுக்கு, குரு உபதேசம் செய்கின்ற காலத்தில் குருவும் மாணவருமாக, இந்த மந்திரத்தைச் சொல்லிப்பாடத்தை ஆரம்பிப்பது பழங்கால மரபு ஆகும்)

ஓம் ப்ரும்மா வர்த்தே, மஹா பாண்டித வடமூலே, மஹா சத்ராய, சமேதா மஹர்ஷய : ஸௌணகாதஸ்தே ஹ, சமித்பானய ஸ்தத்த்வ ஜிக்ஞாஸவோ, மார்க்கண்டேயம், சிரஞ்சீவினம் உபசமேத்ய பப்ரசுஹ கேநத்வம் சிரஞ்ஜீவஸ்ஸி, கேநவா ஆனந்தம் அநுபவஸி, இதி. பரம ரஹஸ்ய சிவ தத்வ ஞானேந இதி, ஸ ஹோ வாச.

ஹிங் தத் பரம ரஹஸ்ய, சிவதத்வ ஞானம். தத்ர கோ தேவ : கே மந்த்ரா : கோ ஜப : கா முத்ரா । கா நிஷ்டா । கிம் தத்ஞான சாதனம் । க : பரிகர ; । கோ பலி : க : கால : கிம் தத்ஸ்தானம் இதி ।

'' ப்ரும்மவர்த்தம் '' என்ற இடத்தில் முனிவர்கள் எல்லோரும் ஆலமரத்தின் கீழ் யாகம் நடத்த வேண்டி தத்தமது கரங்களில் சமித் முதலான ஹோம திரவியங்களை வைத்துக் கொண்டு '' தத்வம் '' என்ற ஒன்றினை அறிய ஆவலாக இருக்கும் சமயத்தில். யார் இந்த தத்வத்தை நமக்கு அறிவிக்க வல்லார் என்று முனிவர்கள் மந்தியில் வினு எழுகின்றது. இதற்கு முறையாகவும் உசிதமாகவும் அறிவிக்கின்றவர் மார்க்கண்டேய மகரிஷியே ஆவார் என அறிந்து, முனிவர்கள் எல்லோரும் மார்கண்டேய மகரிஷியிடம் தத்தமது ஐயங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர்முன் ' ரிஷிப் பெருமானே தாங்கள் எப்போதும் சந்தோஷத்துடனும் சிரஞ்சீவி யாகவும் விளங்குவதற்குக் காரணத்தை எங்களுக்கு நல்கியருள வேண்டும்' என்று முனிவர்கள் விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

அதற்கு மார்கண்டேய மகரிஷி கூறும்போது, மிக, மிக ரகஸ்யமான சிவதத்துவத்தை அறிந்தமையால்தான் என்றார். பின்னர் முனிவர்கள் அந்த சிவதத்துவ ரகசியம் என்றால் என்ன என்று மீண்டும் வினவின

எழுப்பினர். மேலும் அதற்குத் தேவதை யார்? மந்திரங்கள் யாவை? ஜபம் எதுவாகும்? என்ன முத்திரை? நிஷ்டை யாது? தத்வஞானம் சாதனம் யாது? அதற்கு உபாயம் என்ன? அதற்குரிய பலி யாது? காலம் யாது? தத்ஸ்தானம் எது? என்ற வினாக்களையும் முனிவர்கள் எழுப்பினர்கள்.

ஸஹோவாச, ஏன தக்ஷிணமூகக : சிவ :

அபரோக்ஷிக்ருத : பவதி, தது பரம

ரஹஸ்ய சிவ தத்வஞானம்

பரமேஸ்வரன் சாட்சாத்காரமாக இல்லாமல், அபரோட்சமாக தக்ஷிணபி முகமாக இருக்கின்றாரோ, அந்தநிலைதான் பரமரஹஸ்ய சிவதத்வஞானம் ஆகும்.

ய : சர்வோப ரமே சர்வகாலே
சர்வானு ஆத்மனி உபசம்க்ருதிய
ஸ்வாத் மானந்தமுகே மோததே
ப்ரகாச தேவா ச தேவ :
அத்ரய தே மந்த்ர ரகஸ்ய சுலோகா
பவந்தி, மேதா தக்ஷிணமூர்த்தி மந்த்ரஸ்ய
ப்ரும்மா ரிஷி : காயத்ரி சந்த ; தேவாதா
தக்ஷிணஸ்ய : மந்த்ரேண அங்கந்யாஸக :
ஓம் ஆதௌ நம உச்சார்ய ததவ்
பகவதே பவம் ll தக்ஷிணேதிபதம் பஸ்ஸாத்
மூர்த்தயே பதம் முத்ரேத் (1)

அஸ்மத்சப்தம் சதுர்த்யன்தம் மேதாம் ப்ரக்ஞாம் பதம் வதேத் l சமுச்சார்ய தத : வாயூ பீஜம் ச்சம் ச தத : படேத் l அக்னிஜாயாம் ததஸ்வேஷ சதுர்விம்ஷாட்சரோ மநு : ll (2)

எவர் எல்லாம் அடங்கியிருக்கும் காலத்தில் எல்லாவற்றையும் தமது ஆத்மாவில் அடக்கிக் கொண்டு சுவாத் மானந்தத்தில் ஆனந்தப் படுகிறாரோ ப்ரகாசமாக வீற்றிருக்கின்றாரோ அவர்தான் தேவதை. அதற்கு மந்த்ர ரகஸ்ய ஸ்லோகங்கள் இவைகளே மேதா தட்சிணமூர்த்தி மந்திரத்திற்கு பிரும்மா ரிஷியாவார், காயத்ரி சந்தஸ், தேவதா தக்ஷிணமுகர், தட்சிணமூர்த்தி மந்திரத்தால் அங்கந்யாசம் செய்க " ஓம் நமோ பகவதே தக்ஷிணமூர்த்தியே l மஹ்யம் மேதாம் ப்ரக்ஞாம், ச்சம் l பிறகு ஸ்வாஹ : என்று சொல்லவும்.

தியானம் 1

ஸ்படிக ரஜதவர்ணம் மௌளக்திகிம் அக்ஷமாலாம் அமிர்த கலச வித்யாம் ஞான முத்ராம் கராக்ரே 1 ததத்முரக கட்சியம் சந்த்ரஸுடம் த்ரி நேத்ரம் விதுருத விவித பூஷம் தக்ஷிணமூர்த்திமீடே ll (3)

மந்த்ரண்யாச :

ஆதௌ வேதாதி முச்சார்ய ஸ்வராத்யம் ச விஸர்க்கஹம் 1 பஞ்சார்னம் ததவ்உத்ருத்ய அந்தரம் சர்விசர்க்சஹம் 1 அந்தே சமுத்ரேத்ராம் மனுரேஷ நவாக்ஷர : (4)

முத்ராம் பத்ரார்த்த தாத்ரிம் ச பரஸு ஹரினம் பாஹுபீர் பாஹு மேகம் ஜர்ன்வாசக்தம் ததாநோ புஜகா பில சமாபத்தகட்ச்யோர் வடாத : 1 ஆஸீந சந்த்ர கண்ட ப்ரதி கடித ஜடாக்ஷீரக்கௌர த்ரிநேத்ர : தத்யாத் ஆத்யாஹ : ஸுகர்த்தயை முனிபிர் அபிவிர்தோ பாவ சுத்திம் பவோ ந : (5)

மந்த்ரேன ந்யாஸ :

பிரும்ம ரிஷின்யாஸக :

தாரம் ப்ரும் நம உச்சார்யா மாயாம் வாக்பவ மேவச 1 தக்ஷிணம்பதம் உச்சார்ய தத : ஸ்யான் மூர்த்தயே பதம் ll (6)

ஞானம் தேஹி பதம், பக்ஷாத் வன்னிஜாயாம் ததோ நமேத் 1 மனுரஷ்டாதசார்னேயம் சர்வ மந்த்ரேஷு கோபித : (7)

பஸ்ம வ்யாப்பான்டுராங்க : சசிசகல தரோ ஞான முத்ராக்ஷ மாலா வீணுபுஸ்ததர் விராஜக்கரகமல தரோயோக பட்டாபிராமா : வியாக்யா பீடே நிஷன்நோ முனிவர நிகரை : ஸேவ்யமான ப்ரஸன்ன ஸவ்யால க்ருத்திவாஸா : சததம்மவது நோ தட்சிணமூர்த்தி ரீஸ : (8)

மந்த்ரேன ந்யாஸ :

ப்ரும்மரிஷி ந்யாஸ :

தாரம் பரம் ரமாபீஜம் வதேத் சாம்பசிவாய ச 1 துப்யம் சாலி ஜாயாம் ச மனுத்துவாதச வர்ண : ll (9)

வீணும் சரை : புஸ்தகம் அட்சமாலாம் விப்ரானம் அப்ராபகலம் வரதக்யம் 1 பரீந்த்ர கட்சியம் முனிபீஹி : ஷீகாதை : ஸேவ்யம் வடாத : க்ருதநீடமீடே ll (10)

விஷ்ணு ரிஷி :

அனுஷ்டுப் சந்த :

தேவதா தக்ஷிணஸ்ய :

மந்த்ரேன நியாஸ :

தாரம் நமோ பகவதே தூப்யம் வடபதம் தத : l மூலேதி பதம் மூச்சார்ய வாளிநே பதம்முத்தரேத் ll (11)

ப்ரக்யாம் மேதா பதம் பக்ஷாதாதி ஸித்திம் ததோ வதேத் l தாயிநே பதமுச்சார்ய மாயிநே நம உத்தரேத் ll (12)

வாகீஸாய த: பக்ஷான்மகா ஞானபதம் தத : வன்னிஜாயாம் ததஸ்த்துவேஷ துவார்த்ரீம்ஷத் வர்ணகோ மனு : l ஆனுஷ்டுபோ மந்த்ரராஜ : சர்வமந்த்ரோத் தமோதம : ll (13)

த்யானம் :

முத்ரா புஸ்தக வன்னி நாகவிலஸத் பாஹும் ப்ரசன்னானம் முக்தாஹார விபூஷணம் சசி கலாபாஸ்வத் க்ரீடோஜ்வலம் அக்யானு பகம் ஆதீமானுதீமா இராமர்த்தம் பவாநி பதிம் ந்யாக்ரோ தாந்த விவாளிநம் பரம் குரும் த்யாயாமி அபீஷ்டாப்தயே ll (14)

மௌநமுத்ரா சோஹ ஆதி யாவதாஸ் திதி : சனிஷ்டா பவதி ததஅபேதேந மந்த்ராம்ரேடனம் ஞானச்சாதனம் l சித்தே ததேகதானதா பரிக்கர : l அங்கசேஷ்டார்பனம் பலி : l த்ரிநிம் யாமாநி கால : துவாதஷாத் தபதம் ஸ்தானமிதி l தே ஹ புந : ச்ரத்தானுஸ்தம் ப்ரத்யூக : கதம் வாஅஸ்யோதய : l சிம் சொருடம் l கோ வாஅஸ்யோபாஸக ஆதி l

சஹோவாச :

வைராக்யனதல சம்பூர்ணே பக்தி வர்த்தி சமன்விதே l ப்ரபோத பூர்ணபாத்ரே து ஞப்தி தீபம் விலோகயேத் ll (15)

மோகான்த காரே நிஸ் ஸாரே உதேதி ஸ்வயமேவஹி வைராக்யம் அரணிம் க்ருத்வா ஞானம் க்ருத்வா து சித்ரகும் ll (16)

காடதாம் மிஸ்ரம் சம்ஸாந்த்யை கூடமர்தம் நிவேதயேத் l மோஹ பாணுஜ சங்க்ராந்தம் விவேகாக்யம் ம்ருகண்டுஜம் ll (17)

தத்வா விசார பாஸேந பத்தம் த்வைத பயாதுரம் l உஜ்ஜீவயன் நிஜாநந்தே ஸ்வஸ்வரூபேந சப்ஸ்தித ll (18)

ஷேமுஷீ தக்ஷிண ட்ராக்தோ ஸாஸ்யாபிக்ஷ்நே முகம் l தக்ஷிணபிமுக: ப்ரோக்த : சிவோசவ் ப்ரும்ம வாதிபி : ll (19)

சர்காதி சாலே பகவான் விரிஞ்சிஹி உபாஸ்யையும் சர்க்க சாமர்த்யம் ஆப்ய l துதோஷ சித்தே வாஞ்சிதார்தாம் ச லப்துவா தன்ய : ஸோபாஸ் யோபாஸ்கோ பவதி தாதா ll (20)

ய இமாம் பரம ரஹஸ்ய சிவதத்வவித்யாம் அதிதேச சர்வபாபேப்யோ முக்தோ பவதி l ய யேவம் வேத ச கைவல்யமனு பவதிதியுபநிஷத் ll ஓம் சகாநாவவது இதி சாந்தி : இதி தக்ஷிணமூர்த்தி யோபநிஷத் சமாப்தா ll

மார்க்கண்டேய மகரிஷியிடம் முனிவர்கள் மீண்டும் வினவுதலும் - பதிலும்

சௌனகாதி மகரிஷிகள் மறுபடியும் நம்பிக்கையுடன் கூட மார்கண்டேய மகரிஷியிடம் வினவினர்கள்.

இந்த சிவதத்வ பரம ஞானம் எவ்விதம் உண்டாகும்? அதன் சொரூபம் என்ன? இதன் உபாஸகர் யார்?

இதற்கு மார்கண்டேய மகரிஷி கூறுகையில் - அறிவு என்ற பாத்திரத்தில், வைராக்யம் என்ற தைலத்தை நிரப்பி, பக்தி என்றதான திரியோடு கூடியதாக ஆக்கி ஞானம் என்ற தீபத்தைக் காணவேண்டும் என்றார்.

உபயோக மற்ற அக்ஞானம் என்ற இருட்டில் வைராக்யத்தை சுரணியாக வைத்து, ஞானத்தை மந்தாக வைத்துக் கொண்டால் காகைவே இந்த ஞானம் தீ உண்டாகும்.

அக்ஞான இருளைப் போக்க மார்க்கண்டேயரிடம், வினவ வேண்டும்,

தத்துவ ஆராய்ச்சி என்ற ஒன்றினை ஆராய்ச்சி செய்யாதிருத்தல் என்ற கயிற்றால் கட்டப்பட்ட துவைத பாவத்தினால் கஷ்டப்படுகின்றவனை தன்னுடைய ஆனந்தத்தில் தங்கள் தங்கள் ரூபத்துடன் இருந்து ஆனந்திக்கச் செய்வார்.

ஞானம் என்பது தெட்சிண திசையாகும். முகத்தைப் பெருமானவர் தெற்குநோக்கி வைத்திருப்பதால் தெட்சிணாபிமுகர் - தட்சிண மூர்த்தி என்று சொல்வர்.

பிரும்ம தத்துவத்தைக் கூறும் வாக்யம் :

சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில் பிரும்ம தேவரானவர் தெட்சிணாபி முகனை உபாசித்து சிருஷ்டித்தலுக்கான சாமர்த்தியத்தை அடைந்து இஷ்டகாம்யங்களை அடைந்து சந்தோஷம் கொண்டாரோ, பாக்ய சாலி ஆனாரோ அந்த பிரும்ம தேவன் உபாசிக்க வேண்டிய தெய்வத்தை உபாசித்தவரானார்.

எவரொருவர் இந்த பரம ரஹஸ்யமான சிவதத்வ வித்தையைக் கற்றுக் கொள்கின்றாரோ, அவர் சகலவிதமான பாபங்களிலிருந்து விடுபட்டவராக ஆகிறார். இப்படி உள்ளதனை எவர் அறிகின்றாரோ அவர் மோக்ஷத்தை அனுபவிப்பர் என்று உபநிஷத் கூறுகிறது.

[தியான சுலோகங்களுக்கும் உபநிஷதுக்கும் அறிஞர்களின் வாயிலாக விளக்கம் பெறவேண்டும்,

மேதா ஸூக்தம்

மேதா தேவீ ஜுஷமாண ந ஆகாத்விச்வாசீ பத்ரா ஸுமனஸ்யமாண l
த்வயா ஜுஷ்டா ஜுஷமாண துருக்தான் ப்ருஹத்வதேம விததே ஸுவீரா:ll
த்வயா ஜுஷ்ட ருஷிர்ப்பவதி தேவி த்வயா ப்ரஹமாகத ஸ்ரீ ருதத்வயா l
த்வயா ஜுஷ்டச்சித்ரம் விந்ததே வஸுஸாநோ ஜுஷஸ்வ த்ரவிணே
ந மேதே !

மேதாம் ம இந்த்ரோ ததாது மேதாம் தேவீ ஸரஸ்வதி l
மேதாம் மே அச்வினவுபாவாதத்தாம் புஷ்கரஸ்ரஜா ll
அப்ஸராஸு ச யா மேதா கந்தர்வேஷு ச யன்மன : l
தேவீ மேதா மனுஷ்யஜா ஸா மாம மேதா ஸுரபிர் ஜுதாம் ll
ஆமாம் மேதா ஸுபிர் விச்வரூப ஹிரண்யவர்ண ஜகதீ ஜகம்யா l
ஊர்ஜஸ்வதீ பயஸா பின்வமாண ஸா மாம் மேதா ஸுப்ரதீகா ஜுஷந்தாம்ll

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.



அம்பைத்தல புராணம்

முன்னேக்கி வணங்கியவ ணிருந்தருளும்
ஒருநான்கு முனிவர்க் கெல்லாம்
பின்னேக்கி அறிதலறப் பெரிதவர்கள்
முகம்நோக்கிப் பிறக்கும் சோதி
தன்னேக்கின் நோக்காத தகைமை
யெலாம்தா ராதுதந் தளித்த
தென்னேக்கி ஓரால்கீழ் அடியிருக்கும்
தேசிகனைச் சிந்தை செய்வாம்.

— அரிகரமையர்

தட்சிணமூர்த்தி அஷ்டோத்ர நாமாவளி

ஓம் அகண்டாய நம :
அகர்த்தரே
அகாமாய
அகாரண்ய
அகேயாய
அக்ரோதாய
அசங்காய
அசஞ்சாரிணே
அசரீரிணே
அசலாய 10
அச்சுதாய
அட்சராய
அணவே
அத்வையாய
அநந்தாய
அநாதயே
அநாதிமுக்தாய
அநாவிர்தாய
அநுபரதேயே
அநூதநாய 20
அநேகரூபாய
அபயாய
அபரிச்சின்னய
அபரோட்சாய
அபேதாய
அபோக்த்ரே
அப்பிபிரமேயாய
அப்பிரவிர்த்தாய
அப்பிராண்ய
அப்ரசே 30

ஓம் அம்ருதாய நம :
அலோபாய
அவ்யாகிர்தாய
ஆதயே
ஆத்மனே
ஆனந்தரூபாய
உன்னதாய
ஏகரூபாய
காரண்ய
கூடஸ்தாய 40
சக்தியாய
சத்ரூபாய
சம்பவே
சர்வகாரண்ய
சர்வகதயாய
சர்வசமாய
சர்வக்ஞாய
சர்வதோமுகாய
சர்வர்காரராய
சர்வாதாராய 50
சர்வாதிஷ்டாடய
சர்வாத்மனே
சர்வர்பாவாய
சாட்சினே
சாந்தாய
சின்மாத்திராய
சிவாய
சுத்தாய
சுவப்ரகாசாய
சுயம்பிரகாசாய 60

(ஒவ்வொரு நாமாவளிக்குமுன் ஓம் என்றும் முடிவில் நம : என்று சேர்த்துச் சொல்லவும்)

ஓம் சுலபாய நம :
சூன்யாய
க்ஷேத்திரக்ஞாய
ஸ்தாணவே
ஞானஸ்வரூபாய
த்ருகஸ்வரூபாய
நாநாரூபாய
நிஷ்கிரியாய
நிஷ்ப்ரகிருதயே
நிஷ்ப்ரபஞ்சாய 70
நித்யமுக்தாய
நித்யானந்தாய
நித்யாய
நிர்வயாய
நிராகாராய
நிராதாராய
நிரீந்திரியாய
நிரீஸ்வராய
நிருபத்திரவாய
நிருபாய 80
நிர்க்குணாய
நிஸ்சம்பந்தாய
நிர்ஜிவாய

ஓம் நிர்த்தோஷாய நம :
நிர்பத்திராய
நிர்மலாய
நிர்லேபாய
நிர்விகல்பாய
நிர்விகாரிணே
நிர்விசேஷாய 90
நிர்விஷயாய
நிர்விருதாய
பரமானந்தாய
பரமார்த்தாய
பரிபூர்ணாய
பிரத்தியட்சாய
ப்ரஹ்மணே
புத்தாய
புராதனாய 100
மகதே
மகாசூன்யாய
மனோவாசாமகோசராய
முக்தாய
யதார்த்தவஸ்துனே
வஸ்துவே
விபவே

ஸ்ரீமத் அகண்ட பரிபூர்ணசச்சிதானந்த சோதி ஸ்வரூப குருவே
நம : 108

தட்சிணமூர்த்தி உபநிஷத்

॥ दक्षिणामूर्त्युपनिषत् ॥

यन्मौनव्याख्यया मौनिपटलं क्षणमावृतः
महामौनपदं याति स हि मे परमा गतिः ॥

ॐ सहनाववत्विति शान्तिः ॥

